போரின் படிப்பினைகள் 4

# தேசிய அரசாங்கத்தின் ஆளுகை உத்தி

## 1965-70

ஜோன் றிச்சார்ட்சன்

# போரின் படிப்பினைகள்-4

# தேசிய அரசாங்கத்தின் ஆளுகை உத்தி 1965-70

ஜோன் றிச்சார்ட்சன்

சமூக விஞ்ஞானிகள் சங்கம் (SSA)
2012

போரின் படிப்பினைகள - 04

தேசிய அரசாங்கத்தின் ஆளுகை

உத்தி 1965-70

ஜோன் றிச்சார்ட்சன் எழுதியது

தமிழில் : க.சண்முகலிங்கம்

வெளியீடு : சமூக விஞ்ஞானிகள் சங்கம் (SSA)

12, சுலைமான் டெரஸ் கொழும்பு. 05

தொலைபேசி : 2501339, 2504623

மின்னஞ்சல் : ssa@eureka.lk

வெப்தளம் : www.ssalanka.lk

அட்டை வடிவமைப்பு : நலிந்த செனிவீரத்தின

பக்க வடிவமைப்பு : த.நடராசா

அச்சு : பிக்பேர்ட் பிரிண்டேர்ஸ்

119, சுபத்திராம றோட்

கங்கொடவில நுகேகொட

ISBN : 978-955-0762-14-9

## முன்னுரை

தேசிய அரசாங்கத்தின் ஆளுகை உத்தி 1965-70 என்னும் இந்நூல் தமிழிலும் சிங்களத்திலும் ஒரே சமயத்தில் வெளியிடப்படுகிறது. 'நஞ்சூட்டப்பட்ட சுவர்க்கம்: இலங்கையின் மோதல்கள், பயங்கரவாதம், அபிவிருத்தி, சிவில்யுத்தம் என்பவற்றில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளல் (Paradise Poisoned: Learning from Conflict Terrorism and Devolopment from Srilanka's Civil wars) என்ற எனது ஆங்கில நூலை விட விரிந்த வாசகர் தளத்திற்கு செல்ல வேண்டும் என்ற நோக்கோடு இம்மொழி பெயர்ப்புகள் வெளியிடப்படுகின்றன. நஞ்சூட்டப்பட்ட சுவர்க் கம் என்ற எனது நூல் 18ம் ஆண்டுகள் உழைப்பின் அறுவடை, இந் நூலில் 1948 முதல் 1988 வரையான இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாறு, வன்முறை மோதல், பயங்கரவாதம், அபிவிருத்தி என்பனற்றிற்கு இடையிலான தொடர்புகள் என்ற கண்ணாடி ஊடான எனது பார்வையாக தரப்பட்டுள்ளது. இந்நூலின் மொழி பெயர்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்த உதவிய இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இம்மொழி பெயர்ப்புத் திட்டத்தில் என்னுடன் இணைந்து செயற்பட்ட என் நண்பரும், இத்திட்டத்தின் முகாமையாளரும், பிரதான மொழி பெயர்ப்பாளருமான ரஞ்சித் பெரேரா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது தலைமைத் துவமும் வழிகாட்டலும் இன்றி இத்திட்டம் நிறைவெய்தியிருக்காது.

இத்தொடரின் முதலாவது நூல் போரின் படிப்பினைகள் 1 இலங் கையர்களும், பிறதேசங்களின் மக்களும் தலைவர்களும் இலங்கையின் அனுபவங்களிலிருந்து பயன்பெற வேண்டும் என்றும், இங்கு நடைபெற்ற தவறுகள் மீண்டும் இடம்பெற இடமளிக்கக் கூடாது என்றும் கருதி எழுதப்பட்டதாகும். இரண்டாவது நூல் 'நமக்கு ஏன் இந்த நிலை' என்ற தலைப்பில் அமைந்தது. இந்த நூல் இலங்கையரும், வெளிநாட்ட

வர்களுமான அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களின் மூளையை 40 ஆண்டுகளுக்கு மேலாகக் குடைந்த கேள்வி ஒன்று பற்றி வாசகர் களுக்கு தெளிவுபடுத்தும் நோக்குடன் எழுதப்பட்டது. உலகின் நாடுகள் மத்தியில் அபிவிருத்தி என்ற விடயத்தில்'வெற்றிக்கதை' என்ற புகழ் பெற்ற ஒரு நாடு தொடர்ச்சியான வன்முறை மோதலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மாறியது ஏன் என்ற கேள்விக்கு விடை பகர்வதாக அமைகிறது.

இத்தொடரின் மூன்றாவது நூல் 'நம்பிக்கையின் மறுமலர்ச்சி" என்ற தலைப்பை உடையது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆட்சிவரையான காலப்பகுதியின் இலங் கையின் அரசியல் பொருளாதார-சமூக வரலாற்றினை விபரிக்கும் நான்கு நூல்களுள் முதலாவதாக அமைவது இந்நூல், இலங்கையின் முதலாவது பிரதமரான டீ.எஸ் சேனநாயக்கவின் ஆட்சி முதல் டட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன் கொத்தலாவல வரையான ஐக்கிய தேசி யக் கட்சிகளின் பிரதமர்களின் ஆட்சியை விபரிக்கின்றது. பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கவர்ச்சிமிக்க தலைவரான எஸ்.டபிள்யூ. ஆர்.டீ.பண்டார நாயக்கா ஆட்சி செய்தார் அவரைத் தொடர்ந்து வல்லமை மிக்க அவரின் மனைவி திருமதி பண்டாரநாயக்க இருதடவைகள் ஆட்சி செய்தார். நவீன காலத்தின் முதல் பெண் பிரதமர் என்ற புகழைப் பெற்ற திருமதி பண்டாரநாயக்க 1965ன் தேர்தலில் டட்லி சேனநாயக்கவின் 'தேசிய அரசாங்கம்' என்ற கூட்டணிக்கு ஆட்சிப் பொறுப்பை கையளிக்க நேர்ந்தது அத்தேர்தலில் எக்கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக்காமையால் அவர் கூட்ட ணிக்கு வழிவிட்டு ஒதுங்கினார். இந்நிகழ்வுகள் யாவும் மூன்றாவது நூலில் விபரிக்கப்பட்டன.

நான்காவது நூலின் தலைப்பு உணர்த்துவது போன்று டட்லி சேனநாயக்க பிரச்சினைக்குரிய விடயங்களான ஆளுமை, மொழி, இனங்களுக்கிடையிலான உறவுகள், பொருளாதாரத்தை முகாமை செய்தல், வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றை கையாளுவதற்கு இணக்கம், சமரச உடன்பாடு ஆகிய உத்திகளைக் கையாண்டார். போட்டியிடும் குழுக்களிற்கு ஏதேனும் ஒன்றை விட்டுக் கொடுத்து சமரசம் செய்தார். ஆனால் அவரால் எவரையும் திருப்தி செய்ய முடியவில்லை. மொழி, அதிகாரப் பரவலாக்கம், பொருளாதாரத்தை

முகாமைத்துவம் செய்தல் ஆகிய விடயங்களில் அரசியலின் முக்கிய கதாநாயகர்களுடன டட்லி சேனாநாயக்க பேரம் பேசினார். பிரச்சி னைக்குரிய இவ்விடயங்களில் அவர்களில் சிலரே திருப்தியுற்றனர். ஆனால் பிரதமர் தான் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி அமுலாக்கம் செய்வதில் உறுதியாகச் செயற்படாததாலும் தமது விருப் பத்தை காட்டாதபடியாலும் எட்டப்பட்ட உடன்பாடுகள் வலுவிழந்தன. இலங்கையின் வாக்காளர்கள் நன்கு அணிதிரட்டப்பட்டிருந்தனர். அவர் களிடையே இருந்து தோன்றிய பல குழுக்கள் தீவிர நடவடிக் கைக்கான கோரிக்கைகளை முன்வைத்தன. அவ்வேளை உறுதியான தீர்மானம் எடுக்கும் தேவை ஏற்பட்டது. டட்லி சேனநாயக்காவின் ஆளுகை உத்தி அரச அதிகாரத்தின் வரம்புகள் பற்றி அதிக அக்கறை காட்டியதால் இக்குழுக்களை திருப்திப்படுத்தும் தீர்மானங்களை எடுக்க முடியவில்லை. மத்திய பாதையின் பொருளாதாரத் திட்டமிடல் பெரும்பான்மையான இலங்கையருக்கு நேரடியான பலன்களைத் தருவதற்கு தவறியது. இதனால் மக்களின் அதிருத்தி மேலும் அதிகரித் தது. 1970ஆம் ஆண்டுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த போது பிளவுண்ட தேசிய அரசாங்கம் பாராளுமன்றத்தில் 'ஐக்கிய முன்னணி" என்ற எதிர்க் கட்சியை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இம்முன்னணி பெயரில் மட்டுமன்றி நடைமுறையிலும் ஐக்கியப்பட்டதாக இருந்தது. ஐக்கிய முன்னணி 'பொது வேலைத் திட்டம்' ஒன்றை அலங்காரச் சொற்கள் கொண்டு மக்களிற்கு எடுத்து கூறியது. மக்களின் பெயரால் பரவலான தேசிய மயமாக்கல் திட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறியது. இம் முன்னணிக்கு கவர்ச்சிமிக்க தலைமை கிடைத்தது. உறுதியான முடிவுகளை எடுக்கவும், இலங்கை மக்களின் வாழ்வை மேம்படுத்தவும், ஆட்சியைக் கொண்டியக்கவும் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையை சிறிமாவோ பண்டாராநாயக்க கொடுத்தார். தேர் தல் முடிவுகள் மிகப்பெரிய அங்கீகாரமாக அமைந்தன. இலங்கை யின் அரசியல் வரலாற்றிலேயே மிகப்பெரிய தேர்தல் வெற்றியை சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணிக் கூட்டணி பெற்றுக் கொண்டது. இலங்கையின் அரசியல் யாப்பைத் திருத்துவதற்கு வேண்டிய 2/3 பெரும்பான்மைக்கும் மேலான பலத்தைப் பெற்றுக் கொண்டது. திருமதி பண்டாரநாயக்காவும் அவரது கூட்டாளிகளும் புதிய கொள்கையை அமுல் செய்வதற்கு மட்டுமல்லாது இலங்கையின் அரசாங்கக் கட்டமைப்பை அடிப்படையிலேயே மாற்றியமைப்பதற்கும், தம் இலக்குகளை அடைவதற்கும் வல்லமையுடையவர்களாய் இருந்தனர்.

## இலங்கையின் அரசியல் - பொருளாதார சமூக வரலாறு: சில கேள்விகள்?

இலங்கையின் அரசியல்- பொருளாதார 'சமூக வரலாறு இத்தொடரின் நான்கு நூல்களில் ஆராயப்பட்டுள்ளது, என்பதை மேலே குறிப்பிட்டேன். இன்நான்கு நூல்களிலும் இந்த ஆய்வுக்கும் மதிப்பீட்டிற்கும் பொது வானதாக ஏழு கேள்விகளை முன்வைத்து அவற்றிற்கான விடைகளைக் காண முனைந்துள்ளேன்.

**1.** ஒவ்வொரு அரசாங்கமும் பதவியில் இருந்த காலத்தில் நடைபெற்ற வன்முறை அரசியலின் போக்கு எவ்வாறு இருந்தது? வன்முறை மோதல் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்தனவா? அவை தீவிரமும் செறிவும் மிக்கனவாக இருந்தனவா? முரண்பாட்டு மோதல் சம்பவங்கள் தொழிலாளர் அமைதியின்மையோடு எந்தளவிற்குத் தொடர்பு பட்டிருந்தன? தேர்தல் பிரசார நடவடிக்கைகளோடு அவற்றுக்கு உள்ள தொடர்பு என்ன? இனவாதப் பிரச்சினைகள் இலங்கையின் அரசியல் பொருளாதார வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கின அல்லவா? இவ்வாறு முக்கியம் பெற்ற இனவாதப் பிரச்சினை களுக்கும் வன்முறை மோதல்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன?

2. பிரதமர்களாகப் பதவி வகித்த தலைவர்களும், அவர்களது நெருங்கிய சகாக்களும் கடைப்பிடித்த தலைமைத்துவ மாதிரிகள் எவை? அவர்களின் அரசியல் தத்துவங்கள் யாவை? நல்லாட்சி பற்றி அவர்கள் கருத்து என்ன? அவர்கள் என்ன கொள்கைகளை எடுத்துக் கூறினார்கள்? அக்கொகைகளுக்கு மக்கள் ஆதரவை எவ்வகையில் திரட்டினார்கள்? புதிய ஜனநாயகத்தின் சவால்களை அவர்கள் எதிர் கொண்ட விதம் எத்தகையது? பிராந்திய நலன்கள், வெவ்வேறு அக் கறைக் குழுக்களின் நலன்கள் என்பவற்றிற்கிடையே சமநிலையை எவ்வழிகளில் பேணினர்? நகரம்- கிராமம், சோஷலிச ஆதரவு, சந்தை ஆதரவு, சிங்களவர்- தமிழர் என்றவாறான எதிரெதிர் முரண்களை அவர்கள் எப்படிச் சமநிலைப்படுத்தினர்? ஜனநாயக நிறுவனங்கள் ஊடாக பெரும்பான்மையின் ஆட்சியை நடத்துதல் சிறுபான்மையினரின் உரிமைகளை இவ்வாட்சியில் பாதுகாத்தல் என்ற முரண்பாட்டை எப்படித்தீர்க்க முனைந்தனர்? சிறுபான்மையினரின் இலக்குகள்

(குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் இலக்குகள்) பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தின் இலக்குகளுடன் வேறுபட்ட போது அவர்கள் என்ன நிலைப்பாட்டை எடுத்தனர்? தலைமைத்துவம் இம்முரண்பட்ட நோக்குகளை இணக்க முறையிலும், சமரசம் செய்யும் வகையிலும் அணுகியதா? அல்லது விட்டுக் கொடுக்காத உறுதியோடும், அதிகாரத் தோரணையிலும் இவற்றைக் கையாண்டதா?

**3.** அபிவிருத்தி இலக்குகள், பொருளாதாரம் பற்றிய தத்துவ நோக்கு என்பவற்றில் அரசாங்கங்களிற்கிடையே இருந்த வேறுபாடுகள் எவை? அரசாங்கங்கள் எவ்வகை பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த விரும்பின? சுகாதாரம்,கல்வி, உணவுப்பாதுகாப்பு என்ற விடயங்களில் அரசாங்கம் செய்ய வேண்டிய சேவைகள் குறித்து என்ன கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டன? சர்வதேசச் சந்தையின் ஏற்ற இறக்கங்களின் தாக்கத்திற்கும், ஏற்றுமதி நோக்கிய பொருளாதாரம் எதிர் நோக்கிய சவால்களுக்கும் அரசாங்கங்கள் எவ்வகையில் எதிர்வினையாற்றின.

**4.** இலங்கை மக்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவு செய்வதில் அரசாங்கங்கள் வெற்றி கண்டனவா? இலங்கையில் தேர்தல் பிரசாரத்தின் போது மக்களின் எதிர்பார்ப்புக்களை மிகைப்படுத்துவதும், நடைமுறையில் நிறைவேற்ற முடியாத விடயங்கள் குறித்து எதிர்பார்ப்புக்களை மக்களிடம் உருவாக்கி விடுவதும் இயல்பாக இருந்ததல்லவா? இவ்வாறான பின்னணியில் அரசாங்கங்களால் மக்களின் எதிர்பார்ப்புக்களை எந்தளவுக்கு பூர்த்தி செய்ய முடிந்தது.

**5.** அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள்,இனத்துவம்,மதம் சார்ந்த நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களின் பலங்கள் என்ன? பலவீனங்கள் யாவை? இந்நிறுவனங்கள் எவ்வாறு தம் இலக்குகளை அடைய முயன்றன? தமது இலக்குகளை அடைவதற்கு ஏற்ற முறையில் எவ்விதம் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள முயன்றன. இலங்கையின் இனம்,மதம்,மொழி, அடிப்படையிலான வேறுபாடுகள் அதனால் எழும் சிக்கல்கள் பிற்காலத்தில் மோசமடைந்தன. இவை ஆரம்ப கட்டத்தில் எவ்விதம் இருந்தன? வன்முறை மோதல்கள் தீவிரமடையாத முற்பகுதியில் இவ்வேறுபாடுகள் அரசியலில் வகித்த பாத்திரம் யாது? எவ்விதம் இவை அரசியலில் வெளிப்பட்டன?

**6.** அரசாங்கங்களும் அரசியல் தலைவர்களும் அரசாங்க அங்கீகாரத்துடனான வன்முறைகளைக் கையாள்வதில் நடந்து கொண்ட விதம் எப்படி அமைந்தது? பொலிஸ், இராணுவம் போன்ற நிறுவனங் களை எப்படி உபயோகப்படுத்தின? நாட்டில் அமைதியைப் பேண முடிந்ததா? சில குழுக்களுக்கு எதிரான கொள்கைகளை பலவந்த மாகவும், அரசாங்க அங்கீகாரத்துடனான வன்முறையுடனும் திணிக்க முயன்ற போது அரசாங்கங்களால் தங்கள் அரசியல் இலக்குகளை அடைய முடிந்ததா? ஜனநாயக நடைமுறைகள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றிற்கு என்ன நிகழ்ந்தது?

**7.** இலங்கையின் தேர்தல்களின் முடிவுகள் எதனை எடுத்துக் காட்டின? பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் போன்றில் லாமல் இலங்கையின் தேர்தல்கள் ஒழுங்காக நடைபெற்றன. இது இலங்கை குறித்த தனித்துவமான அம்சம். இத்தேர்தல்களின் முடிவுகள் கொண்டு இலங்கைத் தலைவர்களின் வெற்றி தோல்விகளை எப்படி மதிப்பிடலாம்? தலைவர்களும் அரசாங்கங்களும் தம் இலக்குகளில் வெற்றி பெற்றமை தேர்தல்கள் மூலம் வெளிப்பட்டதா?

### 'மத்திய பாதை' உத்தியை வாக்காளர் நிராகரித்தது நியாயமானதா?

1970ஆம் ஆண்டுத் தேர்தலின் போது சேனநாயக்கவின் மத்தியபாதைப் பொருளாதாரக் கொள்கைகள் ஏறக்குறைய முற்றாகவே நிராகரிக் கப்பட்டன. இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பின்னணியில் நடந்து முடிந்த வற்றை திரும்பிப் பார்க்கையில் சேனநாயக்கவின் மத்திய பாதைக் கொள்கை இன்று சாதகமான நோக்கில் அணுகப்படக் கூடியது. அன்று அக்கொள்கை பலருக்கு கசப்பாக இருந்திருக்கலாம். அதிகாரப் பரவ லாக்கம், மொழிக் கொள்கை என்ற விடயங்களிலும் சேனநாயக் காவின் முயற்சிகள் பெரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அவருக்கு முன்பு பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக் கவின் சமரச உடன்பாடுகள் எவ்வாறு முறியடிக்கப்பட்டனவோ அவ் வாறே சேனநாயக்கவின் சமரச முயற்சிகளும் தோல்வியைத் தழுவின. இருந்த போதும் பண்டாரநாயக்க காலத்தில் ஏற்பட்டது போன்ற கசப்பும், கோபமும் நிறைந்த விவாதமாக இப்பிரச்சினை சேனநாயக்க காலத்தில்

உருவெடுக்கவில்லை எனலாம். தமிழ்க் கட்சிகள் 'தேசிய அரசாங் கத்தில்" இருந்து விலகிக்கொண்டன, மேலும், தமிழ் கட்சிகள் மத்தியில் ஜனநாயக ஆளுகை மீதான நம்பிக்கை குறைந்தது. டட்லி சேனநாயக்க தனது ஐந்து ஆண்டுப் பதவிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்யும் வரை தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் அவருக்கு ஆதரவை வழங்கின.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பிரதமருக்கு கிடைத்தபடியால் இன உறவுகள் தொடர்பான இன்னொரு விடயத்தில் முன்னேற்றமான நடவடிக்கைகளை அவரால் எடுக்க முடிந்தது. தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமைப் பிரச்சினையை ஒழுங்கமைத்துச் சீர்ப் படுத்தினார். திருமதி பண்டாரநாயக்க தனியான வாக்காளர் பட்டியல் என்பதை அறிமுகம் செய்து தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் பங்கேற்பை தனிமைப்படுத்தத் திட்ட மிட்டிருந்தார். தோட்டத் தொழிலாளிகளின் வாக்குரிமைப் பிரச்சினைக்கு பிரதமர் தீர்வு கண்ட படியால் கண்டிப்பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேர்தல் சமயத்தில் வாக்காளர் ஆதரவு நீண்டகாலமாகக் கிடைத்து வந்தது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலமை களில் பெரிதாக முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லையாயினும் 30 வருட கால யுத்தத்தின் அழிவுகளால் அவர்கள் பாதிக்கப்படவில்லை.

வெளிநாட்டுக் கொள்கை விடயத்தில் டட்லி சேனநாயக்க உலக அரங்கில் இலங்கையை முன்னிறுத்தும் பணிகளில் ஈடுபடாமல் தவிர்த் தார். அவர் தமக்கு முந்திய பிரதமர்களின் அணிசேராக் கொள்கை யைக் கைவிடவில்லை. அனால் நடுவுநிலையுடன் நடந்துகொண்டார். ஐக்கிய அமெரிக்காவுடன் உறவுகளை டட்லி சேனநாயக்க சீர்ப்படுத் தினார். அந்நாட்டிலிருந்தும், பிற உதவி வழங்கும் நாடுகளிலிருந்தும் உதவிகளைத் தடையின்றி பெற்றுக்கொள்ள வழிசெய்தார். பிராந்திய வல்லரசுகளான இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடையிலான சர்வதேச பிரச்சினைகள் சார்ந்த சர்ச்சைகளில் அவர் நடுவுநிலையைப் பேணி னார். அவரது ஆட்சிக்காலம் முழுமையையும் எடுத்து நோக் கினால் இந்தியாவும் சீனாவும் இலங்கையுடன் எப்போதும் உத்தம நட்புறவுகளை கொண்டிருந்தன என்ற நிலையிருக்காவிடினும் இரு நாடுகளுடனும் சுமுகமான உறவுகள் நிலவின எனலாம். தனியார் துறையின் விருத்திக்கு ஆதரவு வழங்கும் பொருளாதாரக் கொள்கையை ஐக்கிய

தேசியக் கட்சி அரசாங்கம் பின்பற்றியது. அத்தோடு பொதுத்துறையின் வளர்ச்சியிலும் அது அக்கறை செலுத்தியது. இந்திய பேராசிரியரான பீ.ஆர்.செனாய் அவர்களின் ஆலோசனையையும் பிரதமரும், ஜே.ஆர். ஜயவர்த்தனவும் கேட்டுப்பெற்றுக் கொண்டனர். அப்பேராசிரியர் அமைப் பியல் சீராக்கம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார். ஆயினும் பிரதமர் அவற்றை முழுமையாக அமுல்படுத்தாது படிப்படியான மாற்றங் களையே கொண்டுவந்தார். (பல ஆண்டுகளின் பின் ஜே.ஆர். ஜயவர்த் தன பதவிக்கு வந்த பொழுது செனாயின் ஆலோசனைகளோடு அவற் றுக்கு அப்பாலும் சென்று பொருளாதார சீர்திருத்தங்களை அவர் மேற்கொண்டார். அப்போது அவருக்கு தேர்தலில் கிடைத்த அமோக வெற்றியும் வாக்காளர் ஆணையும் இருந்தது. அத்தோடு மத்திய திட்டமிடலின் மீதான விரக்தியும் நாட்டில் பரவியிருந்தது). சேனநாயக்க ஆட்சியின் போது இலங்கையின் கைத்தொழிற் தளம் 7 மடங்காக விஸ்தரிக்கப்பட்டது. இருப்பினும் கைத்தொழிற் துறையில் காலனித்துவ பொருளாதாரத் திட்டமிடல் கால வழிமுறைகளே தொடரப்பட்டன. மேலும் பெருமபாலான தொழில்கள் கொழும்பையும், மேற்கு மாகாணத்தையும் மையமாகக் கொண்டிருந்தன. டட்லி சேனநாயக் கவின் ஆத்மீகத் திருப்திக்குரிய விடயமாக அவரின் விவசாயக் கொள் கைகள் விளங்கின. விவசாயத் துறையில் அக்காலத்தில 7 மடங்கு உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது. மகாவலி அபிவிருத்தித் திட்டம் உயர்ந்த இலக்குகளைக் கொண்டதாக இருந்தது. இத் திட்டத்தின் நிதியீட்டத்தில் அந்நிய நாடுகளின் பங்கு அதிகம் இருந்ததால் இதற்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. இதனால் இத்திட்டம் பிற்போடப் பட்டது. மீண்டும் ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆட்சியின் போது இத்திட்டம் உயிர்ப் ிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

1970ம் ஆண்டு தேர்தலில் தேசிய அரசாங்கம் தோற்கடிக்கப் பட்டதற்கான பிரதான காரணம் அதன் ஆட்சியின் போது சாதாரண மக்களுக்கு பொருளாதார நன்மைகள் சுவறவில்லை அல்லது சென்ற டையவில்லை என்பதனாலேயாகும். குறிப்பாக கல்விகற்ற புதிய பரம் பரை அரசியல் விளிப்புடையதாக இருந்தது. அவர்களின் அரசியல் விளிப்புணர்வு தேர்தல் தோல்விக்குக் காரணமாயிற்று. டட்லி சேன நாயக்க அரசாங்கம் மக்களின் குறுங்காலத் தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் நாட்டின் மீளுயிர்ப்புக்குத் தேவையான நீண்டகாலத் திட்டங்களைத் தியாகம் செய்யும் தேவையிருந்தது. உலகின் எல்லா

ஜனநாயக அரசுகளும் இவ்விதமான சவாலை எதிர்நோக்கின. தேசிய அரசாங்கத்தின் ஐந்து வருட ஆட்சியில் கூலிகள் உயரவில்லை அவை பொருளாதார வளர்ச்சி வீதத்தை விட குறைவான அளவில் இருந்நன. வேலையற்றோர் எண்ணிக்கை உயர்ந்தது, ஏழைகளைவிட பணக்காரர்களின் வருமானம் ஒப்பீட்டளவில் கூடிச் சென்றது. இலங்கை யில் எலலா அரசாங்கங்களின் கீழும் கல்வியில் துரித விருத்தி ஏற்பட்டதால் ஊழைப்பாளர் படையில் உயர் எதிர்பார்ப்புக்களுடன் சேருவோர் தொகை அதிகரித்தது. இவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழி இருக்கவில்லை. சோஷலிசம் மக்களின் சமத்துவ வேட்கையை உயர்த்தியிருந்த காலத்தில் ஐக்கிய முன்னணி தீவிர பொருளாதாரக் கட்டமைப்புச் சீர்திருத்தங்ளை முன்வைத்தது. இவை மக்களுக்கு கவர்ச்சியுடையனவாய் இருந்ததில் ஆச்சரியப் படுவதற்கில்லை.

சமகாலத்தில் கொள்கை வகுத்தல் தொடர்பான விவாதங்களில் தேசிய அரசாங்கக் காலத்தில் முக்கியமான ஓர் அம்சம் கவனத்திற்கு எடுக்கப்படுவதில்லை. நாம் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் பொழுது அக்காலத்தில் வன்முறை மோதல்கள் நாட்டில் ஏறக்குறைய இல்லாதொழிந்தது என்றே கூறலாம். டட்லி சேனநாயகவின் ஆட்சிக் காலத்திற்கு முந்திய காலப்பகுதியையும், அவரது ஆட்சிக் காலத் திற்குப் பிந்திய காலப்பகுதியையும் எடுத்து நோக்கின் 1965-70 காலத்து டன் ஒப்பிடும் போது வன்முறை மோதல்கள் உயர்வாக இருந்தன. இன்னும் காலம் கடந்து சென்ற பின் இலங்கை மக்கள் முன்னொரு காலத்தில் நிலவிய 'இயல்புநிலை" பற்றி ஏக்கத்தோடு பேசுதல் கூடும். தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்ட மாணவர் வேலைநிறுத்தப் போராட் டங்கள், தொழிலாளர் அமைதியின்மை என்பன அரசாங்கத்தால் கடுமை யான நடவடிக்கை மூலம் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. இவை தவிர வன்முறை சார்ந்த சம்பவங்கள் இடம்பெற்றமை அரிதாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழர்களிடையே உயர் சாதியினருக்கும் உயர் சாதி அல்லாதோருக்கும் இடையில் வன்முறை மோதல்கள் இடம்பெற்றன. உயர்சாதியினரின் பாராபட்சம் காட்டும் நடைமுறை களுக்கு எதிர்ப்புக் கிளம்பியது. சமுதாயத்தில் எழுந்த மோதல்கள் என்ற வகையில் இக்காலத்தில் இதுவே முக்கியமானதாகும். பிரதமர் தமிழரான முதுநிலைப் பொலிஸ் அதிகாரியை யாழ்ப்பணத்திற்கு நியமனம் செய்தார். இவ்வதிகாரி சமூகத்துடன் இறுக்கமான உறவு

களை வலுப்படுத்துவதிலும், வழமையான பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதிலும் கவனம் செலுத்தினார். தமிழர் பெரும்பான்மையாக வாழும் இடங்களிலும் பிற இடங்களிலும் பொலிஸ் படையின் அச்சுறுத்தும் பிரசன்னம் இக்காலத்தில் இருக்கவில்லை. இக்காலத்தின் இயல்பு நிலையும் இத்தகைய அச்சுறுத்தும் பிரசன்னம் காரணமாக ஏற்பட்ட ஒன்றுமல்ல, இக்காலத்தின் பாதுகாப்புப் படைகளை 'போதியளவு ஆயுதங்கள் அற்ற' 'கவனிக்கப்படாத' 'சிறிய' போன்ற அடைமொழிகளால் குறிப்பதுண்டு. இந்நூலிலும் நான் இவ்விதம் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

## டட்லி சேனநாயக்கவின் செப்பமற்ற ஆளுகை உத்தியில் இருந்து கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்கள் யாவை?

இத்தொடர் நூலில் வெளிவந்த எனது முன்னைய நூலில் 'நம்பிக்கையின் மலர்ச்சி' காலம் பற்றிக் குறிப்பிட்டேன். 'எதிர்வரும் காலத்தில் நடக்கவிருப்பதனை அறியக் கூடிய முன்னறிவிப்புகள் எவற்றையேனும் காண முடிகிறதா? என்றொரு கேள்வியையும் நான் முன்வைத்தேன். தேசிய அரசாங்கக் காலம் பற்றி நாம் கூறக் கூடியது யாதெனில் இக்காலத்தில் அத்தகைய முன்னறிவுப்புக்கள் எவற்றையும் காணவோ கேட்கவோ முடியவில்லை என்பதே.

டட்லி சேனநாயக்கவின் ஆளுகை உத்தியை நான் 'செப்பமற்றது' என்ற சொல்லால் குறிப்பிடவிரும்புகிறேன். காரணம் யாதெனில் அவர் சமரசம், விட்டுக் கொடுத்தல், பல்வேறு நலன்களை சமநிலைப்படுத்தல் போன்ற உத்திகளைத் கையாண்டதோடு தீர்மானமான முடிவு எடுக்காமல் ஊசலாடினார். தீர்மானகரமான முடிவு எடுக்கும் தலைவர்களின் பணியால் இலங்கையின் அரசியல் பொருளாதார அபிவிருத்தி வரலாற்றில் ஏற்பட்ட திருப்புமுனைகள் பற்றிக் குறிப்பிடும் போது, டட்லி சேனநாயக்கவின் பெயர் சொல்லப்படமாட்டாது என்றே கூற வேண்டும். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் மொழிக் கொள்கைகள், திருமதி பண்டாரநாயக்கவின் பொருளாதாரக் கொள்கைகள், அவரது நிலச் சீர்திருத்தம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தை அமைதி வலயமாகப் பிரகடனம் செய்தல் முதலியனவும் ஜே.ஆர் ஜயவர்த்தனவின் நிறைவேற்று ஜனாதிபதி முறை அரசியல் யாப்பு, இலங்கையின்

பொருளாதார அமைப்பியல் சீராக்கம், துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்பன இத்தகைய திருப்புமுனையான தீர்மானங் கள். டட்லி சேனநாயக்கவின் தீர்மானகரமான முடிவு என்று எதனையும் இப்பட்டிய லில் சேர்க்க முடியாது. டட்லி சேனநாயக்க தமது தந்தையார் டி.எஸ். சேனநாயக்க போன்ற மேட்டிமையான அரசியல் பாணி ஒன்றைக் கடை டிடித்தார் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுவதுண்டு. நவீனத் துவம் அடைந்து வருவதும் அரசியல் அணிச்சேர்க்கை துரிதப்படுத் துவதுமான ஒரு கட்டத்தில் இருந்த இலங்கைக்கு இத்தகைய மேட்டிமைப்பு அரசியல் பாணி 1965 காலத்தில் பொருத்தம் அற்றதாய் இருந்தது. இருப்பினும் இன்று பின்நோக்கிப் பார்க்கையில் அவரது ஆட்சிக்காலத்தில் 5ஆண்டுகள் 'இயல்பு நிலை' முக்கியமற்றதென ஒதுக்கிவிடக்கூடிய ஒருவிடயமல்ல. அக்காலத்தில் தனித்துவமான ஆளுகைப் பண்பாடு இருந்தது. இவ்வாளுகைப் பண்பாட்டின் முக்கிய அம்சங்கள் யாவை?

**1. பௌத்த சமய விழுமியங்களின் அடித்தளத்தில் அமைந்த தனிப்பட்ட நேர்மை**

டட்லி சேனநாயக்க தனிப்பட்ட நிலையில் நேர்மையைப் கடைப்பிடித்தார் பௌத்த சமய பக்தியுடையவராகவும் அரசியல் அதிகாரம் தந்த ஆடம்பரங்களில் அக்கறையற்றவராகவும் இருந்தார். இக்குணங்களால் அவர் பெரும்பான்மை இலங்கை மக்களின் ஆதரவையும் அன்பையும் பெற்றார். அவர்மீதான மதிப்பும் அன்பும் அரசியல் ரீதியில் குறை விலாது இருந்தது.

**2. ஜனநாயக கொள்கைகளிலும் சட்டத்தின் ஆட்சியிலும் நம்பிக்கையும் மதிப்பும்**

டட்லி சேனநாயக்க ஜனநாயக ஆளுகையிலும் சட்டத்தின் ஆட்சி யிலும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். தலைமைத்துவத்திலும், கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலும் அவரது வழிகாட்டித் தத்து வங்களாக இவை இருந்தன. இவற்றை மீறி அவர் செயற்பட்ட சந்தர்ப் பங்கள் குறைவு 'அவரை விமர்சித் தோர்களும் அவரின் அரசியல் எதிரிகளும் கூட இதனை ஏற்றுக் கொள்வர்.

**3. ஆயுதப்படைகளை சட்டத்தின் ஆட்சியை நடுவுநிலையாக அமுல் செய்ய உபயோகித்தலும் ஐக்கிய தேசியக் கட்சியின் கருவியாக பயன்படுத்தாமையும்**

தனது ஆட்சியின் தொடக்கத்தில் மாணவர் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு அவர் பொலிசைப் பயன்படுத்தினார். பின்னரும் இவை போன்ற ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங்களும் நடைபெற்றன. இருந்த போதும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களின் போது நடுவுநிலை பேணாது 'கைகட்டிப் பார்த்துக் கொண்டு நிற்கும்படி' பொலிசாருக்கு கட்டளையிடுதல் இடம்பெற வில்லை.

**4. பாதுகாப்புப் படைகளின் ஆட்சேர்ப்பு, பணியமர்த்துகை பதவியேற்றம் ஆகியவற்றில் சிங்கள அடையாளத்திற்கு முதன்மை அளிப்பதில் தீவிரம் காட்டாமை**

டட்லி சேனநாயக்காவின் ஆட்சியில் இனங்களுக்கிடையில் பாரபட்சமற்ற, நடுவுநிலையிலான முறையில் பாதுகாப்புப் படைகளுக்கு ஆட் சேர்த்தல், பணியமர்த்துகை, பதவியேற்றம் ஆகிய நடைமுறைகள் மீண்டும் தோற்றம் பெற்றன. தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சாதியடிப் படையில் தமிழர் சமூகத்தில் ஏற்பட்ட பிரிவினை மோதல்களை திறமையாகக் கையாண்டு அடக்கியதைப் பற்றி முன்னர் குறிப்பிட்டோம். 1970ம் ஆண்டின் பொதுத்தேர்தலின் பின் பதவிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்காவின் மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதில் கடமையில் விசுவாசமிக்க தமிழர்களான தரைப்படை, கடற்படை உத்தியோகத்தர்கள் முக்கிய பங்காற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது

**5. எதைச் செய்வது சாத்தியமோ அந்த அளவுக்கே கொள்கைத் திட்டங்களை நிறைவேற்ற முனைதல்**

டட்லி சேனநாயக்கவின் சிந்தனைப்படி அரசியல் என்பது 'சாத்திய மானவற்றை நிறைவேற்றும் கலை' ஆகும். அவர் செய்ய முடியாதன

வற்றை அரசாங்க நிறுவன அமைப்புக்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட வற்றைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படவில்லை. வெளித் தோற றத்தில் மாற்றங்கள் பயன் தருவன போலத் தோன்றலாம். சிலர் அம்மாற்றங்களைக் கோரிக் கூச்சலிடலாம். யதார்த்தவாதியான சேன நாயக்க சமுகத்தைப் பிளவுபடுத்தும் மாற்றங்களை நடைமுறைப்படுத்து வதைத் தவிர்த்தார். அத்தகைய மாற்றங்கள் சிலரின் ஆரவாரமான வெற்றிக் களியாட்டத்துக்கும் அதனால் பாதிப்பட்டவர்களின் அந்நிய மாதலுக்கும் வழிவகுக்கும் என அவர் உணர்ந்தார்.

**6. அரசியல் உரையாட்டிலும், கொள்கை நிறை வேற்றுதல் களிலும் சமரசம் என்ற நியமத்தைக் கடைப்பிடித்தல்.**

அரசியலில் சமரசம் என்பதன் பொருள் ஒரு குறிப்பிட்ட விடயத்தில் சம்மந்தப்பட்ட தரப்பினர் கோரிக்கைகள் எவற்றையாவது விட்டுக் கொடுப்பதற்கு சம்மதித்தல் ஆகும். இலங்கையில் சிவில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் இலங்கையர்கள் கடந்து போன காலத்தின் 'இயல்பு நிலை' குறித்து ஏங்கியதைப் பற்றிக் குறிப்பிட்டேன். இரண்டு சிவில் யுத்தங்களின் அழிவுகள், பரவலான மோதல்கள் என்பவற்றோடு ஒப்பிடும் போது டட்லி சேனநாயக்கவின் காலத்தின் 'இயல்பு நிலை' இலங்கையை அமைதிப் பூங்காவாக வைத்திருந்தது என்று கூறலாம்.

இயல்பு நிலை சில குறைபாடுகளைக் கொண்டது என்பதில் ஐயமில்லை.இயல்பு நிலையை அடைவதற்காக அரசியல் சமரசம், இணக்கம், பரஸ்பரம் தரப்பினரிடையே மதிப்பு ஆகியன அவசியமா யுள்ளன. இவற்றிற்காக யாவற்றையும் உள்ளடக்கிய பொது சமூகம் ஒன்றிற்குத் தேவையான சில அடிப்படை விழுமியங்களை எந்த நிலை வரினும் கைவிட முடியாது என்று சிலர் வாதிடுவர். இது உண்மை தானா? அல்லது 'இயல்புநிலை'யுடன் பௌத்த விழுமியங்கள் பொருந்தி அமைவனவா? என்ற கேள்விகளை இம் முடிவுரையின் முடிவில் எழுப்ப விரும்புகிறேன்.

**பௌத்த விழுமியங்களும் 'இயல்புநிலையும்' இவை ஒன்றோடொன்று பொருந்துவனவா?**

இவ்விடயம் பற்றிய எனது கருத்துக்களைக் கூறமுன்னர் வெளிநாட் டவர்கள் இலங்கையருக்கு வழங்கும் ஆலோசனைகள் பற்றிய எனது உறுதியான கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன் எதிர்கால இலங்கை எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர்கள் இலங்கையரே ஆகவே எனது கருத்துக்கள் உயர்வானவை விசேட மானவை என்ற எண்ணம் என்னிடம் இல்லை. இலங்கையில் வன்முறை மோதல்களிற்கும் இடையிலான தொடர்புகளைப் பற்றிய ஆழமான ஆராட்சியை நான் இருபது வருடங்களுக்கும் மேலாக மேற்கொண்டேன். இது எனது வாழ்நாளின் முன்னுரிமைப் பணிகளில் ஒன்றாக இருந்து வருகிறது. எனது முடிவுகளை நான் கற்றறிந்தவற்றை மிகுந்த பணி வோடு உங்களுடன் பகிர்ந்து கொள்வதையே நான் செய்ய விரும்பு கிறேன். இதுவே நான் செய்து வரும் பணியாகும்.

இம்மொழி பெயர்ப்புத் தொடரின் 3 வது நூலில் நான் இரண்டு முக்கிய கருத்துக்களைக் கூறினேன். முதலாவது டி.எஸ். சேனநாயக் கவின் மதச்சார்பற்ற பல்லினகுழுச் சமூகம் என்ற தொலைநோக்கு மாதிரி இன்று இலங்கையில் பிரியோசனமற்றதாகிவிட்டது என்ற கருத்தைக் கூறியிருந்தேன். இலங்கையின் ஒரு போதும் இத்தொலை நோக்கு மாதிரி நடைமுறையில் இருந்ததாகவும் கூறமுடியாது. இலங்கையில் பௌத்தம் பெற்று வந்த வகிபாகம் தனித்துவமானது: நீண்டவரலாற்றைக் கொண்டது. இதனை அபிவிருத்திக்கான மாதிரியாக வும் தேசிய இணக்கத்திற்கான வழிகாட்டியாகவும் கொள்ளலாம் எனக் கூறியிருந்தேன். இது எனது இரண்டாவது கருத்து பௌத்த சமய விழுமியங் ளின் அடிப்படையில் அமையும் மாதிரி எல்லா மக்கள் பிரிவினரையும் அரவணைத்துச் செல்வதாகவும், பாரபட்சமற்றதாகவும் இருக்க முடியும் என்றும், இலங்கை உலகிற்கு வழங்கக் கூடிய முன் மாதிரியான பாதையாக இது இருக்கும் என்றும் நான் கருதுகிறேன்.

புத்தியின் போதனைகள் வாய்மொழி மரபாக வந்தவை. இவ்வாய்மொழி மரபில் ஆயிரக்கணக்கான சொற்கள் உள்ளன. உலக வாழ்க்கையின் வெறுமை ஆழ்ந்த தியானம், எல்லா உயிர்களிடத்தும்

அருளுடமையும் இரக்கமும் ஆகிய விடயங்கள் பற்றிய தனது அடிப் படைக் கொள்கைகளை அவர் மிக நுட்பமாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்தார். பல்வேறு வகைப்பட்ட மக்களுக்கு ஏற்றவாறும் தன் கொள்கைகளைக் கௌதம புத்தர் எடுத்துக் கூறினார். இவ்வாய்மொழி மரபை ஒட்டி எழுந்த விளக்கவுரைகளும் வியாக்கியங்களும் லட்சக் கணக்கான வார்த்தைகளைக் கொண்ட நூற்தொகுதிகளாக விரிவு பெறுகின்றன. நான் கேட்க விரும்பும் கேள்வி இது தான்: 'இயல்பு நிலை' என்ற அரசியல் கருத்து டட்லி சேனநாயக்கவின் ஆளுகைத் தத்துவமாக அவரது நடைமுறைகளின் பிரதான வினைப் பொருளாக இருந்ததல்லவா? இத்தகைய "இயல்பு நிலை" பௌத்த தத்துவ மரபுடன் எந்தளவிற்குப் பொருந்துவதாக உள்ளது?

டட்லி சேனநாயக்க போற்றிய விழுமியங்களை அவர் தனது தந்தையின் தொலைநோக்கில் இருந்து பெற்றுக் கொண்டார். அது பல்லின இனக்குழுக்களின் பண்பாட்டையும் சமயச் சார்பின்மையையும் அடிப்படை யாகக் கொண்ட அரசியல் பண்பாட்டின் வழிவருவதாகும். அத்தோடு அது பிரித்தானிய அரசு மாதிரியுடன் ஒத்திசைவு உடையதும் ஆகும். ஆயினும் டட்லி சேனநாயக்க பௌத்த விழுமியங்களில் ஊறியவராகவும் பற்று உடையவராயும் இருந்தார் என்பதில் ஐயம் இல்லை. தன்னிடம் இருந்த அரசியல் பலத்தை உபயோகித்து அவர் போயா விடுமுறை என்னும் மக்கள் ஆதரவுடைய (ஆனால் பொரு ளாதார ரீதியில் பாதிப்புடைய) திட்டத்தை அமுலாக்கியதிலும், அரசாங்க நிதியை பௌத்த கோவில்களுக்கு நன்கொடையாக வழங்கி யதிலும் அவரது பௌத்த சமய ஈடுபாடு வெளிப்பட்டது. ஒட்டு மொத்த மாகப் பார்க்கும் போது அவரது கொள்கைகளும் நடைமுறைகளும் ஆளுகைப் பாணியும் இணக்கப்பாடு, சமரசம் எதிர்க் கருத்துக்களை மதித்தல் அரசாங்கத்தின் வகிபாகம் மட்டுப்படுத்தப்பட்டதே என்ற அவரது நம்பிக்கை என்பனவற்றை வெளிப்படுத்தியது. அத்தோடு அவர் ஊசலாடுபவராகவும் காணப்பட்டார். நான் எழுப்ப விருக்கும் கேள்வி இவை பௌத்த சமயக் கொள்கைகளோடு பொருந்துவனவா என்பதே.

என்னை மிகவும் கவர்ந்த பௌத்த அறிஞர்களில் தலாய்லாமா ஒருவர் அவர் பௌத்தத்தின் அடிப்படைகளை விளக்கும் நூல்களை

எழுதியுள்ளார். தனது பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர் தாம் ஒவ்வொரு நாளும் தியானத்தில் ஈடுபடுவதும், அப்போது திபெத்தியர் களைக் கொல்லும்படி தமது பாதுகாப்புப் படைகளிற்கு கட்டளையிடும் சீனாவின் அரசியல் தலைவர்களுக்காக அருள் கனிந்த இரக்கத்தோடு தாம் தியானிப்பதாகவும் எழுதியிருப்பது உள்ளத்தை தொடுவதாக உள்ளது. 17வருட காலம் சிறைவாசத்தையும் சித்திரவதையையும் அனுபவித்த பௌத்த துறவியொருவர் சீனாவின் சிறைக்கூடத்தில் இருந்து விடுதலை பெற்று வந்த பின் நீங்கள் எந்த விடயத்தை இட்டு மிகுந்த அச்சம் அடைந்தீர்கள்? 'என்ற கேள்வியை அவரிடம் கேட்டதாகவும் அதற்கு அந்நத் துறவி' 'என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருந்த சிறைக் காவலர்கள் மீது எனது அன்பையும் இரக்கத் தையும் காட்டும் எனது ஆற்றலை நான் எப்போதாவது இழந்து விடு வேனோ? என்ற அச்சமே என்னை மிகவும் வருத்தியது' என்று கூறினார். என்று தலாய்லாமா எழுதியுள்ளார். இத்துறவி போன்றவர்களே தலாய்லாமா போற்றிய உதாரண மனிதர்கள்.

இலங்கைக்கு மிகவும் பொருத்தமான பௌத்த விழுமியங்கள் எவை என்ற எனது தேடலின் போது நான் தேரவாத பௌத்தத்தின் போதனைகளில் கரிசினை செலுத்தினேன். வணக்கத்திற்குரிய நெரு கவே சந்தவிமல் மஹாதேரர் எழுதிய "முழுநிறைவான தேர்ச்சிக் கூறுகளின் பகுப்பாய்வு' (The Analysis of Perfections) என்ற நூலை நான் பிரதானமான ஆதாரமாகக் கொண்டேன். சமய பக்தி உள்ள இலங்கை நண்பன் ஒருவர் இந்நூலை எனக்கு சிபார்சு செய்தார். அவர் "பொறுமையில் முழுநிறைவான தேர்ச்சிபெறுதல' பற்றிக் கூறியிருப்பன இம் முன்னுரையின் முடிவுரையாக மேற்கோள் காட்டு வதற்கு ஏற்றதென நான் கருதுகிறேன்.

பொறுமையின் நற்பண்புகள் பற்றி ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நல்ல பண்புடையோரின் கையில் பொறுமை ஒரு ஆயுதம் போன்றது. மனிதனிடம் இருக்கும் எல்லாப் நற் பண்புகளையும் அழிக்கும் கோபத்தை, பொறுமை என்னும் ஆயுதம் கொண்டு அவர்கள் விரட்டியடிப்பர். ஆதிகாரத்தில் உள்ளவர்களுக்கு பொறுமை ஒரு அணி கலன் போன்றது. துறவிகளுக்கும் பிக்குகளிற்கும் அது சக்தி மிக்க ஒரு கருவியாகும். கடும் கோபம் என்றும் அக்னிச்சுவாலை பொறுமை

என்ற தண்ணீர் பாயும் போது தணிந்து மடிந்துவிடும். பொறுமை நடபின் பிறப்பிடம் தீய மனிதர்களின் நச்சு வார்த்தைகளுக்கு மருந்தா வதும் அதுவே. அடக்கம் எய்திய சான்றோரின் உயர் குணம் பொறுமை. அது வெறுப்பு எனும் சமுத்திரத்தின் கடற்கரை போன்றது. நரகத்தின் வாயிலை அடைக்கும் கதவு என்றும் சுவர்க்கத்திற்கான ஏணிப்படியென்றும் எல்லாவகை உயர்குணங்களின் சுவர்க்க பூமிஎன்றும் அதனை உவமிக்கலாம். அது சொல், செயல், சிந்தனை என்ற மூன்று நிலையிலும் ஒருவர் அடையக் கூடிய மிக உயர்வான நற்பண்பு.

போதிசத்துவர்கள் எனப்படுவோர் தம்மை உலகில் வாழும் மக்கள் யாவருக்கும் தாம் தந்தை போன்றவர் எனக் கருதுதல் வேண் டும். தம் பிள்ளைகளைப் போன்று அம்மக்களை அளவற்ற அன்போடு நடத்த வேண்டும. தம் மக்கள் தவறு இழைக்கும் போது போதிசத்து வர்கள் இவ்வாறு தான் சிந்திப்பார்கள், இம்மக்கள் எம் பிள்ளைகள் போன்றவர்கள், அவர்களைத் துன்பத்திலிருந்து மீட்கும் பொறுப்பு என்னு டையதே. தந்தை ஒருவர் தன் மக்கள் மீது கோபம் கொள்ள முடியுமா? நான் இவர்கள் விடும் தவறுகளை பொறுத்துக் கொள்ள வேண்டும். இம்மக்களின் தந்தையாகிய யான் அவர்கள் மீது கோபம் கொள்வது எவ்வகையில் நியாயமானது?

வணக்கத்திற்குரிய நெருகளே சந்த விமல் மஹா தேரரின் 'பிரமித்த ப்பிரகரணய' என்ற சிங்கள நூலினை ஏ.ஜி.எஸ். காரியவாசம் அவர்கள் ஆங்கிலத்தில் The Analysis of Perfections என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார். இதனை கண்டியில் உள்ள பௌத்த நூல் வெளியீட்டுச் சபை 2003ம் ஆண்டில் அச்சுப்பிரசுரித்தது,

# பொருளடக்கம்


1. முன்னுரை............................................ III-XIX

2. டட்லி சேனநாயக்கவின் மத்திய பாதை
ஒரு பயனற்ற ஆளுகை உத்தி .................. 01

3. டட்லி சேனநாயக்கவின் மத்திய பாதையும்
அதற்கான அரசியல் பதிற்குறிகளும் ............ 41

4. குறிப்புகள் ........................................ 80

5. நூற்பட்டியல் ..................................... 96

# டட்லி சேனநாயக்காவின்'மத்திய பாதை' ஒரு பயனற்ற ஆளுகை உத்தி

சுதந்திர சந்தைப் பொருளாதாரமா அல்லது மத்திய திட்டமிடல் பொருளா தாரமா வினைத்திறன்மிக்கது என்று நிபுணர்கள் விவாதித்துக் கொண்டிருந்த போதும், நடைமுறையில் அரசியல் காரணங்கள் தான் எப் பொருளாதாரக் கொள்கையைத் தேர்ந்து கொள்ளலாம் என்பதைத் தீர்மானிப்பவையாக இருந்தன. சேனநாயக்கவின் மந்திரி சபையில் அமைப்பியல் சீராக்கம் (Structural Adjustment) கொள்கையின் ஆதரவாளர்கள் இருந்தனர். மார்க் சிஸ்டுகளும் இருந்தனர். சேனநாயக்க இவ்விருசாராருக்கும் இடைப்பட்ட மத்திய பாதையைத் தேர்ந்து கொண்டார். இலங்கையின் பொருளாதாரமும், நிதி நிலையும் சீரழிந்து கெட்டுப் போகாமல் இக் கொள்கை பாதுகாத்தது. ஆனால் பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்க இக் கொள்கை உதவவில்லை.

## ஒரு 'தேசிய அரசாங்கம்'

1960க்களில் அடுத்தடுத்து மூன்று தேர்தல்கள் கடும் போட்டியாக அமைந்தன. 1965 இல் நடைபெற்ற தேர்தலில் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சி பல ஆசனங்களைக் கைப்பற்றிய போதும் பெரும்பான்மைப் பலத்தைப் பெறவில்லை. 'தேசிய அரசாங்கம்' என்ற பெயரில் பல கட்சிகளை ஒன்று சேர்த்து கூட்டணியின் பிரதமராக டட்லி சேனநாயக்க பதவி ஏற்றார். ஒரு சில ஆசனங்களால் பெரும்பான் மையை இந்த அரசாங்கம் தக்கவைத்துக் கொண்டதேனும் முழுமை யாக ஐந்து வருடங்கள் ஆட்சி செய்தது.


ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரகடனம் சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கு ஆதரவு கொடுப்பதாக அறிவித்தது. வேலையின் மைப் பிரச்சினை, ஏற்றுமதி வருமானத்தைவிட இறக்குமதி கூடிச் செல்வதால் துண்டு விழும் வர்த்தக நிலுவையும் பொருளாதாரத் தேக்க நிலையும் ஆகியவற்றைத் தீர்ப்பதற்காக 'மத்தியபாதை' என்னும் தந்திரோபாய உத்தியைத் தாம் கையாளப் போவதாக சேனநாயக்க கூறினார். மக்களுக்கான சமூக நலன்களைத் தொடர்ந்து பேணவும், கைத்தொழில்துறை மீது அரசின் கட்டுப்பாட்டை வைத்திருக்கவும்

மட்டுமல்லாமல் முதலீடுகளை ஊக்குவித்து தனியார் துறையைப் பலப்படுத்தவும் 'மத்தியபாதை' என்னும் உத்தி பயன்படும் என்று அவர் கருதினார். தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்று வதற்காக டட்லி சேனநாயக்க தமது ஆட்சிக் காலத்தில் பலதரப்பின ருடன் சமரசங்களையும் செய்து கொள்ள வேண்டி ஏற்பட்டது. எதிர் எதிரான வர்க்கங்களுடனும், இனவாதப் பிரிவுகளுடனும் இச்சமரசங் களைச் செய்து கொண்டார். பலவாறாக பிளவுண்டிருந்த இலங்கையில் அவர் இச் சமரசங்கள் மூலம் ஆட்சியைப் பிடித்து பல பின்னடைவு களுக்கு மத்தியில் குறிப்பிடத் தகுந்த வெற்றியையும் பெற்றார். இலங்கைத் தமிழர்கள் அவரது ஆட்சிக் காலத்தில் பெரும்பான்மைச் சமூகத்துடன் ஏதோ வகையில் ஒத்துப்போக முடியும் என உணரலா யினர். பொருளாதாரம் வளர்ச்சி பெற்றது. இருப்பினும் அரசாங்கத்தின் திட்டமிடலின்படி எதிர் பார்க்கப்பட்டதை விட குறைந்த வேகத்திலேயே நாட்டின் கூலி உழைப்பாளர் வகுப்பிற்கு நன்மைகள் போய்ச்சேர்ந்தன.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தேர்தலில் வெற்றி பெற்ற தற்கும் பதவி ஏற்பதற்கும் முன்னர் உள்ள காலத்தில் ஏற்பட்டது போன்ற வன்முறை மோதல் நிலை இல்லாது நாட்டில் ஒப்பீட்டளவில் அமைதி ஏற்பட்டது. அரச அங்கீகாரத்துடனான வன்முறை குறைந்தது. இருப்பினும் ஆட்சியின் மூன்றாண்டு காலம் அவசரகாலநிலை ஒழுங்குப் பிரமாணங்களின்படி நிர்வாகம் நடைபெற்றது. பாதுகாப்புப் படைகளில் அரசியல் ஊடுருவல் குறைந்தது. படையினர் செயல் திறனும் அதிகரித்தது.

டட்லி சேனநாயக்காவின் ஐந்து ஆண்டுகால ஆட்சியின் ஒப்பீட்ட ளவிலான அமைதி நிலையை எவ்வாறு விளங்கிக் கொள்வது? பாது காப்புப் படைகளில் செய்யப்பட்ட சீர்திருத்தம் ஒரு காரணம் எனலாம். அரசாங்க ஆதரவு வன்முறை-சமூகப் பிரிவினர்களின் எதிர்த்தாக்குதல் -மேலும் அதிகரித்த வன்முறை என்ற சுழல் வட்டம் செயற்பட்டுக் கொண்டிருந்ததல்லவா? இச்சுழல் வட்டம் செயல்வேகம் இழந்ததால் ஒப்பீட்டளவில் அமைதி ஏற்பட்டது என்று கூறலாமா? இராணுவத்தின் செயல் திறமையினால், ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரவாதமும், வன்முறை மோதல்களும் தவிர்க்கப்பட்டனவா? தாம் ஒறுப்புநிலைக்கு உள்ளாவதை யும், அந்நியப்பட்டுப் போவதையும் பற்றிய மக்களின் உணர்வுநிலை மாற்றத்திற்கு பொருளாதாரத்துறையில் முன்னேற்றமும், தமிழர்களோடு மேம்பட்ட உறவுகள் வளர்க்கப்பட்டதும் காரணமாக இருந்தன என்று

கூறலாமா? சிங்கள இளைஞர்களும், தமிழ் இளைஞர்களும் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகள் குறைந்திருப்பதாகவும், எதிர்கால வாய்ப் புக்கள் நன்றாக இருப்பதாகவும் உணர்ந்தார்களா? அல்லது தீவிர வாதத் தலைவர்களின் பேச்சுக்களால் கவரப்பட்டு, தமது அபிலாசை களை அடைவதற்கு நேரடி நடவடிக்கைதான் ஒரே வழி என்று இளை ஞர்கள் கருதினார்களா? இவ்வாறான கேள்விகளுக்கான விடைகள் எமக்குப் பயன்தருவதாக இருக்கும். உரு 1.1இல் 1956 முதல் 1970 வரையான காலப்பகுதியின் வன்முறை மோதல்களின் செறிவு வரை படமாக காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த காய்ச்சல் வரைபடத்தில் (Fever Chart) சேனநாயக்க ஆட்சி காலத்தில் ஒப்பீட்டளவில் வன்முறை மோதல்களின் செறிவு அவற்றின் தீவிரம் குறைந் திருப்பதைக் காண்கி றோம். இதனை விளக்குவதற்கு மேற்குறித்த கேள்விகளுக்கான பதில் கள் எமக்கு உதவும். வன்முறை மோதல்களின் செறிவு குறைந்திருப் பது உண்மையானதா? அல்லது அது ஒரு மாயை என ஒதுக்கப்பட வேண்டியதா? என்பதையும் நாம் மதிப்பிட்டு முடிவு செய்யலாம்.




உரு:1.1 வன்முறை மோதல்களின் செறிவு

இக்காலப்பகுதியில் தேசியத் தலைவர்களிடையே ஒரு நம்பிக்கை வெளிப்பட்டது. முன்னைய பத்தாண்டுகளின் இனவாத பிரிவினை அரசிய லில் இருந்தும், தேக்கமடைந்த பொருளாதார நிலையில் இருந்தும் நாட்டை மீட்டுள்ளோம் என்று அவர்கள் நம்பிக்கை கொண்டனர். வாக்காளர்கள் தமது இச்சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிப்பர் எனவும்

அவர்கள் எதிர்ப்பார்த்தனர். ஆனால் 1970 பொதுத் தேர்தல் முடிவு, இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு நடைபெற்ற பிற தேர்தல் கள் யாவற்றில் இருந்தும் வித்தியாசமானதாயிற்று. டட்லி சேனநாயக்க அரசாங்கத்தை ஒருமனதாக நிராகரிப்பதாக இத்தேர்தல் முடிவு அமைந்தது. திருமதி பண்டாரநாயக்க மீண்டும் பிரதமராயினார். தனக்குக் கிடைத்த பாராளுமன்றப் பெரும்பான்மை பலத்தை அவர் மக்களால் வழங்கப்பட்ட ஆணை என விளக்கமளித்தார். தாம் முன்பு பிரதமராக இருந்தபோது முழுமையாக நிறைவேற்ற முடியாத கொள்கைகளை மிகத் தீவிரமாக முன்னெடுத்துச் செல்வதற்கான மக்கள் ஆணை என அவர் இதனை வியாக்கியானம் செய்தார். இனங்கள் சார்ந்த இனவாதக் கொள்கை, பொருளாதாரம், சமயம், அயல்நாட்டு விவகாரம் ஆகியன தொடர்பான கொள்கைகள் என்பவற்றை மிகத்தீவிரத்துடன் செயற்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பமாகக் கருதினார். இவரது இக் கொள்கைகளே 1980க்களில் சிவில் யுத்தத்தைத் தொடக்கி வைத்தன என்பது பல அரசியல் அவதானிகளின் அபிப்பிராயமாகும். 1970 ஆம் ஆண்டில் இலங்கை மக்கள் வாக்களித்த போது இந்தக் கொள்கை களுக்காகவா தமது வாக்குகளைப் பிரயோகித்தனர்?

## வன்முறை மோதல்களுக்கு முற்றுப்புள்ளி?

1965 ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்க தேர்தல் பிரசாரத்தை மேற் கொண்ட பொழுது வர்க்க முரண்பாடுகளையும், இன முரண்பாடுகளையும் தணித்து, நாட்டின் அரசியல் வன்முறை மோதல்களை முடிவுக்கு கொண்டு வரப்போவதாக அவர் பிரசாரம் செய்தார். சட்டத்தின் ஆட்சி யையும், பொது வாழ்வில் ஒழுங்கையும் பேணுவேன் என அவர் தெரிவித்தார். உரு 1.1 இல் உள்ள காய்ச்சல் வரைபடம் மோதல் தணிப்பில் சேனநாயக்க வெற்றிகண்டார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அவரது ஐந்தாண்டு கால ஆட்சி முன்னைய பத்தாண்டு காலத்தோடு ஒப்பிடும் பொழுது கொந்தளிப்புக் குறைந்ததாகவும் அமைதியான காலமாகவும் காணப்படுகிறது.

சேனநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் வன்முறை மோதல்கள் அரசாங் கத்திற்கும் மார்க்சியச் சார்பு தொழிற்சங்கங்களிற்கும் இடை யிலான வையாகப் பெரும்பாலும் அமைந்தன. 1965இல் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது. இது மாணவர் ஆர்ப்பாட்டங்களால் எழுந்தவை. களனியா . வித்தியாலங்காரப் பல்கலைக்கழக மாணவர் தொடக்கிய

இந்தக் குழப்பம் பிற நிறுவனங்களுக்கும் பரவலாயிற்று.[1] டட்லி சேனா நாயக்க அரசியல் உள்நோக்கதுடன் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தங் கள் தொடர்பாக உறுதியான நடவடிக்கை எடுத்தார். முன்னைய பிரத மர்களை விட இவர் தொழில்துறை அமைதியின்மையைக் கட்டுப் படுத்துவதில் வெற்றி கண்டார். 1967 இன் பின்னர் மார்க்சிய தொழிற் சங்கங்களும் இலங்கை சுதந்திரக்கட்சி தொழிசங்கங்களும் சேர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக அணிதிரண்டன. எதிர்க்கட்சிகளின் ஒன்றி ணைந்த எதிர்ப்பை தீவிமாக்கி பிரதம மந்திரியை தோல்வி அடையச் செய்வது இத் தொழிற்சங்க நடவடிக்கைகயின் நோக்கமாக இருந்தது.

1968ஆம் ஆண்டின் பொது வேலை நிறுத்தம் சிறந்த உதாரண மாகும். இவ்வேலை நிறுத்தத்தால் தபால் விநியோகமும் தொடர் பாடலும் தடைப்பட்டன. போக்குவரத்தும் தடைப்பட்டது பொதுத்துறை யில் சில நிர்வாகப் பிரிவுகளின் வேலைகளும் தடைப்பட்டன. 'அத்தியா வசிய சேவைகள்' பாதிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளதாக உத்தி யோகத்தர்கள் தெரிவித்தனர். இவ்வேலை நிறுத்தம் 23 நாட்கள் நீடித்தது. மாணவர்கள் மத்தியில் குழப்பமும் அமைதியின்மையும், பொலிசார் மீது மக்கள் கூட்டத்தின் தாக்குதல்கள், சதிவேலைகள் என்பனவும் இடம் பெற்றன.


அடுத்த ஆண்டில் பலம்பொருந்திய தொழிற்சங்கமான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் (CMU) தொடர் வேலை நிறுத்தங்களை நடத்தியது. இவை முந்திய ஆண்டுகளின் வேலை நிறுத்தங்களை விடக் கூடிய பாதிப்புக்களை ஏற்படுத்தின. டட்லி சேனநாயக்கவின் ஆட்சியின் மிகக் கொந்தளிப்பான காலம் என்று இதைக் கூறலாம். 1969இல் ஐந்து மாதங்கள் நீடித்த தொழில்துறை அமைதியின்மை சிறிமா பண்டாரநாயக்கவின் ஆட்சியின் இறுதி இரண்டு வருடங்களை (1963,1964) ஒத்ததாக இருந்தது. வேலை நிறுத்தத்தைத் தொடங்கு வதற்குப் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக இருந்தன. இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் தீவிர அரசாங்க எதிர்ப்பை காட்டாத படியால் சேனநாயக்க அரசாங்கம் தலையிடுவதற்கு ஆரம்பத்தில் விரும்பவில்லை. நாட்டில் நிலவிய அமையின்மையை மேலும் அதிகரிப் பதற்கு பல்கலைக்கழங்களில் ஏற்பட்ட அமைதியின்மையும் துணை செய்தது. நான்கு பல்கலைக்கழகங்களிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலங்களைப் பொலிசார் தலையிட்டுக் கலைத்தனர். இரண்டு பல்கலைக்கழகங்கள் அமைதியைக் கொண்டுவருவதற்காக மூடப்பட்டன.

மார்ச், ஏப்ரல் மாதங்களில் மோதல் நிலை தணிவுற்றது. எனினும் மீண்டும் மே மாதத்தில் பிரச்சினைகள் தலைதூக்கின. பொதுத் தேர்தலுக்கான பிரசாரம் தொடங்கியபோது வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தன. 1970ஆம் ஆண்டுத் தேர்தல், இலங்கை வரலாற்றில் வன்முறை மிகுந்த தேர்தல்களில் இரண்டாம் இடத்தைப் பெறுவது[2] அபேட்சகர்களை கடத்திச் செல்லுதல், தாக்குதல் அரசியல் கூட்டங்களிற்கு ஆதரவாளர்களை ஏற்றிச் செல்லும் பஸ்களின் மீது கற்களை வீசுதல், குண்டுகளை வீசுதல் ஆகிய சம்பவங்கள் பல இடம் பெற்றன. கொழும்பு-மட்டக்களப்பு ரெயில் வண்டியில் குண்டுத்தாக்குதல் மேற்கொண்ட சம்பவமும் இடம் பெற்றது. தேர்தல் பிரசாரம் வன்முறைக் கலப்புடையதாக இருந்தது. எனினும் உயிர் இழப்புகள் ஏற்படும் அளவுக்கு தீவிரமானதாக இருக்கவில்லை.[3]

ஒரு 1.2 டட்லி சேனநாயக்க ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட வன்முறையை அவருக்கு முந்திய இரு பிரதமர்களின் ஆட்சிக் காலங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உதவுகிறது. சேனநாயக்க ஆட்சியில் வன்முறை மோதல்கள் குறைந்திருந்தன. அவரது தேசிய அரசாங்க காலத்தில் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் அரைப் பங்காகக் குறைந்தன[4]. தோட்டப் பகுதிகளில் இனவாத வன்முறை, தொழில் அமைதியின்மை என்பனவும் முன்னரைவிட மூன்றில் இரு பங்கு குறைந்திருந்தன. வன்முறைச் சம்பவங்களில் 3சதவீதமான சம்பவங்களில் மட்டுமே உயிரிழப்பு நிகழ்ந்தது. முன்னைய காலத்தைப் போன்றே பெரும்பான்மையான வன்முறை நிகழ்வுகள் நகரம் சார்ந்தனவாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களான தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்டனவாயும் இருந்தன.

டட்லி சேனநாயக்க ஆட்சிக் காலத்தில் சிங்களவர்-தமிழர்களிற்கு இடையிலான வன்முறை மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. தமிழர்களும் இக்காலத்தில் இனக்குழும பிரச்சினைகள் குறித்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவும் இல்லை. இது இக் காலத்தின் சிறப்பு அம்சமாகச் சுட்டிக்காட்டப்படவேண்டியது. வட பகுதியில் 1967ஆம் ஆண்டில் ஐந்து மாதங்கள் சாதி அடிப்படையிலான மோதல்கள் தொடர்ந்தன. கடுமையான சாதி அடுக்க மைவைக் கொண்ட யாழ்ப்பாணச் சமூகத்தின் உயர்சாதியினருக்கு எதிராக அடிநிலைச் சாதியினர் போராட்டம் நடத்தி

னர். இந்துக் கோவில்களிற்குள் செல்வதற்கும் பிற சலுகைகளைப் பெறுவதற்கும் சட்டம் உரிமையை வழங்கியிருப்பினும் மரபுவழி வழக்கங் களை காட்டி இவை மறுக்கப்படுவதற்கு எதிராக அடிநிலைச் சாதியினர் கிளர்ச்சி செய்தனர். இந்தப் பிரச்சினையின் போது தமிழர் ஒருவர் வடக்கில் பிரதிப் பொலிஸ் அதிபர் நாயகமாக இருந்தார்[5]. அவரின் கீழ் செயற்பட்ட பொலிசார் அடிநிலைச் சாதியினரின் காப்பாளர்களாகப் பார்க்கப்பட்டனர். ஒடுக்குமுறையில் ஈடுபடும், ஆக்கிரமிப்பு செய்யும் அரசாங்கத்தின் பொலிஸ் படையாக நோக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான



உரு:1.2 வன்முறை மோதல் சம்பவங்களின் செறிவு

சச்சரவு ஒன்று மட்டும் இடம்பெற்றது. இனங்களிற்கிடையிலான பிரச்சி னைகள் என்ற விடயத்தில் சேனநாயக்கவின் ‘மத்தியபாதை’ வெற்றி யளித்தது என்றே கூறவேண்டும்.

## தலைமைத்துவமும் ஆளுகையும்

தேர்தல் முடிவடைந்ததும் 1965 மார்ச் 23 ஆம் திகதி டட்லி சேனநாயக்க வெற்றிவாகை சூடிய வண்ணம் தனது பதவியை இராணிமாளிகைக்குச் சென்று பெற்றார் என்று கூறமுடியாது. ஏனெனில் டட்லி சேனநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க என்ற இரு போட்டியாளர்களில் எவருக்கும் தெளிவான பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கவில்லை. ஆளுநர் நாயகமாகவிருந்த வில்லியம் கோபல்லவா,‘யாரைப் பிரதமராக நியமிக்க முடிவு செய்வார் என்பது ஐயத்திற்கு இடமானதாக இருந்தது. தேர்தல்

முடிந்து இரண்டு நாட்களாக இராணி மாளிகையையும், அலரிமாளிகை யையும் சூழ்ந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் திருமதி பண்டாரநாயக்க பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும், சேனநாயக்க பதவி ஏற்பது தொடர்பாக கோபல்லாவைச் சந்திக்கச் சென்றால் அவரைத் தாக்குவோம் என்றும் கூச்சலிட்டனர்.[7] இச்சந்தர்ப்பத்தில் தமிழர் தலைவரான எஸ். ஜே.வி. செல்வநாயகம் முக்கியமான ஒருவராக மாறினார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலின் போது சிங்கள-பௌத்த தேசியவாதத்தைப் பிரசாரம் செய்தன. தேர்தல் முடிவில் பாராளுமன்ற ஆசனங்கள் இரு கட்சிகளுக்கு மிடையே சமமாகப் பிரிபட்டன. 14 ஆசனங்களைப் பெற்றிருந்த தமிழர் தலைவரின் ஆதரவு எக்கட்சி ஆட்சிக்கு வரப்போகிறது என்பதைத் தீர்மானிப்பதாக இருந்தது. திருமதி பண்டாரநாயக்கவின் ஆதரவாளர்கள் சிலர் தமிழ்த் தலைவரை தனிப் பட்ட முறையில் சந்தித்து கேட்டுக் கொண்ட போதும் செல்வநாயகம் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக் குறுதியின்படி ஆதரவு தெரிவிப்பதென்றும் சேனநாயக்கவின் உறுதி மொழிகள் கூடிய நம்பகத் தன்மை உடையன எனவும் முடிவு செய்தார்.[8]

## வன்முறை மோதல்களின் செறிவு

சேனநாயக்கவின் தேசிய அரசாங்கம் பெயரளவில் மட்டுமே 'தேசிய அரசாங்கம்' ஆக இருந்தது. இக் கூட்டணியில் ஐக்கிய தேசியக் கட்சி (66 ஆசனங்கள்) சமஷ்டி கட்சி (14 ஆசனங்கள்) தமிழ் காங்கிரஸ் (3 ஆசனங்கள்) என்பன முக்கிய பங்காளிகளாவர். கூட்டணியில் சேர்ந்த ஏனைய கட்சிகள் வெவ்வேறு கொள்கைகள் கொண்டவர்களாய் இருந்தனர். பதவிகளை பெறும் ஆசையும் திருமதி பண்டாரநாயக்க விற்கு ஆட்சி அதிகாரம் கிடைக்கக்கூடாது என்ற எண்ணமும் இக்கட்சி களை ஒன்றுபட வைத்தன[9]. தேசிய அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிங்கள பௌத்த தேசியவாதி களாகவும் முன்னைய காலத்தில் பதவிவகித்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங் கத்தின் ஆதரவாளர்களாயும் இருந்தனர்[10]. அரசாங்க ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருடன் கொள்கை வேறுபாடு ஏற்படுமிடத்து எதிர்க்கட்சியுடன் சேர்ந்து வாக்களிக்கலாம். இதே போல் கட்சிகளும் எதிர்க்கட்சிக்கு இலகுவில் மாறி விடலாம். இது பிரித்தானியாவில் நிலவிய பாராளுமன்ற மரபுகளுக்கு மாறானது. இச்சூழ்நிலையில் டட்லி சேனநாயக்கா தன்னோடு சேர்ந்தவர்கள்

பிரிந்து போய் வாக்களித்து அரசாங்கத்தை வீழ்த்துவதை தவிர்க்கும் முறையில் நடந்து கொண்டதோடு, தமிழர்களை தம்பக்கம் இழுத்துக் கொண்டது தந்திரோபாயமான ஒரு செயலாகும்.

டட்லி சேனநாயக்க தாமாகவே ஒதுங்கிக் கொள்ளும் இயல்புள்ளவர், தன்னை முன்நிறுத்தாத போக்குடையவர். அவரது தந்தை அவரை வலிந்து அரசியலுக்கு இழுத்திராவிட்டால் சட்டத்துறையில் புகுந்து பொது வாழ்வில் இருந்து ஒதுங்கியிருப்பார். அவர் விவாகம் செய்து கொள்ளவில்லை. அவருக்கு நெருங்கிய நண்பர்கள் சிலரே இருந்தனர். அவரது உறவினர்களாகிய முதிய வயதுடைய பெண்கள் சிலர் அவரது நம்பிக்கைக்கு உரியவர்களாய் இருந்தனர். வாழ்க்கையின் பிற்பகுதியில் உள நெருக்கடி ஏற்படும் வேளைகளில் அவர் குடல் புண் நோயாலும் குடல் வலியாலும் துன் புற்றார். இடைக்கிடை உளச்சோர்வு நோயும் அவரைத் தாக்கியது. ஆவரது கட்சியின் மூத்த உறுப்பினர்களான ஜே.ஆர்.ஜயவர்தன, சேர்.யோன் கொத்தலாவல ஆகியோருடன் ஒப்பிடும் பொழுது சேன நாயக்க கட்சியின் அமைப்பு வேலைகளில் அக்கறை செலுத்திய ஒருவரல்லர். இவர் இலங்கையின் அரசியல் வாழ்க்கையின் இருண்ட பகுதிக்குள் ஊடாடுவதில் நாட்டமில்லாதவராகவும் இருந்தார். அவர் உடல் ஆரோக்கியத்தோடும், உற்சாகத்தோடும் இருந்த காலத்தில் மிகச்சிறந்த பிரசாரகராகவும் பாராளுமன்ற வாதங்களில் மிகுந்த திறனை வெளிப்படுத்தியவராகவும் காணப்பட்டார். உண்மையான அரப் பணிப்புடன் நாட்டுக்குச் சேவை செய்த அரசியல் வாதிகள் சிலரில் அவரும் ஒருவர். தனது அரசியல் சகாக்களின் வேண்டுதலின் படியே அவர் அரசியலில் புகுந்தாரே அல்லாமல் அரசியல் அதிகாரத்தை அனுபவிப்பதற்காக அரசியலுக்குள் நுழை யவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அவரது சகபாடிகள் சேனநாயக்காவின் தலைமைத் துவத்தை விரும்பி ஏற்றார்கள். இதற்குக் காரணம் இலங்கை மக்கள் அவர்மீது பேரபிமானம் கொண்டிருந்த மையே. ஏனைய தலைவர்கள் போல் அல்லாமல் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வால் உந்தப்பட்டே அவர் மக்களின் ஆதரவை நாடினா ரேயல்லாமல் தனிப்பட்ட சுயலாபம் கருதியல்ல என்பதை மக்கள் அறிந்து வைத்திருந்தனர்[11].

சேனநாயக்கவிற்கு பாராளுமன்றத்தில் சிறியதொரு பெரும் பான்மை தான் இருந்தது. அத்தோடு அவரது மந்திரிசபை இன

அடிப்படையிலான பிளவைக் கொண்டதாக இருந்தது. சேனநாயக்க கட்சி ஒழுங்கமைப்பு வேலைகளில் அக்கறையற்றவராக இருந்தார். இது அவரது நிர்வாகத்திற்கு பிரச்சினைகளை தோற்றுவிக்கக் கூடியதாக இருந்தது. எனினும் அவரது நீண்ட காலக் கூட்டாளியான ஜே. ஆர். ஜயவர்தன ஒழுங்கமைப்பு வேலைகளில் திறன்வாய்ந்தவர். அவர் அரசியலில் அளவற்ற உற்சாகத்தையும், சக்தியையும் வெளிப்படுத்திய வர். அவரின் உதவி பிரதமரான சேனநாயக்கவின் குறைகளை ஈடு செய்வதாக இருந்தது. ஜே.ஆர்.ஜயவர்தன 'இராஜாங்க அமைச்சர்[12] என்ற கவர்ச்சியற்ற பெயரைக் கொண்ட அமைச்சுப் பதவியில் இருந்தா ரேனும் மந்திரி சபையில் ஆகக்கூடிய அதிகாரம் மிக்கவர்களில் இரண்டாவது இடத்தில் இருந்தார். அரசாங்க நடவடிக்கைகள் அன்றாட அலுவல்கள் அவரது பொறுப்பில் இருந்தன. சேனநாயக்க வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட வேளைகளில் ஜே. ஆர். ஜயவர்தன பதில் பிரதமராகக் கடமையாற்றினார்.

சேனநாயக்க பதவியேற்ற முதலாவது வருடத்திலே இரு அரசி யல் நெருக்கடிகள் ஏற்பட்டன. அவையிரண்டையும் அவர் திறமையுடன் கையாண்டார். முதலாவது நெருக்கடி இராணுவச் சதிப்புரட்சி முயற்சி யாகும். பிரதமர் வெளிநாடு சென்றிருந்த வேளையில் இது நடை பெற்றது. பிரதமர் தனது பயணத்தின் போது அமெரிக்காவில் அந்நிய கடன் உதவிகளைப் பேரம்பேசிப் பெறும் முயற்சியில் ஈடுபட்டார். இராணுவச் சதிமுயற்சி நான்கு ஆண்டுகளுக்கு முன்பும் திருமதி பண்டாரநாயக்கவை நீக்குவதற்காக நடைபெற்றது. இம்முறை சதிகாரர் களின் நோக்கம் முந்தியதைவிட வித்தியாசமானது. சதிமுயற்சியில் ஈடுபட்டோர் யாவரும் சிங்களவர்களாயும், பௌத்தர்களாயும் இருந்தனர். இவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களாயும் இருந்தனர். சிறலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்தபோது பதவியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களாகவோ அல்லது அக்காலத்தில் பதவி உயர்வு பெற்றவாகளாகவோ இவர்கள் இருந்தனர்[13]. 1966ஆம் வருடம் பர்மாவில் (மியன்மார்) அரிசி விளைச்சல் குறைவடைந்தது. இதனால் உலகச் சந்தையில் அரிசி விலை உயர்ந்தது. இலங்கையில் வாரத்திற்கு ஒரு ஆளுக்கு இரண்டு கிலோ அரிசி வழங்கும் திட்டம் இருந்தது. அதில் கைவைப்பது ஆபத்தானது. அரிசி மானியத்தை வெட்டி, அதனால் கிடைக்கும் நிதியை அபிவிருத்தித் தேவைக்கு பயன்படுத்த வேண்டும் என்று ஜே.ஆர்.ஜயவர்தன ஆலோசனை கூறினார். ஆனால்

டட்லி சேனநாயக்க இவ்வாலோசனையை ஏற்கவில்லை. அவருக்கு 1953ஆம் ஆண்டு அனுபவம் ஞாபகத்திற்கு வந்தது. அக்காலத்தில் அவர் பிரதமராக இருந்த போது அரிசி மாணியத்தை நீக்கும் ஆலோசனையை ஏற்றார். அதன் விளைவாக நாட்டில் பெரும் எதிப்பியக்கம் எதிர்க்கட்சிகளால் தொடக்கப்பட்டது. சேனநாயக்க அப்போது உடல் நலமற்றும் இருந்தார். அவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்து சேர். ஜோன் கொத்தலாவல பிரதமராக வழி விட்டார். ஆதலால் இந்தத் தடவை மந்திரி சபையின் ஏனைய உறுப்பி னர்கள் சிலரின் ஆலோசனையுடன் அரசியல் சமரசமான முடிவு ஒன்றை எடுத்தார். அரிசி மாணியத்தை அரைவாசியாகக் குறைத்தார். இதன் மூலம் இறக்குமதியைக் கணிசமான அளவு குறைத்து நிலைமையைச் சரி செய்ய முடிந்தது. அவரது முடிவு குறுகிய காலத்திற்கு பிரச்சினையைத் தீர்ப்பதாகவும் இருந்தது. அரிசி மானியத்தை அரைவாசியாகக் குறைத்தபோதும் இலவசமாக வழங்கிய அரிசியைத் தொடர்ந்து வழங்குவதற்கு சம்மதித்தார்[14].

## மொழி உரிமைகளை வழங்குவதிலும் அதிகாரப்பரவலாக்கலிலும் உறுதிமொழிகளைக் காப்பாற்றத் தவறுதல்.

மொழி,அதிகாரப்பரவலாக்கல்,சமயம்,கல்வி ஆகிய விடயங்கள் தொடர்பான பிரச்சினைகள் ஒன்று சேர்த்து சிறுபான்மை உரிமைகள் என்று அழைக்கப்பட்டன. சிறுபான்மை உரிமைகள் மிகவும் சிக்கலான அரசியல் பிரச்சினையாக இருந்து வந்தது. மொழி தொடர்பாக சேனநாயக்க சமஷ்டிக் கட்சியுடன் தேர்தலுக்கு முன்னர் ஓர் உடன்பாட்டிற்கு வந்திருந்தார். அதன்படி தமிழின் உபயோகத்தை பரவலாக்கும் சட்டத்தைக் கொண்டுவர இணக்கம் தெரிவிக்கப்பட்டது.[15] வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவல்களைத் தமிழில் நடத்தவும், பதிவேடுகளைத் தமிழில் பேணுவதற்கும், உள்ளூராட்சி சபைகளில் தமிழில் கடிதத் தொடர்புகளைச் செய்வதற்கும் இப் புதிய சட்டம் இடமளித்தது. எல்லாச் சட்டங்களும், பிரமாணங்களும், கட்டளைகளும் சிங்களத்தோடு தமிழிலும் வெளியிடப்படும் என்றும் ஏற்பாடு இச்சட்டத்தில் இருந்தது. வடக்குக் கிழக்கு மாகாணங்களிற்கு வெளியே தமிழ் மொழியின் உபயோகம் என்ற விடயத்தில் இச் சட்டப் பிரமாணங்கள் எதுவும் கூறவில்லை[16]. அரசாங்க உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற விதியையும் சேனநாயக்க தளர்த்தினார். இதன் மூலம் பல தமிழ் உத்தியோகத்தர்கள் வேலையை இழக்கும் நிலை தவிர்க்கப்பட்டது[17].

பிரதமரும் அவரது மந்திரிசபையின் சகாவான ஜயவர்தனவும் அரசாங்கத்தின் மேற்படி இனங்கள் தீர்வைச் சாட்டாக வைத்துக் கொண்டு சிங்கள மக்களின் உணர்வுகளை அரசுக்கு எதிராகத் தூண்டு வதற்கு எதிர்க்கட்சி முனையும் என்பதை அறிந்தே இருந்தனர். பண்டார நாயக்க, செல்வநாயகம் உடன்பாட்டின்படி மொழி விடயத்திலும், பிராந்திய சுயாட்சி விடயத்திலும் 1957இல் சலுகைகளை வழங்கிய போது எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் எவ்விதமாகச் செயற்பட்டார்களோ அவ்விதமே இப் போதும் எதிர்க்கட்சியினர் செயற்பட்டனர்[18]. திருமதி பண்டாரநாயக்க தானே தலைமை தாங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார். தனது கணவரால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அமுல்படுத்துவதை திருமதி பண்டார நாயக்க எதிர்த்து ஊர்வலம் நடத்தினார். ஊர்வலத்தில் சென்றோர் வன்முறையில் இறங்கியபோது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் தமிழ் மொழிக்கு உத்தியோக அந்தஸ்து கொடுப் பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயிர் நீத்த தியாகி ஒருவர் எதிர்ப் பாளர்களுக்குக் கிடைத்தார். பொலிசாரின் குண்டாந்தடிப் பிரயோகத்தை எதிர்கொள்வதற்காக ஆர்ப்பாட்டக்காரர்கள் சனக்கும்பலின் முன்னணி யில் இளம் பிக்கு ஒருவரைக் கூட்டிச் சென்றனர். அப்பிக்கு மீது துப்பாக்கிரவை ஒன்று பாய்ந்தது. அவர் உயிர் இழந்தார். இந்தக் குழப்பத்தின் மத்தியிலும் அரசாங்கம் உறுதியாக நின்று சட்டத்தை நிறைவேற்றியது. இச் சம்பவங்கள் எதிர்க்கட்சியினரின் பிரசாரத்திற்கு வாய்ப்பாக அமைந்தன. தமிழ் மொழி உரிமைகளை வழங்குதல், தேசிய அரசாங்கத்தில் தமிழர்களைச் சேர்த்து வைத்திருத்தல் ஆகிய வற்றை பிரச்சனைகளாகக் காட்டி அடுத் தடுத்து வந்த மூன்று இடைத் தேர்தல்களில் எதிர்க்கட்சி பிரசாரங்களை நடத்தியது. இவ்விடைத் தேர்தல்கள் யாவும் சிங்களப் பகுதிகளிலேயே இடம்பெற்றன. மூன்று இடைத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் தோற் கடிக்கப்பட்டனர்[19]. எதிர்க்கட்சிகளின் தீவிர வாதமும், தேர்தல் பின்னடை வுகளும் காரணமாக அரசாங்கம் புதிய சட்டப் பிரமாணங்களை அமுல் படுத்துவதைத் தவிர்த்துப் பின்வாங்கிக் கொண்டது. தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 'உயிரற்ற சட்டமாக ஆகிவிட்டது எனத் தமிழ் தரப்பினர் கண்டனம் தெரிவித்தனர்[20].

எதிர்க்கட்சியின் எதிர்ப்புக் காரணமாக சமஷ்டிக் கட்சியுடன் மாவட்ட சபை தொடர்பாக செய்து கொண்ட இணக்கப்பாட்டையும் அமுல் செய்வதை பிரதமர் முன்னதை (தமிழ் மொழி உபயோகம்) விட

வெட்கக்கேடான முறையில் கைவிட்டார். சமஷ்டிக் கட்சியுடன் தேர்த லுக்கு முன்னர் செய்துகொண்ட உடன்படிக்கையின் இரண்டாவது அம்சமான மாவட்ட சபைகள், மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழேயே தமிழர் பகுதிகளில் சுயாட்சியை வழங்குவதற்கான ஏற்பாடாக இருந்தன[21]. 1968 ஆம் ஆண்டு மந்திரி சபையில் ஒரு சட்டவரைபு ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது[22]. இந்த சட்டவரைபுக்குப் பெரும் எதிர்ப்புக் கிளர்ந்தது. இந்த எதிர்ப்பை சில குழுக்கள் சேர்ந்த கூட்டணி ஒழுங்கு செய்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. எதிர்ப்பாளர்கள் எந்த வொரு சிறு விடயத்தில் கூட விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்கள பௌத்த பழமைவாதிகளும் தமிழர்களுக்கு எந்தவொரு சலுகையையும் கொடுப்ப தை விரும்பவில்லை. இச்சட்ட வரைபை மந்திரிசபை ஏற்றதை ஒரு சாட்டாக வைத்துப் பிரதமருக்கு சங்கடத்தை ஏற்படுத்த ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாக இவ்வெதிர்ப்பாளர்கள் மகிழ்ந்தனர். தமது அதிகாரங்களை இழக்கப்போகின்றோம் என்று உணர்ந்த சிங்கள உத்தியோகத்தர்கள், அதிகாரத்தை பரவலாக்குவதைக் கொள்கை யளவில் எதிர்த்த மார்க் சியக் கட்சிகள், பல்லினங்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் தாம் பலம் இழப்போம் தமிழர்களின் பலம் கூடிவிடும் என்று அச்சம் தெரி வித்த முஸ்லிம்கள், ஆகிய பலதரப்பினரும் மாவட்டசபை சட்ட வரைபை எதிர்த்தனர். சில அமைச்சர்களும் இச சட்டவரைபை எதிர்த்தனர்[23].

மேற்குறிப்பிட்ட சர்ச்சை தொடர்ந்து கொண்டிருந்தபோது பிரத மருக்கு ஒரு விடயம் தெளிவாயிற்று. மாவட்ட சபைகள் சட்ட மூலத்தை நிறை வேற்றுதல் அரசியல் ரீதியில் சாத்தியமற்றது என்று அவர் கருதினார். சமஷ்டிக் கட்சித் தலைவர்களுக்கு தனது பிரச்சி னைகளை எடுத்துக் கூறிய பிரதமர் தாம் பதவி விலக விரும்புவதாக வும் அவர் களுக்குக் கூறினார். தமிழ்த் தலைவர்கள் அவரைப் பதவி விலக வேண்டாம் எனக் கூறி தாம் அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொள்வ தாகக் கூறினர். திருமதி பண்டாரநாயக்க அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்து தமக்கு மேலும் அநீதி இழைக்கும் என அவர்கள் அச்சம் கொண்டதால் அரசாங்கத்தில் இருந்து விலகும் முடிவை எடுத்தனர்[24]. அரசாங்கத்தில் இருந்து விலகிய போதும் சேனநாயக்க தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு தமது வாக்குகளை வழங்குவதற்குத் தமிழ்த் தலைவர்கள் சம்மதித்தனர். ஆட்சி கவிழவில்லை. அரசாங்கம்

பதவியில் நீடித்தது. ஆனால் இதற்குக் கொடுக்க வேண்டிய விலை ஒன்று இருந்தது. மாவட்ட சபைகள் சட்டத்தை நிறை வேற்றத் தவறிய தால் தமிழர் மத்தியில் விரக்தியுணர்வும் ஏமாற்ற மும் அதிகரித்தன. குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் தமது சொந்தத் தலைவர்கள் மீதும், கொழும்பை மத்தியாகக் கொண்ட சிங்களவர் ஆதிக்கத்தில் உள்ள ஜனநாயக நிறுவனங்கள் மீதும் நம்பிக்கையிழந்தனர்[25].

இலங்கையின் 'இந்தியத் தமிழ்' தோட்டத் தொழிலாளர் நிலை சேனநாயக்க ஆட்சியில் முன்னேற்றம் கண்டது. திருமதி பண்டார நாயக்க இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்ட இந்தியர்கள் 3000,00 பேருக்கு தனியான வாக்காளர் பட்டியல் என்ற முறையை அறிமுகம் செய்திருந்தார். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தப் படி[26] இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்ட இம்மக்களை தனியான வாக்காளர் பட்டியலில் வைப்பதன் மூலம் தனது ஆதரவாளர்களான கண்டிய சிங்களவர்களில்[27] இருந்து தனிமைப்படுத்தி தனது தேர்தல் ஆதரவுப் பலத்தைப் பாதுகாத் துக் கொள்ளத் திட்டமிட்டார். இத் தனியான வாக்காளர் பட்டியலை ஒழிக்கும் சட்டம் 1967 இல் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது[28]. இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இரட்டிப்பு நன்மை கிடைத்தது. கண்டியின் முக்கிய கிராமப்புறத் தொகுதிகளில் 'சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவுப்பலம் சரிவுற் றது. 1956 முதல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெறும் பாராளு மன்றத் தொகுதிகள் பலவற்றில் இந்தியத் தமிழ் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பால் இது நிகழ்ந்தது. இதனை விட இன்னொரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது. புத்திசாலித்தனமாக விடயங்களைக்கையாளும் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொண்டது. அவரின் தலைமையின் கீழ் கட்டுறுதி வாய்ந்த இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் இருந்தது. காங்கிரஸிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டணியை சேனநாயக்க ஆட்சி உருவாக்கியது. இக் கூட்டணி அன்று முதல் 1990க்கள் வரை நீடித்தது[29].

## பௌத்தத்திற்குச் தனிச்சிறப்புடைய இடத்தை வழங்குதல்

சேனநாயக்க அரசாங்கம் தமிழ் மொழி உரிமைகள் அதிகாரப் பரவலாக் கல் ஆகியவற்றில் சமரசம் செய்து கொள்ள முன்வந்த போதும், பௌத்த மதத்திற்கு இலங்கையில் தனிச் சிறப்புடைய இடத்தை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக நின்றது. இக்கொள்கை

பிரதம மந்திரி யினதும், அவரது மந்திரி சபை உறுப்பினர் பலரதும் சமய நம்பிக்கை களோடு ஒத்துப்போவதாகவும் இருந்தது[30]. சேனநாயக்க அரசாங்கத்தின் சிங்கள தேசியவாதப் பற்று தொடர்பாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்ட சூழ்நிலையில் இம்முடிவு அரசியல் ரீதியில் பொருத்தம் உடையதாகவும் தோன்றியது. சனி, ஞாயிறு தினங்கள் விடு முறையாக இருந்ததை மாற்றி முழுமதி போயா தினம் விடுமுறை தினமாக ஆக்கப்பட்டது. இதற்குப் பரவலான ஆதரவும் பெற்றுக் கொள்ளப்பட்டது. பொது வைபவங்களில் பிரதமர் பௌத்த வழிபாட் டைச் செய்வதும், அரசியல் நிகழ்ச்சிகளின் போது பௌத்த பிக்கு களையும் சேர்த்து வழிபாடு நடத்துவதும் ஒரு வழக்கமாக் கப்பட்டு இலங்கை அரசும் பௌத்தமும் பிரிக்கப்படமுடியாதவை என்ற தோற்றம் உறுதிப்படுத்தப்பட்டது[31]. பௌத்த கோவில்கள் பலவற்றை 'பாதுகாக் கப்பட்ட' இடங்களாக அரச ஆதரவுடன் மாற்றும் திட்டம் ஒன்றும் இக்காலத்தில் தொடக்கப்பட்டது.

மேற்குறித்தவாறாக அரசாங்கம் பௌத்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டை முடிவு செய்தமை அரசியல் நன்மைகளைவிட பாதிப்புக் களையே ஏற்படுத்தியது. ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக இருந்த பல இடங்களில் இருந்த மக்கள் அக்கட்சி மீது கோபம் கொண்டனர், விசனம் அடைந்தனர். திருமதி பண்டாரநாயக்கவின் ஆதரவாளர் சிலர் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் சாய்ந்தனரேனும் இக்கொள்கையால் கட்சிக்கு ஏற்பட்ட தீமைகளே அதிகம்[32].

## ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை.

சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதில் ஐக்கிய தேசியக் கட்சி பண்டாரநாயக்க அரசாங்கங்களைவிட கெட்டித்தனமாக நடந்து கொண்டது. டட்லி சேனநாயக்க சர்வதேச அரங்கில் இலங்கை பிரதான வகிபாகத்தை பெறவேண்டும் என்று எண்ணவில்லை. பதவிக்கு வந்ததும் அயலுறவுக் கொள்கை மாற்றமின்றி முன்பிருந்தபடியே தொடரும் என்று கூறிய பிரதமர் இலங்கை தன்னை அநாவசியமாக பிரச்சினைகளில் நுழைத்துக் கொள்ளாது என்பதை விரைவிலேயே உலகுக்கு தெளிவுபடுத்தினார். 1965 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் இப்படிக் கூறினார்.' அணிசேராமை என்றால்

பக்கம் சாராமல் இருப்பது தான், எந்த வல்லரசு குறித்த தவறைச் செய்கிறது என்பதை வைத்துக்கொண்டு கொள்கையை மாற்றுவது எனது கருத்துப்படி அணிசேராமை அன்று'[34].

ஐக்கிய அமெரிக்காவுடன் உள்ள கசப்புணர்வுகளை நீக்கி உறவுகளை மேம்படுத்துவதும் இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய உதவி நிதிகளைத் தடையின்றி பெற்றுக் கொள்வதும் பிரதமரின் முன்னுரி மைக்குரிய பணியாக இருந்தது. அரசாங்கம் கொடுத்த சரியான சமிக்ஜைகள் நற்பலனை விளைவித்தன. உதவி வழங்கும் நாடுகள் உலக வங்கியின் அனுசரணையுடன் 'இலங்கைக்கான உதவி வழங் கும்குழு' (Aid Group for Sri Lanka) ஒன்றைஅமைத்தன[35]. உதவியைப் பெறுவதற்காக அரசாங்கம் பொருளாதாரக் கொள்கையினை மாற்றி நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டது என்ற கண்டனம் எழுந்தது. இருந்த போதும் தேசிய அரசாங்கத்தின் சுதந்திரச் சந்தை பொருளாதாரக் கொள்கையுடன் பொருந்துவனவாக அதன் உதவி பெறும் நிபந்தனை கள் இருந்தன[36]. திருமதி பண்டாரநாயக்கவினால் சுவீகரிக்கப்பட்ட எண்ணெய்க் கம்பனிகளின் சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்கு வதற்கான பேச்சுவார்த்தைகள் 1965 யூன் மாதத்தில் முடிவுற்றன[37]. 1966 இன் முற் பகுதியில் சேனநாயக்க ஐக்கிய அமெரிக்கா சென்று நிறுத்தப்பட்டிருந்த உதவிகளை மீண்டும் பெற்றுக் கொள்ள வழி செய்தார்[38].

## 'மத்திய பாதை' கவர்ச்சியற்றதாக மாறுதல்

சேனநாயக்கவின் ஐந்து வருட ஆட்சி முடிவக்கு வந்ததும் இலங்கை யின் உள்நாட்டு அரசியலில் அமைதியும் சுமூக நிலையும் மறைந்தது. படித்த இளைஞர்கள் பலர் வேலையற்றவர்களாய் இருந்தார்கள். புதிதாக வாக்காளரானவர்களாகவும் இவர்கள் இருந்தனர். இலங்கையின் அரசிய லில் தீர்க்கப்படாத அபிலாசைகளையுடைய விரக்தியுள்ள பிரிவு ஒன்று அரசியலுக்குள் ஈர்க்கப்பட்டது இதனால் அரசியலில் குழப்பநிலை தோன்றியது. தேர்தல் நெருங்கி வரத் தொடங்கியதும் திருமதி பண்டார நாயக்காவின் ஐக்கிய முன்னணி கூட்டணி அரசாங்கத்தின் மதிப்பை இறக்கும் முயற்சிகளில் இறங்கியது. சேனநாயக்கவின் கூட்டாளிகளின் தவறுகளைப் பெரிதுபடுத்தி எதிர்பிரசாரத்திற்கும் இன உணர்வுகளை யும், வர்க்க உணர்வுகளையும் தூண்டிவிடவும் முனைந்தனர். இன உறவுகள் சம்மந்தப்பட்ட எந்த ஒரு பிரச்சினையையும் அரசாங்கத்திற்கு எதிரானதாகத் திருப்பி விடக் கூடியதாக இருந்தது.

அரசாங்கத்திற்கு உள்ளேயும் நிலவிய பூசல்கள் சேனநாயக் கவை பலகீனம் உள்ளவராக்கியது, சமஷ்டிக்கட்சி அரசில் இருந்து விலகிக் கொண்டது. அரசாங்கத்தோடு சேர்ந்து வாக்களித்த போதும் அதிக ஈடுபாடுகாட்டாது ஒதுங்கிக்கொண்டு சிறிலங்கா சுதச்திரக் கட்சியுடன் பேரம்பேசி எதனையும் பெற்றுக்கொள்ள முடியுமா என்று சிந்தித்தது. அந்நியச் செலாவணி மோசடி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி தன்னைக் களங்கப்படுத்திக் கொண்டது. பெரிய அளவில் பகிரங் கப்படுத்தப்பட்ட இந்த மோசடியில் லேக்கவுஸ் பிரசுர நிறுவனத்தின் தலைவரும் பிரதமரின் மருமகள் ஒருவரின் கணவருமான ஒருவர் சம்மந்தப்பட்டவராக இருந்தார்.'சேனநாயக்கவிற்கும் ஜே.ஆர். ஜயவர்த்தனவிற்கும், இடையிலும் உறவில் விரிசல் ஏற்பட்டது ஒரு பின்னடைவாகும். 1965 இல் தேர்தல் வெற்றிக்கு ஒழுங்கமைப்பு வேலை களிலும் அரசியல் திறன்களிலும் வல்லவரான ஜே.ஆர்.ஜயவர்த்தன காரணமாக இருந்தார்.[45] மேலும் நடைமுறைப் பிரச்சினை களை எதிர்கொள் வதற்கு'மத்தியபாதை' என்ற கொள்கை கைகொடுக் கவில்லை. அவரது பிரச்சினைகள் அதிகரித்தன.

## அபிவிருத்தி இலக்குகளும் பொருளாதாரக் கொள்கைகளும்.

சேனநாயக்கவும் அவரது ஆலோசகர்களும் பொருளாதாரத் தேக்க நிலையை போக்கி முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். திருமதி பண்டார நாயக்கவின் தோல்விக்குக் காரணம் பொருளாதாரத் தேக்கநிலைதான் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டனர். விவசாய அபிவிருத்திக்கு முதன்மையளித்துப் பொருளாதாரத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்பது தேசிய அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாகும்.[46] தேசிய வருமானத்தை ஆண்டு தோறும் 5வீதத்தால் உயர்த்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. பெருகிவரும் உழைப்பாளர் படைக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு இவ்வளர்ச்சி வீதம் ஆகக் குறைந்த எல்லை எனக் கூறப்பட்டது. 5வீத வளர்ச்சி வீதம் அவசியமானது என்றும் அடையக் கூடியது என்றும் திட்டமிடல் நிபுணர்கள் கூறினர். கைத் தொழில் துறையில் வருடாந்தம் 9வீத வளர்ச்சி வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.

இலங்கையின் வாக்காளர்களுக்கு உறுதிமொழிகளை வழங்கு வது மிகவும் ஆபத்தான விடயம் என்பதை டட்லி சேனநாயக்காவும், ஜே.ஆர். ஜயவர்த்தனவும் தமது சொந்த அனுபவங்களில் இருந்து

அறிந்திருந்தார்கள். திருமதி பண்டாரநாக்கவின் அனுபவமும் இதனையே அவர்களுக்கு நினைவுபடுத்தியது.[47] அந்நியச் செலாவணி இருப்பு போதியளவில் உள்ளது. முதலீட்டுக்கான மூலதனமும் உள்ளது என்ற அனுமானங்களை வைத்துக் கொண்டு சிந்தித்தாலும் பொருளாதார வளர்ச்சியை எப்படி ஏற்படுத்தலாம் என்பதில் நிபுணர்களிடையே கருத்து வேற்றுமைகள் இருந்தே வந்துள்ளன. பொருளாதாரத்தை பண்முகப் படுத்துவது எப்படி? வினைத்திறனை எப்படி அதிகரிக்கலாம்? பொருளா தாரத்தை எப்படி விருத்தியாக்கலாம், என்பன வளர்ந்துவரும் நாடுகளில் கருத்து வேற்றுமைக்குரிய விடயங்களாகவே இருந்துள்ளன. இலங்கை யின் அந்நியச் செலாவணி இருப்பு தொடர்ந்து மோசடைந்து கொண்டு செல்வதை தடுத்து. முன்னேற்றம் காண்பது என்பது அரசியல் தலைவர் களின் தீர்மானங்களைவிட உலகச்சந்தையில்அரிசி, தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் ஆகியவற்றின் விலைகளின் தளம்பலிலேயே தங்கியிருந்தது.

தேசிய அரசாங்கம் மரபுவழி விவசாயத்துறையினை பலப்படுத்து வதை குறியாகக் கொண்டிருந்தது. இதற்கான பன்முக அபிவிருத்தித் தந்திரோயம் வகுக்கப்பட்டது. மரபுவழி விவசாயத்தின் விருத்தியே டட்லி சேனநாக்கவின் வாழ்நாள் இலட்சியமாகவும் இருந்தது. அரிசியி லும் உப உணவுப் பொருட்களான மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு என்பனவற்றிலும் தன்னிறைவை அடைதல் பிரதான இலக்காக இருந்தது. இவ் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிச் செலவைக் குறைத்தல் அந்நியச் செவாவணியை மிச்சப்படுத்திக் கொள்வதற்கான துரிதமான வழியாகக் கருதப்பட்டது. இவ்வாறு மிச்சப்படுத்தும் அந்நியச் செலாவணியை கைத்தொழில் விருத்தியில் முதலீடு செய்யலாம்.[48] தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் கைத் தொழில் விருத்தி ஏற்படுவதற்குத் தனியார் மூலதனம் துணை யாக அமையும். அந்நிய உதவிகளும், அரசாங்க வளங்களும் உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு உபயோ கிக்கப்படும். இதனால் விவசாயத்துறை விருத்தி தூண்டுதல் பெறும்.[49] நாட்டின் தேயிலை,றப்பர்,தெங்கு தோட்டங்களின் அபிவிருத்தி தொடர்ந்து இயங்கும் என்றும் இவை பிரதான அந்நிய செலாவணி ஈட்ட வழிகளாகவும், அரசாங்க வருமானத்தை பெறும் வழிகளாகவும் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.[50]

ஏனைய துறைகளின் கொள்கைகள் போன்று தேசிய அரசாங் கத்தின் அபிவிருத்தித் தந்திரோபாயம் சமசரத்தன்மை கொண்டதாய் விளங் கியது. விவசாயமும், கைத்தொழிலும் சமமாக ஒத்துபோகும் வளர்ச்சி, மத்திய திட்டமிடலுக்கும் சுதந்திரச்சந்தை முறைக்கும் இடையில் சமசரம் ஆகிய அம்சங்கள் இத்தந்திரோபாயத்தில் அடங்கியிருந்தன. இவ்வகை 'மத்திய பாதை' என்ற நோக்குமுறை தனது கூட்டணியில் உள்ள எதிர் எதிரான போட்டிக்குழுக்களை சமசரம்செய்து வைத் திருக்க உதவும் எனப் பிரதமர் கருதினார். இச்சமரசப் போக்குடன் இலங்கையின் கிராமப்புற ஏழை மக்களை அரசியல் ரீதியில் கவர்ந்திழுக்கும் கொள்கைத் திட்டங்களைச் செயல் படுத்துவதிலும் பிரதமர் கவனம் செலுத்தினார். விவசாயத்திற்கு அழுத் தம் கொடுத்தல் வேண்டும். ஏனெனில் அது கைத்தொழில் வளர்ச்சி யைத் தூண்டும் எனவும் கருதினார்.

தனியார் துறை மூலதனத்தின் வளர்ச்சி பண்டாரநாயக்க கொண்டு வந்த மக்கள் ஆதரவுடைய தேசியமயமாக்கல் திட்டத்திற்கு பதிலீடு அல்ல, அதற்குத் துணையான மேலதிகப் பங்களிப்பாக இருக்க வேண்டும். அரசுத்துறைக் கூட்டுத்தாபனங்கள் தனியார்துறைக்கு திருப்பி ஒப்படைக்கப்படமாட்டா-அவற்றின் வினைத்திறனும் உற்பத்தியும் அதிகரிக்கப்படும், தேயிலைத் தோட்டங்கள் அந்நிய உடைமைகளா கவே தொடர்ந்து இருக்கும், ஆயினும் அவை பொது நலனிற்கு பெரும்பங்களிப்பை வழங்கும் உற்பத்தித் துறையாக விளங்கும் என்ப தும் அவரது கொள்கையாக இருந்தது.

## விவசாய அபிவிருத்தி

இச் செயல் திட்டங்களின் பிரதான பயன் நெல்லின் உற்பத்தி அதிகரிப் பாகும். 1970 ஆம் ஆண்டை அண்மிக்கும் போது பயிர்ச் செய்கையின் கீழ்கொண்டு வரப்பட்ட புதியகாணிகள் 100,000 ஏக்கராக அதிகரித்தன. 1969/70 மொத்த நெல் உற்பத்தி 1964/65 ஆம் ஆண்டை விட 70 வீதத தால் அதிகரித்திருந்தது[53]. இது நாட்டின் அந்நிய செலாவணிப் பிரச்சி னையை முற்றாகத் தீர்க்கவில்லை என்பதைப் பின்னர் விளக்கிக் கூறு வோம். இருப்பினும் அரிசியின் இறக்குமதியை குறைப்பதற்கும் வர்த்தக நிலுவையில் குறைவை கட்டுப்படுத்தவும் இது உதவியது.ஏனைய செயல் திட்டங்கள் ஐக்கிய தேசிய கட்சி அரசியல் வாதிகளின் நலன் களுக்கு உதவியிருக்கலாம், விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவில்லை.[54]

மேற்குறித்த குறுங்காலத்திட்டங்களோடு விவசாயக்காணியின் அளவை அதிகரித்து உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கு நவீன கைத்தொழில் சமூகம் ஒன்றிற்கு தேவைப்படும் நீர்மின்சாரத்தை வழங்கு வதற்குமான நீண்டகாலத்திட்டங்களையும் அரசாங்கம் செயற்படுத்தி யது.[55] இந்த இலக்குகளை அடைவ தற்காக அணை கள், குளங்கள், நிர்ப்பாசனக் கால்வாய்கள் என்பனவற்றை கட்டுவதற் குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. இத்திட்டங்கள் மூலமாக மகாவலி ஆறு போன்ற இலங்கையின் நீர்வளங்களின் உச்சபயன்பாட்டைப் பெறு வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.[56] பின்னர் மகாவலி அபிவிருத்தித்திட்டம் என அழைக்கப்பட்ட திட்டத்தில் டட்லிசேனநாயக்க தனிப்பட்ட அக்கறை யைக் கொண்டிருந்தார், தன் தந்தையின் கனவை நனவாக்கும் ஒன்றி ணைந்த ஆற்று அபிவிருத்தித்திட்டம் ஒன்றைத் தீட்டினார், இது உலகின் மிகப்பெரிய ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டமாக அமைந்தது.

சிங்கள பண்பாட்டை புத்துயிர்ப்பிப்பதற்கான இன்னொரு வழியாக மகாவலி அபிவிருத்தித்த திட்டம் வர்ணிக்கப்பட்டது. இம் மண்ணில் வீழும் ஒவ்வொரு மழைத்துளியும் மனிதருக்கு முதலில் பயன்பட்ட பின்னரே கடலில் சென்றடைய வேண்டும் என்ற முதலாம் பராக்கிரம பாகு (கி.பி 1153-1186) மன்னன் கூற்று இலங்கையின் பாடசாலைப் பிள்ளைகள் யாவரும் அறிந்த ஒன்றாகும்.[57] பராக்கிரமபாகு இலங்கை யில் நீரியல் நாகரீகம் ஒன்றை உருவாக்கினான். அந்த நாகரிகத்தின் அடையாளங்களும் அழிவுகளும், இன்று இலங்கையில் உல்லாசப் பயணிகளின் கவர்ச்சிக்குரியனவாய் உள்ளன.[58] 12ஆம் 13ஆம் நூற் றாண்டுகளில் இந்நாகரிகம், செழித்திருந்த வேளை உருவாக்கப்பட்ட குளங்கள், கால்வாங்கள் பல நவீன முறைமையின் பகுதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

மகாவலித்திட்டம் பற்றியும், அதற்கு உலகவங்கி நிதி வழங்க முன்வந்தமை பற்றியும் செய்திகள் வெளிவரத் தொடங்கியதும், ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் டட்லி சேனநாயக்க அரசைத் தாக்குவ தற்கு அவ்விடயத்தை பயன்படுத்தலாயினர்.[59] ஏற்கனவே பலவீனமுற் றிருந்த அரசாங்கத்திற்கு எதிராக பாராளுமன்றத்திலும், அதற்கு வெளி யிலும் எதிர்ப்புக்கள் கிளம்பின. இதனால் மகாவலி அபிவிருத்திச்சபை என்னும் அமைப்பை உருவாக்கும் சட்டமூலம் 1970 மார்ச் வரை பின் போடப்பட்டது. இரண்டு மாதங்கள் கழிந்த பின் திருமதி சிறிமா

பண்டாராநாயக்க ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டார். பண்டைய நகரான அனுராதபுரத்திற்கு அண்மையில் ஒரு நீர்ப்பாசனத்திட்டமும் சேனநாயக்க அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய திட்டங் களைப் புதிய அரசாங்கம் நிறுத்தி வைத்திருந்தது.[60] இரண்டு வருடங் கள் தாமதித்தபின்னர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சில திட்டங்கள் மீளச் செயற்படுத்தப்பட்டன. எனினும் மகாவலி அபிவிருத்தித்திட்டம் 1977ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரும்வரை முன்னுரிமை உடைய ஒரு திட்டமாக இருக்கவில்லை.

## பொருளாதாரத்தை மீள் கட்டமைப்புச் செய்தலும், கைத்தொழில் விருத்தியும்

டட்லி சேனநாயக்க தலைமையிலான ஒரு அரசாங்கத்தில் விவசாய அபிவிருத்தி முதன்மை இடத்தை பெற்றிருக்கும். ஆயினும் 1966ஆம் ஆண்டில் உலக சந்தையில் அரிசியின் விலை உயர்ந்தது. இதனால் இலங்கையின் பலகீனமான நிலை வெளிப்படையாகத் தெரிந்தது.[61] இலவச அரிசியின் அளவைக் குறைத்தமை ஒரு தற்கால ஏற்பாடே என்பதை அரசாங்கத் தலைவர்கள் விரைவில் உணர்ந்தனர். புதிய கைத்தொழிலிகளில் முதலீடு செய்தல் வர்த்தகம், முதலீடு ஆகிய விடயங்களில் கொள்கைமாற்றம் என்பன மிக அவசியமானவை என்று அவர்கள் கருதினர். 1950க்களில் வெளிநாட்டுப் பொருளாதார நிபுணர் களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதைப் போன்று இப்போதும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் இலங்கை அரசின் திட்டமிடல் பகுப்பாய்வுத் திறன்கள் உயர்த்தப்பட வேண்டும் என்ற கருத்து வலுப் பட்டது. இதன்பயனாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் கைத்தொழில் விருத்தித்திட்டங்கள் தொடங்கப்படுவதற்கு அடித்தளம் இடப்பட்டது.

இந்தியாவின் பொருளியில் அறிஞர் பி.ஆர்.செனய் (B.R.Chenoy) என்பவரை அழைத்து இலங்கைப் பொருளாதாரம் பற்றிய அறிக்கை பெறப்பட்டது. சுதந்திரச் சந்தைப் பொருளியலை அக்காலத்திலேயே ஆதரித்தவர் செனய். அவரின் கருத்துக்கள் இலங்கையின் பொருளி யலாளர்கள் யாவரும் அன்று கொண்டிருந்த கருத்துக்களுக்கு தகுந்த மாற்றீடாக இருந்தன.[62] முன்னைய ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டது

போன்று செனய் தனது அறிக்கையில் மந்தகதியில் செல்லும் பொருளாதார அபிவிருத்தி, உயர் அளவிலான பணவீக்கம், தொடர்ச்சியான சென்மதி நிலுவைப் பிரச்சினை என்பன நாட்டின் பிரதான பிரச்சினைகளாகும் என்று குறிப்பிட்டார். செனய் கைத்தொழில் வளர்ச்சிக்கான பிரதான பொறுப்பைத் தனியார் துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். வரிச்சலுகைகளையும் ஏனைய தூண்டுகைகளையும் தனியார் துறைக்கு வழங்கி கைத்தொழில் முதலீடுகளை ஊக்குவிக்கலாம். என அவர் குறிப்பிட்டார். பற்றாக்குறை இல்லாத சமநிலை வரவு செலவுத் திட்டம் வேண்டும் என்றும் அரசு நடத்தி வரும் தொழில்களைத் தனியார் துறைக்கு விற்பனை செய்தல், சில பொதுத்துறைத் தொழில்களைத் தனியார் துறையைக் கொண்டு இலாபமான முறையில் முகாமை செய்தல் ஆகியன மூலம் இந்நோக் கத்தை நிறைவேற்றலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். இச்சிபார்சுகளை ஜே.ஆர். ஜயவர்த்தன உற்சாகத்துடன் வரவேற்றார். ஏழு வருடங்களுக் குப் பின்னர் அவர் அதிகாரத்தைக் கைப்பற்றிய போது செனய் அறிக்கையில் குறிப்பிட்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்தினார். அமைச்சரவையில் இருந்த ஏனையோரும், எப்பொழுதும் மிகுந்த அவதானத்தைக் கடைப்பிடிக்கும் பிரதமரும் செனய் அறிக்கையின் சிபாரிசுகளை ஏற்றுக் கொள்ளவில்லை.[63]

டட்லி சேனநாயக்க நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு பரிகாரமாகப் படிப்படியான முன்னேற்ற நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்று கருதினார். செனயின் தீவிரவாதக் கருத்துக்கள் அவரால் ஏற்கப்படவில்லை. அவரது அரசாங்கம் திட்டமிடல், பகுப்பாய்வுத் திறன்களை உயர்த்துதல், அந்நிய முதலீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத் தல், நிர்வாக ஒழுங்கமைப்பு களைச் சீர்செய்து தனியார்துறை அபிவிருத்தியை ஏற்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் கவனம் செலுத் தியது. திட்டமிடலுக்கும் பொருளாதார விவகாரங்களுக்குமான அமைச்சு என்ற புதிய அமைச்சு உருவாக்கப்பட்டது. இது பிரதம மந்திரியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கியது. முன்னுரிமைகளைத் தீர்மானித்தல், தரவுகளைத் திரட்டுதல், திட்ட அமுலாக்கத்தைக் கண்காணித்தல் ஆகிய பணிகள் இவ்வமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன.[64] புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குதல், ஊக்குவிப்புகளை வழங்குதல், முதலீடுகளை நெறிப்படுத்தல், ஏற்றுமதிகளை ஊக்குவித்து அதிகரித்தல் ஆகிய

அன்றாட நடவடிக்கைகள் கைத்தொழில் அமைச் சின் பொறுப்பாக விடப்பட்டன. இடதுசாரியான பிலிப் குணவர்தன அப்போது கைத் தொழில் அமைச்சராக இருந்தார்.[65] இவர் முன்னர் எஸ் டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சியில் விவசாய அமைச்சராக இருந்த வர். குணவர்தன தனது அமைச்சை புனரமைத்து அதன் செயலாற்றலை மேம்படுத்தினார். ஆனால் அரசுத்துறைத் தொழில்களின் அளவைக் குறைப்பதற்கு அவர் இணங்கவில்லை.[66]

பிரச்சினைகள் பலவற்றிற்கு முகம் கொடுக்க நேரிட்டதேனும், புதியனவும், வினைத்திறன் மிக்கனவுமான கைத்தொழில்கள் பல தனியார் துறையில் ஆரம்பிக்கப்பட்டன. 1965இலும் 1966இலும் திட்டமிடல் வேலைகள் நடைபெற்றபோதும் அக்காலத்தில் அந்நியச் செலாவணிப் பற்றாக் குறை காரணமாக அமுலாக்கம் தடைப்பட்டது. ஆனால் 1967 ஆம் ஆண்டில் புதிய முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் கிடைத்தன. நிலைமை மேம்பட்டது. 1970ஐ அண்மியபோது ஆண்டு தோறும் பதிவு செய்யப்படும் கைத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக் கை 1965 இன் எண்ணிக் கையோடு ஒப்பிடும்போது இரண்டு மடங்காக உயர்ந்தது. புதிய கம்பனிகளின் மூலதன ஆக்கம் உயர்ந்தது. இது முன்னைய அரசாங்க காலத்தை விட ஏழுமடங்கு உயர்வாக இருந்தது.

இலங்கையின் கைத்தொழில்களின் அளவு சிறியதாகவும், அவற் றின் புவியியல் பரம்பல் குறுகியதாயும் இருந்தமையால் ஒட்டுமொத்த மான வேலைவாய்ப்பு பொருளாதார அபிவிருத்தி என்பன மட்டுப்படுத்தப் பட்டனவாய் இருந்தன. பெரும்பான்மை யான கைத்தொழிற்சாலைகள் 150க்கும் குறைவான தொழிலாளர்களையே வேலைக்கு வைத்தி ருந்தன. கைத்தொழில் அமைப்புக்களும் ஓரிடத்தில் மட்டும் ஆலையை கொண்டனவாயும் தனிமுயற்சியாளர் உடமையாகவோ அல்லது பங்கு டைமையாகவோ இருந்தன. கைத்தொழில் உற்பத்தி ஆலைகளில் 80 வீதமானவை மேற்கு மாகாணத்தில் இருந்தன. கொழும்புக்கு அண்மியதான இட அமைவைக் கொண்ட இக் கைத்தொழில் சாலைகள் முன்னேற்றமான உட்கட்டமைப்புக்கள், மூலப்பொருட்களின் கிடைப்பு, சந்தைக்கு அண்மியதாயிருத்தல் ஆகிய வசதிகளை பெற்றுக் கொண் டன. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ஒரு பிரச்சினையாகத் தொடர்ந்திருந்தது. சேனநாயக்கவின் அரசாங்கம் இலங்கையை

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சியான ஒரு இடமாக ஆக்கு வதற்கு விரும்பியது. அவருக்கு முந்தியகால அரசாங்கத்தின் தேசிய மயமாக்கல் நடவடிக்கைகளும், மார்க்சிய கொள்கைகள், பேச்சுக்கள் என்பனவும் அந்நிய முதலீட்டாளர்களை விரட்டுவனவாயும் பயமுறுத்து வனவாயும் இருந்தன. தனியார் உடைமைகள் எவற்றையும் தேசியமய மாக்கும் எண்ணத்தை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்று முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் உறுதிமொழியை வழங்கியது. “பொதுநலன்’ கருதி ஏதேனும் உடமைகளை தேசியமயமாக்கும் தேவை எதிர்பாராத விதமாக ஏற்பட்டால், போதியளவு நட்டஈடு வழங்கப்படும் என்ற உறுதி மொழியையும் அரசாங்கம் கொடுத்தது.‘ அந்நிய முதலீட்டுக் குழு’ என்ற புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இக்குழு ஊக்குவிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், புதிய கருத்திட்டங் களை அங்கீகரித்தல் ஆகிய பணிகளைச் செய்தது.[67] பலவிதமான முன்முனைவுகள் எடுக்கப்பட்டன, கொள்கைப் பிரகடனங்கள் வெளியிடப் பட்டன. இருப்பினும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதில் அரசாங்கம் தோல்வியடைந்தது. அந்நிய முதலீடுகளின் தேறிய வெளி யேற்றம் தொடர்ந்திருந்தது. முன்னைய காலத்தைவிட பெரிதாக முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்ல.[68]

இலங்கையில் தனியார்துறைக் கைத்தொழில்கள் சிறிய அள வுடை யனவாய் இருந்த காரணத்தால் வேலைவாய்ப்பை வழங்கு வதற்கான சாத்தியம் குறைவு. பெருமளவு வேலை வாய்ப்பை வழங்கும் கனரகக் கைத்தொழில், போக்குவரத்து, தொலைத் தொடர்பு, பொது ஜனங் களுக்கான சேவைகள் முதலியன அரசாங்கத் துறையிலேயே இருந்த படியால், அரசுத் துறையில் இருந்தே வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் சக்தி உருவாகமுடியும். பொருளாதார விவகார அமைச்சு அரசுத் துறைத் தொழில்களில் உள்ள பிரச்சினைகளை ஆராய ஒரு ஆணைக் குழுவை நியமித்தது. இக்குழுவின் அறிக்கையில் பிரச்சினைகள்யாவும் விபரமாகத் தரப்பட்டுள்ளன. ஒழுங்கமைப்பு, தொழில்களின் இட அமைவு, ஆளணியின் தரம், திட்டமிடுதல், கருத்திட்ட மதிப்பீடு, சந்தைப் படுத்தல், விலையிடல், தொழிலாளர் உறவு, முகாமைப் பிரச்சினைகள் ஆகிய பல்வேறு பிரச்சினைகள் இவ்வறிக்கையில் அடையாளம் காணப்பட்டன.[69] பெரும்பாலான தொழில்களுக்கு வழங்கியுள்ள மானியங்களை நிறுத்தி, அத்தொழில் களை பொதுத்துறை வருமானத்தை அதிக ரிப்பதற்கு ஏற்றவகையில்

முழு இயலளவையும் பயன்படுத்தி முகாமைத்துவ வினைத்திறன் அதிகரிப்பின் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே பிரதமர் சேனநாயக்கவின் நோக்கமாகும். போக்குவரத்துத் துறை போன்ற சில துறைகளில் விலைகளின் தீர்மானம் அரசியல் பிரச்சினையாக லாம்.[70] இவை தவிர்ந்த பிற துறைகளில் பொருத்தமான விலையிடல் லாபத்தை ஈட்டுவதற்கு அவசியமாகும்.[71]

பொதுத்துறைத் தொழில்களின் முதலீடுகள் இக்காலத்தில் இரண்டு மடங்காக உயர்ந்தன.[72] இருப்பினும் பொதுத்துறை விரிவாக்கம் தனியார்துறையை விடக் குறைந்த வேகத்திலேயே ஏற்பட்டது.[73] சீர்திருத்தத் திட்டங்களின் நிறைவேற்றம் அரசியல் அழுத்தங்கள், மந்திரிசபைக்குள்ளேயே கருத்து முரண்பாடுகள் உருவானமை, பழைய முறைகள் தொடர்வதால் நன்மை பெற்றவர்களின் எதிர்ப்பு, சமரசங் களுக்கு பிரதமர் இடம் கொடுத் தமை போன்ற காரணங்களால் தடைப்பட்டது. ஆதலால் சீர்திருத்தத்திற்கான செயல்முறைகள் எழுத் தில் வரையப்பட்டனவேனும் நடைமுறையில் எதுவும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. டட்லி சேனநாயக்க பதவியை விட்டு நீங்கிய போது அளவுக்கு அதிகமான முதலீடுகள், மிகையான இயலளவு தேவைக்கு அதிகமான வேலையாளர் தொகுதி, குறைந்தளவு இலாபம் ஆகிய பல பிரச்சினைகள் கைத்தொழில் துறையில் மிகுந்திருந்தன.

அரசாங்கத்தின் கைத்தொழிலாக்க முயற்சிகள் ஓட்டுமொத்த மாகப் பார்க்கும் போது ஆக்க பூர்வமானவையாக இருந்தன. ஆனால் அவற் றால் விளைந்த தாக்கம் சிறிதளவானதே. திருமதி பாண்டார நாயக்கவின் ஆட்சிக் காலத்துடன் ஒப்பிடும் பொழுது பொதுக் கூட்டுத் தாபனங்களில் முதலீடுகள் மாறா ரூபா மதிப்புப்படி 70 வீதம் உயர்ந்தது. ஏனைய அரசாங்க, பொது வியாபார முயற்சிகளில் முதலீடுகள் 24 வீதம் உயர்ந்தன. கைத்தொழில் துறையில் முதலீடுகளின் உயர்ச்சி 50 வீதமாக இருந்தது. கைத்தொழில் சாலைகளின் உற்பத்தி மூன்றில் இரண்டு பங்கால் உயர்ந்தது. வருடாந்த உற்பத்தி அதிகரிப்பு 7வீதமாக இருந்தது. 1968 ஆம் ஆண்டில் 24 வீத அதிகரிப்பு ஏற்பட்டது. இவ் வாண்டில் கூடியளவு அந்நியச் செலாவணி கிடைத்தமை இவ்வுயர்ச் சிக்குக் காரணமாகும். இலங்கையின் விவசாயப் பொருளாதார அடிப் படையிலும் அதன் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 1970 இல் தேசிய மொத்த உற்பத்திக்கு கைத்தொழில்

வழங்கிய பங்களிப்பு சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியின் இறுதியாண்டாகிய1964 இல் கைத்தொழில்துறை வழங்கிய பங்களிப்பை விடச் சிறிது குறைந்திருந்தது.[76] தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் என்ற மூன்று உற்பத்திப் பொருட்களுக்கும் உலகச் சந்தையில் கிடைக் கும் விலையினைப் பொறுத்தே உள்நாட்டுக் கைத்தொழில்களின் விருத்திக்குத் தேவையான வருமானத்தைப் பெறும் நிலையில் இலங்கை இருந்தது. டட்லி சேனநாயக்க பதவியை விட்டுச் சென்றவேளை வரை இம் மூன்று உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் இலங்கை யின் மொத்த ஏற்றுமதி வருமானத்தின் 88 வீதமாக இருந்தது[77].

கைத்தொழில் உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட மூலப் பொருட் களில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்கள் 75 வீதமாக இருந்த படியால், கைத்தொழில் துறையின் விரிவாக்கம் குறுங்காலத்தி லாயினும் இறக்குமதி செலவுகளை உயர்த்தவே செய்யும். 1965 ஆம் ஆண்டைத் தவிர பிற எல்லா ஆண்டுகளிலும் வர்த்தக வர்த்தக நிலுவைக் குறை ஏற்பட்டது. குறிப்பாக 1966 ஆம் ஆண்டிலும் 1969 ஆம் ஆண்டிலும் வர்த்தக நிலுவைக் குறைவு மிகவும் மோசமானதாக இருந்தது. டட்லி சேனநாயக்க ஆட்சிக் காலத்தில் இவ்வாறு வர்த்தக நிலுவைக் குறைவு என்னும் பிரச்சினை ஏற்பட்டதால் இலங்கையின் அந்நியச் சொத்திருப்பு குறைவடைந்தது. 1965 ஆம் ஆண்டிற்கும் 1969 ஆம் ஆண்டிற்கும் இடையில் அந்நியச் சொத்திருப்பில் 23 வீத வீழ்ச்சி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியான வர்த்தக நிலுவைக் குறைவு அந்நியச் சொத்தி ருப்பை குறையச் செய்தது. அரசாங்கம் வெளிநாட்டுக் கடன்களை கூடிய அளவில் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு நிர்பந்திக்கப்பட்டது. அந்நிய நாடுகளிடம் பெற்ற கடனின் அளவு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இருமடங்காக உயர்ந்தது. இக்கடன்களில் 60 வீதத்திற்கும் மேலானவை அந்நிய வங்கிகளால் வர்த்தக வட்டி வீதப் படி வழங்கப்பட்டவையாகும்.[78] கடனிற்கான மீள் கொடுப்பனவும், வட்டியும் வரவு செலவுத் திட்டத்தில் முக்கிய ஒரு விடயமாக இருந்தது. கடன் பளு பிந்திவரும் அரசாங்கங்களும் சுமக்க வேண்டிய ஒன்றா யிற்று.ஒட்டு மொத்தமான பொருளாதார உற்பத்தி அதிகரிப்பு மிகக் குறைவாகவும், ஏற்றுமதி வருமானத்தில் தேக்க நிலையும் காணப் பட்டதால், பெற்ற கடன்களை மீளச் செலுத்தும் ஆற்றல் இலங்கைக்கு

இருக்கவில்லை. கடனின் அளவு உயர்ந்தது, ‘கடனைச் செலுத்தும்’ ஆற்றல் உயரவில்லை. டட்லி சேனநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் அந்நிய நாட்டுக் கடனின் அளவு ஒரு ஆண்டில் நாடு பெற்றுக் கொள் ளக் கூடிய ஏற்றுமதி வருமானத்தை விட 35 வீதம் கூடியதாக இருந்தது. ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னர் வெளிநாட்டுக் கடன் ஏற்றுமதி வருமானத்தைவிட 100 வீதம் கூடியதாக உயர்ந்து இருந்தது. இரு ஆண்டுகளின் ஏற்றுமதி வருமானத்தை (வேறு தேவைகள் எதற்கும் உபயோகிக்காமல்) திரட்டிவைத்திருந்தாலும் இலங்கையின் வெளி நாட்டுக் கடனை கொடுத்துத் தீர்க்க முடியாத நிலை இருந்தது.

வர்த்தக நிலுவைக் குறைவு, அந்நியக் கடன் போன்ற பிரச்சினை கள் மேலும் மோசமடையாமல் காப்பாற்றுவதற்கு டட்லி சேனநாயக்க வின் வெளிநாட்டுக் கொள்கை கைகொடுத்து உதவியது. மேற்கு நாடுகளின் கடன் உதவுநர்களுடன் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றுடன் டட்லி சேனநாயக்க நல்ல உறவுகளை மீளக் கட்டியெழுப்புவதில் வெற்றி கண்டார். மொத்த அந்நிய உதவிகள் இரண்டு மடங்காக அவர் காலத்தில் உயர்ந்தன. 1965 ஆம் ஆண்டில் 20.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த அந்நிய உதவி 1970 இல் 38.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. அந்நிய உதவிகளின் அதி கரிப்பு நன்மைகளோடு சில பாதிப்புக்களையும் கொண்டனவாய் இருந் தன. உதவிகளில் 80 வீதமானவை கடன்களாக இருந்தபடியால் இவற்றை திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. வர்த்தக வங்கி களிடம் பெறும் கடன்களுக்குரிய வட்டிவீதத்தை விடக் குறைந்த வட்டியுடைய சலுகைக் கடன்களாக இந்த உதவிகள் அமைந்தன என்பது உண்மையே. சேனநாயக்கவின் மேற்குச் சார்பு அரசாங் கம் தனது ஆட்சிக் காலத்தில் 28 மில்லியன் அமெரிக்க டொலர் களை உதவியாகப் பெற்றது. திருமதி பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் பெற்றுக் கொண்ட உதவித் தொகை 25 மில்லியன் அமெரிக்க டொலர் களாகும். இரண்டிற்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்க வில்லை.[79] பெரும்பாலான உதவிகள் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கானது. இது குறுங்காலப் பிரச்சினைகளைத் தீர்த்து ஆபத்தான நிலையில் இருந்து விடுவிப்புபெற உதவியது. எனினும் நீண்டகால அபிவிருத்திக்கு இக் கடன்கள் உதவவில்லை. சிலநாடுகள் உதவிகளை வழங்கும் போது நிபந்தனைகளை விதித்தன.

உதாரணமாக அமெரிக்க உதவிகள் நிபந்தனை களைக் கொண்டவை. உதவி வழங்கும் நாட்டிடம் இருந்து உதவிநிதியை உபயோகித்துப் பண்டங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் போன்ற நிபந் தனைகள் விதிக்கப்பட்டன. இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டபோது பொருட் களைத் தெரிவு செய்தல் குறைந்த விலையில் அவற்றைப் பெறுதல் என்ற தெரிவுச் சுதந்திரம் அரசாங்கத்திடம் இருக்கவில்லை. உதவி வழங்குநர்கள் தரம் குறைந்த பொருட்களை உயர் விலைகளில் கொடுக்கும் போது இலங்கைக்கு மாற்றுவழிகள் எதுவும் இருக்க வில்லை. உதவி வழங்கும் திட்டங்களின் குறைகள் வெளியில் தெரியவந்த போது டட்லி சேனநாயக்கவின் எதிரிகளுக்கு அவர் மீதான கண்டனங்களைத் தொடுப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் கிட்டியது.

இக்காலப்பகுதியின் அரசியல் பற்றிய சிறந்த நூல் ஒன்றை எழுதியவரான யேம்ஸ்யுப் (James jupp) பிரித்தானியாவினதும், ஐக்கிய அமெரிக்காவினதும் உதவி வழங்கல் கொள்கைகள் பற்றி கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இவ்விருநாடுகளின் உதவி வழங் கும் கொள்கைகள் ‘அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் புரவலர் கள் என்ற தகுதியின் நம்பகத் தன்மையை அடியோடு நீக்கிவிடுவன வாய் உள்ளன’ என்று கூறுகிறார். பிரித்தானிய உதவி பற்றிக் கூறும் போது ‘யோடான், மஸ்கற் ஆகிய நாடுகளின் சர்வாதிகார ஆட்சி களுக்கு முட்டுக்கொடுப்பதற்காக பல ஆண்டுகளாக பிரித்தானியா பணம் கொடுக்கிறது. முதலில் அதன் உதவி அற்ப தொகையாக இருந்தது. பின்னர் ஒரு ஆண்டுக்கு 5 மில்லியன் என்ற அளவுக்கு உயர்ந்தது’ என்கிறார். யுப் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை பற்றிய கொள்கையை வியட்நாம் நாட்டுடன் ஒப்பிட்டு வேறுபாட்டைச் சுட்டுகிறார். இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களை கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான பணத்திலும் பல மடங்கை வியட்நாமில் அமெரிக்கா இராணுவச் செலவாகச் செலவிடுகிறது என்று கூறுகிறார்.‘வியட்நாம்’ நாட்டில இல்லாத ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கா பாதுகாப்புச் செலவாகப் பெருந்தொகை செலவிடப்படுகிறது.‘ஆனால் இங்கே (இலங்கையில்) ஜனநாயகம் உயிரோடு உள்ளது, அது மக்களின் ஆதரவையும் பெற்றுள்ளது. இந்த ஜனநாயகத்திற்கு சிறு தொகைப் பணத்தை பூரண விருப்பமில்லாமல் வழங்குவதோடு சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற போதனைகளையும் செய்கிறது’ என்று கூறியிருக்கிறார்.[81]

அரசாங்க நிதி தொடர்பாக முந்திய இரு அரசாங்கங்களின் காலத்தில் நிலவிய சில தீங்கான போக்குகள் தொடர்பாக சேன நாயக்க ஆட்சியின் போது நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவற்றுள் மிக முக்கியமானது வரவு செலவுத்திட்ட முன்னுரிமைகளை குறுங்கால நன்மைகளைக் குறியாக வைத்துத் தீர்மானிப்பதும், மூல தனச் செலவைக் குறைப்பதும் ஆகும். சேனநாயக்க ஆட்சிக் காலத்தில் அரசாங்க அதிகாரிகள் இவ்விடயத்தில் முன்னேற்றம் காட்டினர். 1967 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் பயனாக உணவு மானியம் 31 வீதம் மட்டும் அதிகரித்தது. 1970 இல் மானிய உணவுக் காக செலவிட்டதொகை பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் செல விட்ட தொகையைவிட 10 வீதம் மட்டும் உயர்வாக இருந்தது. ஆனால் பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் உணவு மானியச் செலவு 100 வீதம் உயர்ந்தது. குறுங்காலச் செலவுகளைக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதன் மூலம் அரசாங்கம் முதலீடுகளின் அளவை உயர்த் தியது. பொருளாதாரம் என்ன வேகத்தில் வளர்ந்ததோ அந்த வேகத் தை விஞ்சாத அளவில் அரசாங்கச் செலவுகளைக் கட்டுப்படுத்தியது.

செலவுகளைக் குறைத்ததன் மூலம் தொடர்ச்சியான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை என்ற பிரச்சினை தீர்க்கப்பட்டது என்று கூற முடியாது. 1965 க்கும் 1970 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக் குறையைக் காட்டியது. இப்பற்றாக்குறை சராசரியாக செலவுகளின் 25 வீதம் ஆக இருந்தது. ஆண்டுதோறும் 10 வீதத்தால் உயர்ந்து சென்ற பொதுக்கடன் டட்லி சேனநாயக்க ஆட்சிக் காலத்தில் 61 வீத உயர்வை அடைந்தது. பொதுக்கடனின் 10 வீத உயர்ச்சி நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தைவிட இரண்டு மடங்காக இருந்தது.[84] திருமதி பண்டார நாயக்க காலத்தில் நாட்டின் பொதுக்கடன் 90 வீதத்தால் அதிகரித்தது. ஒப்பீட்டளவில் சேனநாயக்க ஆட்சிக்காலம் இவ்விடயத்தில் முன்னேற்றமானது எனினும் பற்றாக்குறை நிதியாக் கமும் அதனால் ஏற்படும் 'செலவும்' நாட்டின் பொருளாதாரத்தால் தாங்கிக்கொள்ள முடியாத விடயம். நீண்ட காலத்தில் பணவீக்கத்தை இது ஏற்படுத்தும். இக் காலத்தில் அரச வருமானம் கூடிச் சென்றது உண்மையே எனினும் பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்ட பற்றாக்குறை நிதியாக்கம் மூலம் செலவுகளைச் செய்தல் என்னும் செயல் முறையின் தாக்கத்தை தடுப்பதற்கு அரச

வருமான உயர்வு உதவவில்லை.[85] 1990க்களின் முற்பகுதியில் டட்லி சேனநாயக்க ஆட்சியிலிருந்தார் எனக் கற்பனை செய்து பார்த்தால் அவரது பொருளாதாரக் கொள்கை வேறுவிதமாக நோக்கப்பட்டிருக்கும். நிலைபேறுடைய அபிவிருத்திக்கு கேடான நடைமுறைகளான மத்திய திட்டமிடல், நாணய மாற்றுக் கட்டுப்பாடு, இறக்குமதிக் கட்டுப்பாடு, அரசாங்க முகாமைத்துவத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கைத்தொழில் மயவாக்கம், தொடர்ந்து பற்றாக்குறை நிதியாக்கம் மூலம் வரவு செலவுத்திட்டச் செலவுகளை அதிகரித்தல் ஆகிய நடைமுறைகளின் தாக்கம் பற்றி இன்று எமது அறிவு பலமடங்கு உயர்வானது. எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவும் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஒத்த கொள்கைகள் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நிதிநெருக்கடிகளைத் தோற்றுவித்தன. ஆயினும் இந்த நிதிநெருக்கடி கள் தீவிரமாகி அரசியல் நெருக்கடி தோன்ற இன்னும் பல ஆண்டுகள் சென்றன. இந்த நிதி பொருளாதார நெருக்கடிகளுக்கு நிவாரணமாக அமைப்பியல் சீராக்கம் (Structural Adjustment) என்னும் பொருளா தாரச் சீர்திருத்த நடவடிக்கை பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுபற்றிப் பல கண்டனங்கள் உள்ளன என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். அமைப்பியல் சீராக்கம் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியது.

i) அரசாங்கத்தால் நடத்தப்படும் கைத்தொழில்களின் உடைமை களை தனியாருக்கு விற்றல் (தனியார் மயமாக்கல்) இதன் நோக்கம் கைத்தொழில்களின் வினைத்திறனை அதிகரித்தல் ஆகும்.

ii) மானியங்களைக் குறைத்தல் மூலம் அரசாங்கச் செலவுகளில் கட்டுப்பாட்டைக் கொண்டுவருதல்.

iii) இறக்குமதி வரிகளைக் குறைத்து அதன் மூலம் ஏற்றுமதி களுக்கு ஊக்கம் கொடுத்தல்.

iv) அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை நீக்கி வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவித்தலும் அந்நிய முதலீட்டாளர் களை ஊக்குவித்தலும்.

திருமதி பண்டாரநாயக்கவின் நிர்வாகத்தின் கீழ் மார்க்சிய நோக்கி லான பொருளாதார முகாமைத்துவ முறைகள் புகுத்தப்பட்டதன்

விளைவுகளே 1965 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வெற்றிக்குக் காரணமாயின (இது பற்றி போரின் படிப்பினைகள்-03- நம்பிக்கையின் மறுமலர்ச்சி நூலில் விபரித்துள்ளேன்). இருந்தபோதும் இக்கொள்கைகளின் நீண்டகால விளைவுகள் இலங்கையில் வாக்காளர் களுக்கு வெளிப்படையாகத் தெரியக்கூடியனவாய் இருக்கவில்லை. வாக்காளர்கள் அரசாங்கத்தின் புதிய திட்டங்களால் அரசுத் துறை விரிவாக்கம் பெற்று வேலைவாயப்புக்கள் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்தனர். டட்லி சேனநாயக்க அப்போது ஒரு மாற்று வழியைக் காட்டினார். அவரது வழி பின்னாளில் வந்த 'அமைப்பியல் சீராக்கத்தின்' தீவிரம் குறைந்த ஒரு மாதிரியாகும். அம் மாதிரி அரசுத் துறையின் வளர்ச்சியை நிறுத்தவில்லை. அதன் வேகத்தை மட்டும் குறைத்தது. தனியார் முயற்சியை ஊக்குவித்தது. அரசாங்கத் தின் வசதிகளையும், மானியங்களையும் தொடர்ந்து கொடுத்தது. அரசியல் சமரசங்களையும் செய்து கொண்டது. தீவிர நடவடிக்கைகள் மூலம் அதிர்ச்சி வைத்தியம் செய்வதை சேனநாயக்க அரசாங்கம் விரும்ப வில்லை. மத்திய திட்டமிடல் முறையா அல்லது சுதந்திர சந்தைப் பொருளாதாரமா வினைத்திறன் மிக்கது என்பதைப் பற்றி நிபுணர்கள் அப்போது விவாதித்துக் கொண்டிருந்தனர். எனினும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையைத் தீர்மானிப்பதில் பொருளாதாரத்தைவிட அரசியல் பிரச்சினைகளும் அவை பற்றிய அக்கறைகளுமே பிரதான பங்கைப்பெற்றன. சுதந்திர சந்தைப் பொருளா தாரமா அல்லது மத்திய திட்டமிடல் பொருளாதாரமா வினைத்திறன் மிக்கது என்று நிபுணர்கள் விவாதித்துக்கொண்டிருந்த போதும், நடைமுறையில் அரசியல் காரணங்கள் தான் எப்பொருளாதாரக் கொள்கையைத் தேர்ந்து கொள்ளலாம் என்பதைத் தீர்மானிப்பவையாக இருந்தன. சேனநாயக்க வின் மந்திரிசபையில் அமைப்பியல் சீராக்கம் (Structural adjustment) கொள்கையின் ஆதரவாளர்கள் இருந்தனர். மார்க்சிஸ்டுகளும் இருந்தனர். சேனநாயக்க இவ்விருசாராருக்கும் இடைப்பட்ட மத்திய பாதையைத் தேர்ந்து கொண்டார். இலங்கையின் பொருளாதாரமும், நிதிநிலையும் சீரழிந்து கெட்டுப் போகாமல் இக் கொள்கை பாதுகாத்தது. ஆனால் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க இக்கொள்கை உதவவில்லை. 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் சமயத்திலும் பொருளாதாரப் பிரச்சினை களைவிட அரசியல் தான் முக்கிய இடம் பெற்றது. திருமதி பண்டார நாயக்கவின் பொருளாதாரக் கொள்கைகளுக்குத் திரும்பிப் போகும்

சந்தர்ப்பம் நம்பிக்கை தரும் மாற்று வழியாக இலங்கையர்கள் பலருக் குத் தோன்றியது. மார்க்சிய வழிமுறை பற்றியும் இந்த நம்பிக்கை தவறானது என்பதை சந்தேகத் திற்கு இடமின்றி நிரூபிப்பதற்கு இன்னும் ஏழு ஆண்டுகளைக் கடக்க வேண்டியிருந்தது.

## மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுதல்.


தேசிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரித்தது, பிரச்சினையைத் தந்து கொண் டிருந்த உணவு மானியச் செலவுகளைக் குறைக்க உதவியது. முதலீட் டுக்கு முன்னுரிமை கொடுத்தது, தனியார் முயற்சியை ஊக்கு வித்தது. இக்கொள்கைகள் யாவற்றிற்கும் அடிப்படையாக இருந்த நோக்கம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதே ஆகும். வளர்ந்து வரும் சனத்தொகைக்கு ஈடு செய்யும் வகையில் வேலைகளை உருவாக்கு வதற்கும், ஏழைகளான மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என அரசாங்க திட்டமிடல் பிரிவினர் கருதினர். இந்த இலக்குகளை தமது ஐந்து ஆண்டுப் பதவிக் காலத் தில் அடைவது அரசாங்கத்தின் அரசியல் வெற்றிக்கு உதவும் என்றும் கருதப்பட்டது.

பொருளாதார வளர்ச்சி தூண்டப்பட்டது. இதனால் வெகுஜனங்கள் நேரடியாக நன்மை பெற்றிருந்தால் 1970 ஆம் ஆண்டில் சேனநாயக்க தேர்தலில் வெற்றிவாகை சூடியிருப்பார். நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி ஆண்டொன்றிற்குச் சராசரி 7 வீதத்தால் அதிகரித்தது (சிறிமா வோ பண்டாரநாயக்க அரசாங்க காலத்தில் ஆண்டொன்றிக்குச் சராசரி 4.5 வீதமாகவே இருந்தது) ஆளொருவருக்கான மொத்த தேசிய உற்பத்தி (Per Capita GNP)யும் பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் ஏறக்குறையத் தேக்கமடைந்த நிலையில் இருந்தது. இக்காலத்தில் அது உயர்ச்சி பெற்றது. (இவை உரு 1.3 இல் விளக்கப் பட்டுள்ளன.)

இக்காலத்தின் வளர்ச்சியின் பாதகமான அம்சம் பணவீக்க மாகும். டட்லி சேனநாயக்க ஆட்சியின் முதல் மூன்று ஆண்டுகளில் விலைகள் தளம்பலின்றி உறுதியாக இருந்தன. 1968 இல் விலைகள் சடுதியாக 13 வீதம் உயர்ந்தன. இந்த ஆண்டில் பண விரிவாக்கல் கொள்கைகள் அமுல் நடத்தப்பட்டன. நாணய மாற்று விகிதம்

சீர்திருத்தப்பட்டது. இவற்றின் விளைவே இந்த விலை உயர்வு. 1969 ஆம் ஆண்டில் மீண்டும் விலைகள் தளம்பலின்றி உறுதிநிலை அடைந்தபோதும் முன்னைய ஆண்டின் உயர்பண வீக்கம் அரசாங் கத்திற்கு அரசியல் பின்னடைவைக் கொண்டு வந்தது.

பொருளாதார வளர்ச்சியினால் கூலி உழைப்பாளர் பிரிவினரும், ஏழைகளும் நன்மை பெறுவர் என்று எதிர்பார்க்கப்பட்டதேனும் அவர் களுக்கு நன்மைகள் கிட்டவில்லை. விரிவாக்கம் பெறும் பொருளாதாரத் தினால் கிடைக்கும் வருமானம் 'கீழ் மட்டத்திற்குச் சுவறும்' (Trickle down) என்று நம்பப்பட்டபோதும் கூலிகள் எதிர்ப்பார்த்தவாறு உயர வில்லை. இதனால் இந் நம்பிக்கை வீணாயிற்று.[88] 1965-1970 காலப் பகுதியில் ஆகக் குறைந்த கூலி மட்டம் சராசரி ஆண்டுதோறும் 1வீதத்தால் அதிகரித்தது. இது திருமதி பண்டாரநாயக்க காலத்தின் உயர்வோடு ஒப்பிடும்போது குறைவாகவே காணப்பட்டது. விவசாயம் அல்லாத துறைகளில் ஆகக்குறைந்த கூலிமட்டம் ஆண்டு தோறும் 1.2வீதத்தால் அதிகரித்தது. இவ்வுயர்ச்சி முன்னைய ஐந்து ஆண்டுக் காலத்தை விட சிறிதளவு முன்னேற்றம் என்று கூறமுடியும். ஆயினும் இக்கூலி உயர்ச்சி ஆளொருவருக்கான பொருளாதார வளர்ச்சி வீதத் தைத் விடக் குறைவாகவே இருந்தது.[89] இந்தப் பொதுப் போக்கில் இருந்து விதி விலக்காக பொதுத்துறை ஊழியர்களின் சம்பள உயர்வு




உரு: 1.3 சனத் தொகை GNP ஆளொருவருக்கான GNP போக்குகள்

கள் அமைந்தன. இவை அரசாங்கத்தால் நேரடியாக நிர்ணயிக்கப் பட்டவை. பண வீக்கத்திற்குப் பதிலீடான ஈடு செய் உயர்வுகளும் கொடுக்கப்பட்டன. அத்தோடு வழமைப்படி தேர்தலுக்கு முந்திய சம்பள உயர்வும் கொடுக்கப்பட்டது.[90]

தொழிற்படை, வேலையின்மை என்பன பற்றிய புள்ளி விபரங் களை நோக்கினால் இலங்கை மக்களின் வாழ்நிலையில் முன்னேற் றத்தை கொண்டுவரத் தவறிய பொருளாதார வளர்ச்சி பற்றி முழுமை யான சித்திரம் எமக்குக் கிடைக்கும்.[91] 1960க் களில் தொழிற்படையில் இளம் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கொண்டனர். இது இலங்கை யின் சுகாதார நிலை மேம்பட்டதன் விளைவுகளின் ஓர் அம்சமாகும். 1953-1963 காலத்தில் இலங்கையின் உழைப்பாளர் படை மிதமான அளவில் ஆண்டொன்றுக்கு 1.6 வீதத்தால் உயர்ச்சி பெற்றது. இது சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விடக் குறைவாகவும் இருந்தது. 1963 க்குப் பிந்திய 5 ஆண்டுகளில் உழைப்பாளர் படையின் அதிகரிப்பு 4 வீதமாக உயர்ந்தது. இதனால் இந்த 5 ஆண்டுகளில் உழைப்புப் படையில் சேர்ந்தவர்களின் தொகை 1953 முதல் 1963 வரையான 10 ஆண்டுகளில் உழைப்புப்படையில் சேர்ந்தவர்கள் தொகையை விடக் கூடுதலாக இருந்தது. உழைப்பாளர் படையின் வளர்ச்சியை காட்டும் விரிவான மதிப்பீடு 1970 இல் நடத்தப்பட்டபோது உழைப் பாளர் படையின் வளர்ச்சி பற்றிய தரவுகள் உறுதி செய்யப்பட்டன. 1969இலும் 1970இலும் பொருளாதார வளர்ச்சி வீதம் 9ஆக இருந்த போதும் வேலையின்மை உயர் மட்டத்தை எட்டியிருந்தது.[93] இங்கே ஒரு விசித்திரமான முரண் சித்திரத்தைக் காண்கின்றோம். வேலை யற்றோர் தொகை உச்ச நிலையை எய்திய ஒரு கட்டத்தில் இலங்கை யின் பொருளாதாரமும் உச்ச அளவில் புதிய வேலைகளை (New Jobs) உருவாக்கிக் கொண்டிருந்தது.[94]

வேலையற்றோர்களான இலங்கையர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக இலங்கையில் சமூகசேவைகளும் அரசாங்கம் கொடுத்த நலன் சேவைகளும் அமைந்தன. டட்லி சேனநாயக்க அரசாங்கம் இச்சேவைகளை புதுப்பித்ததோ உருவாக்கியதோ என்று கூறுவதற் கில்லை. முன்னைய அரசாங்கங்கள் வழங்கிவந்த சேவைகளை அந்த அரசாங்கமும் வழங்கிக் கொண்டிருந்தது. கல்வியிலும் ஏனைய நேரடிச் சேவைச் செலவுகளிலும் ஏற்பட்ட ஆளொருவருக்கான செலவுகள்

வீதம். மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்திற்கு ஏறக்குறையச் சமனாக இருந்தது. ஆளொருவருக்கான செலவுகளின் வீதம் திருமதி பண்டாரநாயக்க காலத்தின் வீதத்தை விடச் சிறிது குறைவாக இருந்தது. உணவு மானியம் சில திருத்தங்களுடன் யாவருக்கும் வழங்கப்பட்டு வந்தது. இலவச அரிசி வழங்குவதற்கான செலவு 27 வீதம் அதிகரித் தது. இலங்கையில் பட்டினியால் இறப்போர் என்ற பேச்சுக்கு இடம் இருக்கவில்லை. இதனால் இலங்கை ஆசியா, ஆபிரிக்கா,லத்தின் அமெரிக்க நாடுகளிற்குள் ஒரு தனித்துவம் மிக்கதாக விளங்கியது. ரெயில்,பஸ் சேவைகள் நாடு முழுமைக்கும் பரவலாக்கப்பட்டிருந்தன. இவற்றுக்கு மானியம் அரசால் கொடுக்கப் பட்டது. பொதுப் போக்கு வரத்துச் சேவையின் தொழிலாளர்கள் அரசாங்க அரசியல் ஆதரவாளர் களுக்கு ஆபத்தில் கைகொடுத்து உதவுபவர்களாக இருந்து வந்தார்கள்.

இலங்கையின் சுகாதார சேவைகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தொடர்ச்சியாக முதலிடத்தை பெற்று இருந்தன. 1965 70 காலப்பகுதியின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை சுகாதார சேவை மருத்துவர்கள், தாதிமார் எண்ணிக்கை ஈடுசெய்யும் வகையில் உயர்வாக இருந்தது.[95] மேற்கு நாட்டு மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் கிராமப் புறங்களிலும் சேவைக்கு அமர்த்தப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. கிராமப் புறங்களின் ஆயுர்வேத வைத்தியர் சேவைக்குத் துணையான மேலதிக வைத்திய சேவையாக இது விளங்கியது. இலவசமாக சுகாதார சேவைகள் வழங்கப்பட்டன. நாட்டில் போஷாக்கின்மை ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. இக்காரணங்களால் இலங்கையின் சுகாதாரக் குறிகாட்டிகளில் முன்னேற்றம் காணப்பட்டது. இக் குறி காட்டிகள் மேற்கு நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடக்கூடியனவாக முன்னே றியிருந்தன. பிரசவத்தின் போது தாய்மார் இறப்பு 50 வீதம் குறைந்தது. சிசுமரண வீதம் 50 என்ற எல்லைக்குக் கீழ் காணப்பட்டது. இக் குறி காட்டிகள் அடிப்படை மனிதத் தேவைகளை வழங்குவதில் வெற்றி யையும் தோல்வியையும் வேறுபடுத்திக் கணிப்பிடுவதற்கான அளவு கோல்களாக நிபுணர்களால் கருதப்பட்டவை.[96]

சிறிமாவோ பண்டாரநாயக்க கொண்டுவந்த சீர்திருத்தங்களால் இலங்கையர்களிற்கு இலவசக் கல்வி விஸ்தரிக்கப்பட்டது. இலவசக்

கல்வி ஏற்கனவே முதல்நிலை வகுப்புக்கள் வரை யாவருக்கும் கிடைக் கும் வகையில் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. 1965 இல் கல்வி மொழியாக ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களத்தையும் தமிழையும் பதிலீடு செய் தல் வேலை முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்தது.[97] டட்லி சேனநாயக்கவின் கல்வி அமைச்சராக ஐ.எம்,ஆர்.ஏ. இரிய கொல்ல,[98] பதவி வகித்தார் இவர் பண்டாரநாயக்க அரசாங்கங்களால் தொடக் கப்பட்ட கல்வி மறுசீரமைப்பு, விரிவாக்கம் என்பவற்றில் மாற்றம் எதனை யும் செய்யாமல் தொடர்ந்தார். 1960-61 காலத்தில் தேசிய மயமாக் கப்பட்ட றோமன் கத்தோலிக்க பாடசாலைகள் தொடர்ந்தும் அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கும் என்பது உறுதிசெய்யப்பட்டது. இப் பாடசாலை கள் தேசிய மயமாக்கப்பட்ட வேளை ஐக்கிய தேசியக் கட்சி அதனை எதிர்த்தது என்பது இவ்விடத்தில் குறிப்பிப்படப்பட்ட வேண்டிய விடயம். இப்பாடசாலைகள் கல்விக்கான கட்டணத்தை அற விடுவதை அனும திக்கப் போவதாக பிரதமர் தேர்தல் சமயத்தில் பிரசாரம் செய்தார். ஆனால் பின்னர் அவரது இந்த யோசனையைக் கைவிட்டார்.[99] தோட்டப் பகுதிகளில் மட்டும் தனியார் நடத்தும் பாடசாலை கள் இருந்தன. அப்பாடசாலைகளில் குறைந்தளவில் கட்டணமும் அறவிடப்பட்டது. அங்கு கல்வி வசதிகளும் பரவலாக விஸ்தரிக்கப்பட்டி ருக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளில் 10 வீதத்தினரே பாடசா லைக்குச் செல்வோராக இருந்தனர்.[100]

முதல்நிலைக்கல்வி பரவலாக்கப்பட்டிருந்தது. அமைச்சர் இரிய கொல்ல ஆசிரியர் பயிற்சி என்னும் விடயத்தில் இப்போது கவனம் செலுத்த முடிந்தது. அவருடைய திட்டத்தினால் பாடசாலைகளில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் என்ற வகையினரின் எண்ணிக்கையை அவர் கூட்டினார்.[101] கற்பித்தல் தரத்தில் ஒட்டுமொத்தமான முன்னேற் றம் ஏற்பட்டபோதும், பிராந்திய அடிப்படையிலான சமத்துவமின்மையும் வேறுபாடுகளும் தொடர்ந்தன. ஆசிரியர்களை பாடசாலைக்கு நியமிக் கும் வேலை அமைச்சின் பொறுப்பில் இருந்தது. கொழும்பு, கண்டி முதலிய இடங்களின் முன்னணிப் பாடசாலைகள் உயர் தகுதியுடைய ஆசிரியர்களைப் பெற்றன. கிராமப் புறங்களின் ஏழைகளின் பாடசாலை களிற்கு தரத்தில் குறைந்தவர்களான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.[102]

திருமதி பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் தொகையில் விரைவான அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால்

உருவான பிரச்சினைகளிலும் இரியகொல்ல தன் கவனத்தைத் திருப் பினார். அளவுக்கு அதிகமான மாணவர்களை ஒரே வகுப்பறையில் வைத்துக் கற்பித்தல், பல்கலைக்கழக ஆசிரியர் பற்றாக்குறை, பல்கலைக்கழக அனுமதி தொடர்பான நடைமுறைகள் பற்றிய அதிருப்தி, பட்டதாரிப்படிப்பில் சேர்வோரில் பெரும்பான்மையினர் கலைப் பாடங் களைக் கற்போராய் இருத்தலும், தேசத்தின் தேவைகளோடு கல்விக் குள்ள பொருந்தாமையும் போன்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியிருந்தது. 1966 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டத்தின்படி உயர்கல்விக்கான தேசிய சபை என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. நீண்டகாலத் திட்டமிடல், பல்கலைக்கழக அனுமதி, அவற்றுக்கான நிதி வழங்கல் ஆகியன இச்சபையின் பொறுப் புக்களாக விளங்கின.[103] பல்கலைக்கழகங்களின் வெவ்வேறு துறைகளின் 'சுயாதீனம்' பறிபோவதாக குறை கூறப்பட்டதால் இலங்கையின் (அப்போதைய) நான்கு பல்கலைக்கழகங் களிற்கும் உபவேந்தர்களை நியமிக்கும் பொறுப்பும் தேசிய சபையிடம் கொடுக்கப்பட்டது.[104]

உயர்கல்விக்கான தேசிய சபை இரண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்தது. பல்கலைக்கழகங்களின் வகுப்பறை களில் மட்டு மீறிய தொகை அதிகரிப்பால் எழும் நெருக்கடியை தீர்க்க வேண்டும். இரண்டாவதாக 'கலைத்துறைப்' பாடங்களைக் கற்ற பட்டதாரிகள் பெரும்பங்கினராய் இருத்தல் என்ற பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தது. தேசிய சபை பல்கலைக்கழகங்களில் வசதிகளைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. அத்தோடு பல்கலைக்கழக அனுமதிக்கான தரங்களை நிறுவியது. இலங்கையின் கல்வித் திட்டமிடலாளர்கள் விரைவில் ஒரு உண்மையைப் புரிந்து கொண்டனர். பல்கலைக்கழகச் சட்டங்களையும், கொள்கைப் பட்டயங் களையும் வரைவது எளிதான வேலை, மறுசீரமைக்கப்பட்ட நிறுவனங் களிற்கு வேண்டிய ஆசிரியர்களையும் வசதிகளையும் வழங்குவ தென்பது எளிதான வேலையன்று. பல்கலைக்கழக ஆசிரியர்கள் நியமனங்களை அதிகரித்ததால் பேராதனையில் மாணவர் /ஆசிரியர் விகிதம் 14:1ஆகவும், கொழும்பில் 2:1 ஆகவும் (கலைத்துறைப் பாடங்களிற்கு)முன்னேறற்ம்[105] இருந்தபோதும் கல்வியின் தரம் கீழிறங்கியது. பெருந்தொகை மாணவர்களிற்கு கற்பிக்கும் பொறுப்பு உயர் தராதரங்களை இன்னும் எட்டாத கனிஷ்ட உதவி விரிவுரை யாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது இதற்கான காரணமாகும்.

விஞ்ஞானம்,பொறியியல்,மருத்துவம் ஆகிய துறைகளில் புதிய விரிவுரையாளர்களைச் சேர்த்துக் கொள்வது பெரும் சிக்கலாக மாறியது. ஏனெனில் இத்துறை சார்ந்தோருக்கு தனியார் துறையில் பல்கலைக்கழகங்களைவிடக் கூடிய சம்பளம் பெறும் வாய்ப்பு இருந்தது.

பல்கலைக்கழக அனுமதியைக் குறைப்பதில் அரசாங்கம் வெற்றி கண்டது. திருமதி பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வுக்குத் தோற்றுவோர் தொகை 5200 இல் இருந்து 31,000 ஆக உயர்ந்தது. 1965இல் 6300ற்கு மேற்பட்ட மாணவர்கள் (இது பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்கு தோற்றுவோரின் 20வீதம்) அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுவோர் தொகை எவ்வளவாக இருக்கவேண்டும் என்ற தீர்மானம் பல்கலைக்கழகத்தில் தரமுள்ள ஆசிரியர்கள் போதியளவு உள்ளனரா, போதிய வசதிகள் உள்ளனவா என்பனவற்றை கருத்தில் கொண்டு செய்யப்படுவதில்லை. அரசியல் காரணங்களை வைத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. 1970 அளவில் பல்கலைக்கழக அனுமதி பெறுவோர் தொகையை ஏறக்குறைய 50 வீதத்தால் தேசிய சபை குறைத்தது. அவ்வாண்டில் 30,000 பேர் விண்ணப்பித்தனர், இத் தொகையில் 11 வீதம் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர்.[106]

மரபுவழிப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களுக்கு பெருமதிப்பு கொடுக்கப்பட்டது. இதனால் வர்த்தக, தொழில்நுட்ப கல்வியில் முன்னேற்றத்தைக் கொண்டுவந்து பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக்கூடிய தொழில் திறன்களை வளர்ப்பதில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லை.இத் தொழில் திறன்களை வளர்க்கும் நிறுவனங்கள் நிறுவப்பட்டபோதும் பல்கலைக்கழகங்களைவிட அவற்றிற்குக் குறைந்தளவு முக்கியத்து வமே கொடுக்கப்பட்டது. அரசாங்கம் சில 'செயல்முறைப்' பண்ணை களையும் நிறுவியது. இப் பண்ணைகளில் இளைஞர்களும், யுவதிகளும் (பெரும் பான்மை இளைஞர்களே) விவசாய முகாமைத்துவம் பற்றி ஒரு வருடப் பயிற்சி பெற்றனர்.107 விவசாயம் உயர்கௌரவம் மிக்க தொழிலாகக் கருதப்படவில்லை. ஆதலால் பல்கலைக்கல்விக்கு அடுத்த நிலையி லேயே விவசாய முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நோக்கப்பட்டது. அந்நியச் செலாவணி உழைப்பின் 90 வீதம் விவசாய உற்பத்தி மூலம் கிடைக்கப்பெறும் இலங்கையில், கலைத்துறைக்கும்,

கீழைத்தேச மொழி பண்பாட்டுக் கல்விக்கும் உள்ள மாணவர் சேர்வுத் தொகையை விடப் பல மடங்கு குறைந்த தொகையினர் விவசாயக் கல்வியை நாடுவது கவனிப்புக்குரிய விடயமாகும்.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தேசிய அரசாங்கம் எந்தளவு வெற்றிகண்டது? இலங்கை அரசாங்கங்களும் அபிவிருத்தியடைந்துவரும் பிற நாடுகளில் பெரும்பான்மையினவும் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினையை. 'தேசிய உற்பத்தியை மேலும், மேலும் மக்களிடையே பகிர்ந்தளிக்கும்படி வாக்காளர்கள் கொடுக்கும் அழுத்தம்' என்று யேம்ஸ் யுப் குறிப்பிடுகிறார். டட்லி சேனநாயக்கவின் 'மத்திய பாதை'க் கொள்கைகள் இவ்வகை அழுத்தத்தின் காரணமாக மக்களுக்கு வழங்கவேண்டிய சமூக நலன் சேவைகளை வழங்கிவந்தன. இச்சேவைகளுக்கு மானியம் அளித்து ஆதரவு கொடுத்தன. இவை முன்னைய ஆட்சியாளர்களால் தொடக்கப் பட்டவை. சேனநாயக்க அரசாங்கம் நீண்டகாலப் பிரச்சினை களுக்கான தீர்வுகளைப் படிப்படியாக மேற்கொள்ள முற்பட்டது. பொருளா தாரத்திலும், கல்வி நிறுவன அமைப்புக்களிலும் இருந்த அடிப்படைப் பிரச்சினைகளை படிப்படியாகத் தீர்க்க அது முயற்சித்தது.

அரசாங்கத்தின் கொள்கைகள் ஒரளவுக்கு வெற்றியளித்தன. பொருளாதார வளர்ச்சி முன்னேற்றமடைந்தது. தனியார்துறைக்குப் புத்துயிர் கொடுக்கும் திட்டம் ஆரம்பமாயிற்று. அரசாங்கத்தின் வள ஒதுக்கீட்டு முறையில் ஓரளவு திருத்தம் ஏற்பட்டது. குறுங்கால நன்மை களுக்காக அன்றி நீண்டகால நன்மைகளுக்காக வளங்களை ஒதுக்கீடு செய்யவும் முதலிடவும் முயற்சி எடுக்கப்பட்டது. இருப்பினும் சேன நாயக்கவின் படிப்படியான மாற்றம் என்ற கொள்கை முக்கிய சில பிரச்சினைகளின் தீர்வுக்கு உதவவில்லை இலங்கையின் அந்நியச் செலாவணி உழைப்பிற்கு விவசாயப் பண்டங்களின் உற்பத்தியில் தங்கியிருத்தல். இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் சந்தை விலைகள் வீழ்ச்சியடைதல் என்ற இரண்டையும் படிப்படியான மாற்றக் கொள்கைமூலம் தீர்க்க முடியவில்லை வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை தொடர்ந்து ஏற்பட்டது. இதனால் முன்னைய ஆட்சிக் காலத்தில் என்னென்ன அரசியல் பொருளாதார விளைவுகள் ஏற்பட் டனவோ அவை இக்காலத்திலும் தொடர்ந்தன. சேனநாயக்க ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றங்களும், பின்னடை வுகளும்

ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பண்ட உற்பத்தி பொருளா தாரங்களின் அபிவிருத்திக் கொள்கைகளின் சாத்தியப்பாடுகளையும் அவற்றின் மட்டுப்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

அரசியல் நோக்கில் நின்று பார்க்கும் பொழுது டட்லி சேனநாயக்க வின் அரசாங்கம் நான்கு விடயங்களில் தவறிழைத்தது. இத் தவறுகள் இடதுசாரிகளாலும் தீவிரவாத பொப்பியுலிஸ்டுகளாலும் தேர்தலின் போது தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டன. இவை கூலிகள், வருமானப்பங்கீடு, வேலை வாய்ப்பு, கல்வி என்ற நான்காகும். நாம் முன்பு சுட்டிக்காட்டியது போன்று விலைவாசிகள் உயர்ந்து சென்ற வேளையில் மெய்க்கூலி (Real wages) பொருளாதார வளர்ச்சி வீதத்தை விடக் குறைவாகவே நகர்ந்து சென்றது. சுதந்திரத்தின் பின்னர் முதன் முதலாக இவ்வாறான போக்கு இக்காலத்தில் வெளிப்பட்டது. வருமானப் பங்கீடு செல்வந்தர்களுக்கு சார்பாக இருந்தது. வேலையின்மை அதிகரித்தது. பல்கலைக்கழக அனுமதி அதிகரிக்கப்பட்டதால் உயர் அபிலாசைகளுடன் இளைஞர்களும் யுவதிகளும் உழைப்புச் சந்தையில் நுழைந்தனர். ஆனால் போதிய வேலைகள் கிடைக்க வில்லை. 1970 ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றபோது வேலையற் றோர்களில் 10,000 பேர் அண்மையில் பட்டப்படிப்பை முடித்து வெளி யேறியோராய் இருந்தனர். விரக்தி கொண்ட இந்த இளைஞர்கள் நகரங களில் வாழ்ந்தனர். அவர்களுக்கு நிறைய ஓய்வு நேரம் கிடைத்தது. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் பல்கலைக்கழக அனுமதிக்கான பரீட்சையில் தோல்வியுற்ற இளைஞர் யுவதிகளும் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்திலும் பரீட்சைக் குத் தோற்றியோரில் 5 பேருக்கு 1வர் என்ற விகிதப்படியே பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததாயினும் புதிதாக உருவாக்கப்பட்ட உயர்கல்விக்கான தேசியசபையே இப்பிரச்சினைக்கு காரணம் எனக் கருதப்பட்டது. உயர் கல்விக்கான தேசிய சபை மீது குற்றம்சாட்டப்பட்டது. இது சுலபமான வேலையாக இருந்தது. பிரச்சாரத்திற்கு இன்னொரு கனல்கக்கும் வாசகம் கிடைத்தது. இன்னொரு ‘அநீதி’யை அவர்கள் சுட்டிக்காட்டினர். தமது சொந்தத் தோல்வியையும் ‘அநீதி’ ஆக்க முடிந்தது. தமிழ் பரீட்சாத்தி களுக்கு கூடிய புள்ளிகளை வழங்கி சிங்களப் பரீட்சார்த்திகளுக்கு பாரபட் சம் காட்டப்பட்டதாக பிரசாரம் செய்தனர். க.பொ.த (உ.த) என்ற இரண்டாம் நிலைக் கல்வியில் தோல்வியுற்று விரக்தியடைந்தோர், விரக்தியுற்ற பட்ட தாரிகள், இவ்விருசாராரின் ஆசிரியர்கள் என்ற மூன்று பிரிவினரும் 1970 ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்கவின் தேர்தல் தோல்விக்கு பெரும் பங்களிப்பை வழங்கினர்.

## 2. டட்லி சேனநாயக்கவின் 'மத்திய பாதையும்' அதற்கான அரசியல் பதிற்குறிகளும்

டட்லி சேனநாயக்க முழுமையாக ஐந்து ஆண்டுகள் பதவியில் இருந்தார். இந்த ஐந்து ஆண்டுகளும் ஒப்பீட்டளவில் வன்முறையற்ற ஆண்டுகளாகும். சேனநாயக்கவின் சாதனை இதுவெனலாம். பொது ஒழுங்கைப் பேணுவதில் அவர் காட்டிய உறுதி வன்முறை குழப்பங்களை தவிர்க்க உதவியது. பாதுகாப்புப் படைகளை அமைதியை பாதுகாப்பதற்காக அவர் உபயோகித்தார். அவற்றை வெளிப்படையான அரசியல் பணிகளில் அவர் ஈடுபடுத்தவில்லை. பொதுசன விருப்புக்கு மாறான கொள்கைகளை சிறுபான்மையின் மீது திணிப்பதற்கும் கருவியாக அவர் ஆயுதப்படைகளை உபயோகிக்கவில்லை.

### அரசியல் மனப்பாங்குகளும் அடையாளங்களும் ஒழுங்கமைப்புக்களும்

1970ம் ஆண்டில் டட்லி சேனநாயக்க பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்டமை இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். அது 1956 இல் பண்டாரநாயக்க தொடக்கி வைத்த அமைதிப்புரட்சியின் முடிவையும் குறிக்கின்றது. கட்சிகளின் கூட்டணியொன்று இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியது. இப்பெரும்பான்மைப் பலம் சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கு தடைகளற்ற சட்டவாக்க அதிகாரத்தை வழங்கியது. அவர் தீவிர செயற்திட்டங்களையும், அரசியல் யாப்பினை திருத்துவதையும் இந்த அதிகாரத்தை பயன்படுத்திச் செயல்படுத்தினார். சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தச்சட்டவாக்க அதிகாரத்தை எவ்வாறு பயன் படுத்தினார் என்பதை இத்தொடரில் நான் எழுதியுள்ள அடுத்த நூலில் விபரித்துள்ளேன். இந்த அத்தியாயத்தில் இலங்கையின் அரசி யலும், வெகுஜன எழுச்சியும் சென்ற போக்கையும், அவை தேர்தல் அரசியலை அடிப்படையிலேயே மாற்றியமைத்ததையும் விபரித்துக் கூறவுள்ளேன்.

1960 முதல் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற இரு கட்சிகளின் தலைமையிலான கூட்டணிகளிடை அரசியல் போட்டி நிலவியது. தமிழ்க்கட்சிகளும் மார்க்சியக் கட்சிகளும் கொள்கைகளை தீர்மானிப்பதில் செல்வாக்கு வகித்தன. விரும்பினால் ஒரு அரசாங்கத்தை வீழ்த்தவும் (தம் வாக்குப் பலத்தை உபயோகித்து) முடிந்தது. ஆனால் 1970ல் ஜூன் மாதத்தின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 90 ஆசனங்களை (மொத்த ஆசனங்களில் 60 வீதம்) கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலையில் யாருடனும் கூட்டணி சேராமல் ஆட்சி செய்யும் பலம் அதற்கு கிடைத்தது. இருப்பினும் தேர்தலிற்கு முன்னர் தனது கூட்டணியை சேர்ந்த ரொட்ஸ்கிசவாத லங்கா சம சமாஜ கட்சிக்கும் (LSSP) கம்யூனிஸ்ட் கட்சிக்கும் (மொஸ்கோ சார்பு) தான் கொடுத்த வாக்குறுதிப்படி அக்கட்சிகளையும் சிறிமாவோ பண்டாரநாயக்க இணைத்துக்கொண்டார். சிறிமாவோ பண்டாரநாயக்க வும் அவரது கூட்டாளிகளும் பொதுத்தேர்தல் முடிவுகள் வெகுஜனங் களின் அரசியல் மனப்பாங்கின் அடிப்படை மாற்றத்தை காட்டுவதாக விளக்கம் கூறினர். பரந்த வெகுஜனங்கள் மேட்டுக்குடி ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாளித்துவ ஏகாதிபத்திய செயல்திட்டங்களை நிராகரித்து விட்டனர் என்றும், இலங்கையின் பொருளாதாரத்தையும், சமூகத்தையும் மார்க்சிய வழியில் மறுகட்டமைப்புச் செய்வதற்கான ஆணையை மக்கள் வழங்கியுள்ளனர் என்றும் விளக்கம் தரப்பட்டது. மேலும் சிங்கள பௌத்தர்களுக்கு விசேட கணிப்பை கொடுப்பதற்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது என்று கூறினர். 1970 தேர்தல் முடிவுகள் பற்றிய இந்த விளக்கம் எந்தளவுக்கு சரியானது?

யேம்ஸ்யுப் தனது நூலில் 1960களில் சிறிலங்காவின் 1960க் களின் அரசியல் வாழ்வு பற்றியும், அதன் சிக்கலும் தீவிரமும் பற்றியும் மிகச் சிறந்த விளக்கத்தை தருகிறார். அக்காலத்தை, மரபினதும் நவீனத்துவத்தினதும் கலப்பான இயல்புகளை கொண்டதாக அவர் கூறுகிறார்.[1] பாராளுமன்ற அரசியலும், கட்சி அரசியலும் அதன் உயர் மட்டங்களில் உயர்குழாம் ஒன்றின் விளையாட்டாகவே இருந்தன. இந்த உயர்குழாம் பிரித்தானியா சென்று கல்வி கற்றவர்களையும், ஆங்கிலம் பேசுபவர்களையும், நில உடைமைக் கொவிகம சாதியி லிருந்து தோன்றிய கொழும்பை மையமாகக் கொண்டவர்களான மேலோர்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. அரைவாசிக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு நகரில் அல்லது

அதற்கு அண்மையில் வீடு ஒன்றை வைத்திருப்பவர்களாய் இருந்தனர். பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையின் ஆதிக்கம் மிக்க நான்கு பெரிய குடும்பங்களின் உறுப்பினர்களாக இருந்தனர்.[2] மார்க்சிச அரசியல் கட்சிகளின் தலைவர்களில் பெரும் பான்மையினர் பணம் படைத்தவராயும், ஆங்கிலக்கல்வி பெற்றவர்களாயும் இருந்தனர். ஆனால் இவர்களில் பலர் உயர்சாதியை சேராதவர்களாயும், பெரும் செல்வாக்குள்ள குடும்பங்களுடன் உறவுப்பிணைப்பு இல்லாதவர்களாயும் இருந்தனர். இக்காரணத்தினால் இலங்கையின் இரு பெரும் கட்சிகளில் எக்கட்சியிலாவது உயர் பதவிக்கும் தலைமைத்துவத்திற்கும் தகுதியற்றவர்களாய் ஆயினர். விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட இத்தகைய ஒரு முறைமைக்குள்ளேயே செயறப்பட்டனர். உயர்நிலை அரசியல் தலைவர்கள் சட்ட சபைக்குள் 30 வருடங்களுக்கு மேலாக இருந்திருக்கிறார்கள் என்றும், ‘சதியும் சூழ்ச்சியும” நோய்க்கூறான பகையுணர்வும் மிகுந்த உள்ளூர் அரசியலுக்கு இத்தலைவர்கள் தமது பங்களிப்பை வழங்கினார்கள் என்றும், யேம்ஸ்யுப் கூறுகிறார்.

கடுமையான போட்டி தேர்தல்களின் போது ஏற்பட்டது. அது அரசியல் அதிகாரத்திற்கான போட்டியாகும். இதில் ஈடுபட்ட அரசியல் வாதிகள் வாக்காளர்களின் தேவைகள் என்ன, மனப்பாங்குகள் எத்தகையன என அறிய முயற்சிப்பார்கள். ஆயினும் அரசியல்வாதிகள் இலங்கையின் சாதாரண விவசாயிகளின் வாழ்க்கை பற்றியும் அவர்களது கவலைகள் பற்றியும் அறியாதவர்கள். இதே போன்று தொழிலாளர்கள், கடைக்காரர்கள், இளந்தலைமுறையினர் ஆகியோருடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்புகள் இல்லை. இதனால் அன்றாட அரசியல் பின்னூட்டல் (Political Feedback) திரிபுபட்டது. பிரதமர் சேனநாயக்க உட்பட பல அரசியல்வாதிகள் இலங்கையின் வாக்காளர்கள் குறிப்பாக கிராமத்து வாக்காளர்கள் தெளிவும், பிரக்ஞையும் உடையவர்களாக மாறிவிட்டார்கள் என்று கருதியிருக்க மாட்டார்கள்.

இலங்கையின் சனத்தொகையின் 80 வீதம் எழுத்தறிவு உடையவர்கள். இதனால் பல வகைப்பட்ட பத்திரிகைகள் மக்களின் அரசியல் உணர்வை தட்டி எழுப்பவும், எதிர்கட்சியினது கருத்துக்களை மக்கள் அறிந்து கொள்ளவும் உதவின. பழமைவாத ஏரிக்கரைப் பத்திரிகைகளும் (லேக் ஹவுஸ்), டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகையும், ஐக்கிய

தேசியக்கட்சியை ஆதரித்தன. இவற்றுக்குத்தான் கூடிய விற்பனை இருந்தது. இருந்த போதும் முந்திய காலத்தைப் போன்று ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவுப் பத்திரிகைகளுக்கு அச்சு ஊடகத்துறையில் ஆதிக்கம் இருக்கவில்லை. "சண்" (ஆங்கிலம்) "தவச" (சிங்களம்) என்ற இரு தினசரிகள் சிறிலங்கா சுதந்திரக கட்சி சார்புடையவை. இவை சிங்கள தேசியவாதத்தை ஆதரித்தன. ஆரசாங்கம் தமிழர் உரிமைகள் பற்றி அளவுக்கு அதிகமான அக்கறை காட்டுவதாக இவை தாக்கி எழுதின. கம்யூனிஸ்ட் கட்சியின் தினசரி "அத்த" (உண்மை) சம சமாஜக்கட்சியின் தினசரி "ஜனதின" (மக்கள் தினசரி) என்பன உயர்மட்டத்தில் நிகழும் ஊழல்கள் பற்றி பரபரப்பு தலைப்புச் செய்திகளை பிரசுரித்தன. அரசாங்கத் தலைவர்களை கேலி செய்தன. சாதாரண செய்திப்பத்திரிகைகளை விட இவற்றின் தாக்கம் பெரிதாகும். இவற்றில் வந்த செய்திகளை வாசித்தவர்கள் அதனைப் பிற வாசகர்களுக்குச் சொன்னார்கள். அவை அரசியல் "கிசுகிசு" கதைகளாகப்பரவின. தூரக்கிராமங்களிலும் அச்செய்திகள் பற்றிப் பேசப் பட்டன. பஸ், லொறி சாரதிகள், வியாபாரிகள் தாம் சென்ற இடங்களிற்கு அச்செய்திகளை கொண்டு சென்றனர். ஊர் திரும்பும் உறவினர்களும் இக்கதைகளை கிராமங்களிற்கு கொண்டு சென்றனர். ரேடியோ கேட்டல், பத்திரிகை வாசித்தல் என்பன மக்களிடம் பரவலாக செறிந்த பழக்கங்களாயின. 40 வருடங்கள் தேர்தல்களிற்கும் கட்சியின் பிரசாரக் கூட்டங்களிற்கும் மக்கள் பழக்கப்பட்டிருந்தார்கள். பண்டாரநாயக்க காலத்தில் தேர்தல் நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. அரசியல் பங்கேற்பால் தாம் நன்மைகளைப் பெறலாம் என்பதை கிராமப் புற வாக்காளர்களும் அறிந்திருந்தனர். அரசியல் பேரணிகள், கூட்டங் கள், தேர்தல்கள் என்பன மக்களின் அரசியல் பங்கேற்பை அதிகரிக்கச் செய்திருந்தன. கிராமப்புறங்களில் மக்களை மகிழ்விக்கும் களியாட்டங் களில் ஒன்றாக தேர்தல்கள் விளங்கின. வருடம் முழுவதும் ஏதாவது நிகழ்வுகள் கிராமங்களில் இடம்பெறும். கட்சி ஒழுங்கமைப்பாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல்களில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் ஆகியோர் இந்நிகழ்வுகளில் பங்குபற்றி மக்களுடன் தொடர்பு கொண்டு தமது ஆதரவுப்பலத்தை பெருக்கிக்கொள்ளும் சந்தர்ப்பங்களாக இந்நிகழ்வுகள் அமைந்தன.[10] அரசியல் கட்சி களிடையே ஏற்பட்ட போட்டி 'பிறநாடுகளில் விளையாட்டுக் கழகங் களிடையே வெளிப்படும் உற்சாகத்திற்கும் இடம்பெறும் போட்டிக்கும்" ஒப்பானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.[11]

1970 வரை தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்காளர் விசுவாச மாக இருக்கும் முறை இருந்து வந்தது. இக்காலத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. வாக்காளர்கள் இப்போது தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு அல்லாது கட்சிகளுக்கு விசுவாசம் உடையவர்களாக மாறினர். கட்சி மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்பாளர் ஆக மாற்றம் பெற்றது. மொத்த வாக்காளர் தொகையில் 10 வீதமானவர் களான 600,000 பேர் பிரதான கட்சி ஒன்றின் உறுப்பினராகவோ அல்லது அவற்றின் இளைஞர் பிரிவு, தொழிற்சங்கம் என்பனவற்றில் இணைக்கப்பட்டவர் களாய் அணி சேர்ந்திருந்தனர்.[12] இந்தியாவில் இருந்த நடைமுறையை பின்பற்றி 1956 இல் தேர்தல் சின்னங்கள் புகுந்தன. ஒவ்வொரு கட்சிக்கும் தெளிவான ஒரு அடையாளச் சின்னம் வழங்கப்பட்டது. வாக்குப்பத்திரத்தில் வேட்பாளர்களும் அச்சின்னத்தால் அடையாளம் காட்டப்பட்டனர்.[13] கட்சிகளுக்கென குறிப்பிட்ட நிறங்களும் தேர்ந்து கொள்ளப்பட்டன. ஐக்கிய தேசியக்கட்சிக்கு பச்சை, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு நீலம், மார்க்சியக் கட்சிகளுக்கு சிவப்பு என நிறங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டன. பேரணிகளின் போதும் கட்சியின் நிறத்தை உடைய கொடிகள் பறக்கவிடப்படும். சுவரொட்டிகள் கட்சியின் நிறத்தில் அச்சிடப்படும். உள்ளூர் மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் சில கட்சி உத்தியோகத்தர்களும், பெருந்தொகை கட்சித் தொண்டர்களும் ஆதர வாளாகளும் செயறப்பட்டனர். பேரணிகளை ஒழுங்கு செய்தல், சுவரொட்டிகள், பதாகைகள் ஆகியவற்றை விநியோகித்தல், சாரதி களாகவும், மெய்ப் பாதுகாவலர்களாகவும் செயற்படுதல் போன்ற வேலைகளில் கட்சித் தொண்டர்கள் ஈடுபடுவர். சீருடை அணிந்து கட்சி அணிவகுப்புகள், ஊர்வலங்களிலும் முக்கிய உறுப்பினர்களாகப் பங்கு பற்றுவர். சில தேர்தல் தொகுதிகளில் காடையர்களும், குண்டர் களும் குழுக்களாக கட்சிகளின் திரைமறைவு இருண்ட பகுதி வேலை களில் ஈடுபடுவர். கூட்டங்களைக் குழப்புதல், கலகங்களை தூண்டி விடுதல், எதிரணிகளின் ஆதரவாளர்களை அச்சுறுத்துதல் என்பன வற்றில் இவர்கள் ஈடுபடுவர். தேர்தல் தினத்தன்று எங்கேயாவது குண்டுத் தாக்குதல்களும், மரணங்களும் கூட இடம்பெறும். கட்சிகள் பலமான அமைப்புடையனவாய் இருப்பின் கட்டுப்பாடும் ஒழுக்கமும் பேணப் படும். தேர்தல் முடிந்தவுடன் கட்சி மாறும் வழக்கம் இதனால் குறையும். கட்சி தாவுதல் இலங்கையில் சுதந்திரத்தின் பின் சாதாரண ஒரு விடயமாகியது.[14] 1970 ஐ அண்மிய போது கட்சிகள், ஆதரவு திரட்டுதல், தந்திரோபாய உத்திகளை கையாண்டு தேர்தல்களில் வெற்றி பெறுதல் என்பனவற்றில் முக்கிய பங்காற்றின.

## ஐக்கிய தேசியக்கட்சி

பலமான ஒழுங்கமைப்பும், தந்திரோபாயத் திட்டமிடலும் அவசியமானவையாக இருந்த அக்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி, இரு ஆளுமைகளுக்கு இடையிலான மோதலால் பிளவுற்றிருந்தது. பிரதமர் டட்லி சேனநாயக்க மக்களின் ஆதரவு பெற்றவர். இதனால் தேர்தலில் வாக்குகளை பெறக் கூடியவர். ஐக்கிய தேசியக்கட்சியின் ஜே.ஆர். ஜயவர்தன மிகுந்த திறமை படைத்த நிர்வாகி. இவர்கள் இருவருக்கும் இடையே முரண்பாடுகள் எழுந்தன. இந்த முரண்பாடுகளுக்கான காரணங்கள் சிலரால் விபரித்து எழுதப்பட்டுள்ளன.[15] பொருளாதாரக் கொள்கை, அரசியல் நடத்தை என்பன பற்றிய வேறுபாடுகள் நெருங்கிய கூட்டாளிகளால் மிகைப்படுத்தப்பட்டு முரண்பாடுகள் வளர்க்கப்பட்டன. குறிப்பாக ஜயவர்தன மீது அதிருப்தி கொண்டவர்களும், டட்லி சேனநாயக்கவுக்கு நெருக்கமானவர்களுமான சிலர் இவ்வாறு நடந்து கொண்டனர். டட்லி சேனநாயக்க தன் தலைமைத்துவபாணியை 1950 களில் எவ்வாறு வைத்துக்கொண்டாரோ அவ்விதமே வைத்துக் கொண்டார். தம்மை மாற்றிக்கொள்ளவில்லை. அந்தக்காலத்தில் சில முக்கிய பிரமுகர்கள் அரசியலில் செல்வாக்கு வகித்தனர். தமது சொந்த மதிப்பையும் புகழையும் கொண்டு வாக்குகளைப் பெறலாம் என்று நம்பினர். பிரதமர் டட்லி சேனநாயக்க தனது அலுவலக வேலைகளில் மூழ்கிப் போயிருந்தார். தனது பிரபலத்தையும் செல்வாக்கையும் கொண்டு வாக்குகளைப் பெறலாம் என்பதில் அவர் பெருநம்பிக்கை கொண்டிருந்தார். அவர் அடிமட்டத்தில் கட்சி ஒழுங்கமைப்பு வேலைகளில் ஈடுபடுவதில் அதிகம் அக்கறை காட்டவில்லை. அத்தோடு எதிர்க்கட்சிகள் தமது ஆதரவைப் பெருக்கி மீண்டெழுவதன் சாத்தியம் பற்றி தவறாகக் கணிப்பிட்டார். தனது தனிப்பட்ட ஆளுமைக்கவர்ச்சி பற்றி மிகைப்பட்ட கணிப்பீட்டை வைத்திருந்தார். கடுமையான போட்டியின் மத்தியில் நடக்கப்போகும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளருக்கு வாக்குகளைப் பெறுவதற்கு தமது செல்வாக்கு உதவும் என்பதில் பெருநம்பிக்கை கொண்டிருந்தார்.[16]

திறமையுள்ள, துடிதுடிப்புள்ள இளைஞர்களை தலைமைத்துவப் பதவிகளில் அமர்த்தி கட்சியைப் பலப்படுத்தும் திட்டம் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் செல்வாக்கு கட்சிக்குள் சரிந்து சென்றதால் தளர்வுற்றது. அடிமட்டத்தில் மக்களின் ஆதரவைப் பெற்றவரான சேனநாயக்க, கட்சி ஒழுங்கமைப்பு வேலைகளைப் புறக்கணித்தார். பிரதமர் கட்சியின்

இளைய உறுப்பினர்களுடன் உறவுகளை வலுப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர் நீண்ட காலம் தமக்கு பரிச்சயமான மூத்த உறுப்பினர்கள் சிலருடன் நெருக்கமான உறவுகளை மட்டும் பேணினார். 1965-70 காலத்தில் அரசியலில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் மிக்க இளைஞர்கள் பலர் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் தமக்கு முன்னேற்றத்திற் கான வாய்ப்புகள் இல்லை என்பதைக் கண்டனர். அவர்களில் பலர் புத்துயிர் கொடுக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சியில் இணைந்து கொண்ட னர்.[17] கட்சிக்குள் புதிய இரத்தம் பாய்ச்சப்படவில்லை. அத்தோடு 1965 தேர்தலின் போது முன்னணியில் நின்று வேலை செய்த முக்கிய தலைவர்கள் பலர் அரசியலை துறந்து ஒதுங்கிக் கொண்டனர். அல்லது திருமதி. பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து கொண்டனர்.[18] சேனநாயக்க வின் மேட்டிமைத்தனமான ஆட்சிப்பாணி, ஐக்கிய தேசியக்கட்சி உயர் வகுப்பின் நலன்களையும், வர்த்தக வகுப்பின் நலன்களையும் பாதுகாக் கும் தன்மையுடையது என்ற படிமத்தை மக்களின் மனதில் பதிய வைக்கக் காரணமாக இருந்தது. இந்த உயர் வகுப்பினரும் பழமைவாத வர்த்தக வகுப்பும் தான் டி.எஸ்.சேனநாயக்க, சேர். ஜோன். கொத்தலா வல ஆகியோரின் பக்க பலமாக நின்று செயற்பட்டவர்கள் என்ற அபிப்பராயமும் மக்கள் மனதில் பதிந்திருந்தது.[19]

ஐக்கிய தேசியக்கட்சி அதன் நம்பிக்கைக்குரிய நட்புச்சக்திகள் இரண்டிடமிருந்து முன்னர் பெற்றுக்கொண்ட ஆதரவை இழந்தது. ரோமன் கத்தோலிக்கச் சமூகமும், முஸ்லிம்களுமே இவ்விரு சக்திகள். இவற் றின் ஆதரவை இழந்தமை கட்சியின் பிரச்சினைகளை சிக்கலாக்கியது. தனியார் பாடசாலைகளில் கட்டணம் அறவிடுதல் மீது விதித்திருந்த தடையை பிரதமர் இரத்துச்செய்யவில்லை. அவர் முன்பு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றவில்லை. இதனால் றோமன்-கத்தோலிக்கச் சமூகம் விரக்தியடைந்தது. கத்தோலிக்கர் ஒருவருக்கு மந்திரி சபையில் இடம் கொடுக்கவும் பிரதமர் தவறினார். மேலும் தொழுகைக்குரிய ஞாயிறு விடுமுறையை நீக்கி நோன்மதி நாளான போயாவை விடுமுறையாக்கினார்.[20] இவற்றால் றோமன்-கத்தோலிக் கரின் ஆதரவை இழந்தார். 1967 இன் பின்னர் முஸ்லிம்களில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு மாற்று வழி தேடியோருக்கு இஸ்லாமிய சோஷலிச முன்னணி என்ற புதிய அமைப்பு தன் கதவுகளைத் திறந்தது. இவ் வமைப்பு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான அல்ஹாஜ் பதியுதின் மஹ்முத் அவர்களால் தொடங்கப்பட்டது. இம் முன்னணி கீழ் மட்ட

ஒழுங்கமைப்பு உடையதாக விரைவில் வளர்ச்சியடைந்தது. 1970 இல் 100 க்கு மேற்பட்ட கிளைகளை அது அமைத்திருந்தது. இவ்வமைப்பு ஐக்கிய முன்னணியின் அங்கமாக நின்று 1970 தேர்தலில் நான்கு பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.[21]

## ஐக்கிய முன்னணிக் கூட்டணி

1967 மே மாதத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ சார்பு) என்ற முக்கிய பங்காளிகள் இணைந்து ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியை ஏற்படுத்தினர். இது நடைமுறை அரசியல் நோக்கி இக்கட்சிகள் பயணிக்க உதவியது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பழமைவாத நில உடைமையாளர் பலருக்கு பதிலாக புதியவர்கள் பலர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இப்புதியவர்கள் மார்க்சியப் பொருளாதாரத்தில் அனுதாபம் கொண்டவர்களாயும் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் மிதவாத பிரிவினராயும் திருமதி. பண்டாரநாயக்கவின் விசுவாசமிக்க ஆதரவாளர்களாயும் இருந்தனர்.[22] இக்கூட்டணியில் இணைந்து கொண்ட இரு மார்க்சியக் கட்சிகளும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக கருத்தியல் வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைக்கத் தயாராக இருந்தன. மூன்று கட்சிகளினதும் வாக்காளர் ஆதரவுத்தளங்கள் ஒன்றையொன்று குறை நிரப்புச் செய்வனவாய் அமைந்தன. கண்டியில் கிராமப்புறங்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க காலத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்தி வந்தது. லங்கா சமசமாஜக்கட்சி தனது தொழிற்சங்கங்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தது. கொழும்பிலும் தென்பகுதியின் நகரம் சார் பகுதிகளிலும் வாழும் கூலி உழைப்பாளர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் அக் கட்சியின் ஆதரவாளர்களாய் இருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சியும் பல தொழிற்சங்கங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது. அது கொழும்பில் ஒரு பாதுகாப்பான பாராளுமன்ற ஆசனத்தை தனக்கென வைத்திருந்தது.[23] அக்கட்சி நாட்டின் தென் கோடியில் இருந்த மாத்தறை மாவட்டத்தில் செல்வாக்குடையதாய் இருந்தது.[24]

கூட்டணியின் பங்காளிக்கட்சிகள் மூன்றும் தமக்கென தனி அடையா ளத்தைக் கொண்டிருந்த போதும் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றதும் ' மக்கள் அரசாங்கம' ஒன்றில் ஒன்றாக இணைந்து கொள்வதை ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம்

பிரகடனஞ் செய்தது.[25] இவ்வாறானதொரு இணக்கப்பாடு இலங்கை அரசியலில் காணப்படாத புதிய விடயம். ஏற்கனவே கட்சிக்கு உள்ளே இருந்த பிளவுகளால் பலமிழந்த நிலையில் இருந்த ஐக்கிய தேசியக்க ட்சிக்கு இக்கட்சிகள் ஒன்று சேர்ந்தமை எதிர்க்கட்சியின் மிகப்பெரிய சவாலாக இருந்தது.[26] இதனை விட இம்மூன்று கட்சிகளிடையே ஏற்பட்ட இணக்கப்பாடு போட்டித்தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் சாத்தியமாக்கியது. ஒரு தேர்தல் தொகுதியில் இருந்த அரசாங்க எதிர்ப்பு வாக்காளர்கள் யாவரும் ஒரு வேட்பாளருக்கு தமது ஆதரவை கொடுப்பதற்கு முடிந்தது. வாக்காளர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏனைய கட்சிகள் என்று தம் வாக்குகளை சிதறச் செய்யும் நிலை தவிர்க்கப்பட்டது.

இன்னும் ஐந்து வருடங்களுக்கு அரசியல் அதிகாரம் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற பயம் கூட்டணியைப் பலப்படுத்தியது, தேர்தலின் வெற்றியின் பின்னரும் பங்காளிக் கட்சிகள் ஒன்றாக இணைந்து நிற்பதால் கிடைக்கக் கூடிய நன்மைகளை புரிந்து கொண்டனர். பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தில் மார்க்சிஸ்டுகள் இருந்ததால் முந்திய காலத்தில் ஏற்பட்டது போன்று தொழிலாளர் அமைதியின்மை தனது ஆட்சியைப் பாதிக்காது என்று திருமதி பண்டாரநாயக்க நம்பிக்கை கொண்டார். மார்க்சிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கும் சிங்கள தேசியவாத நிகழ்ச்சி நிரலுக்கும் எதிர்ப்பில்லாமல் ஒத்துப்போவார்கள் என்றும் எதிர்பார்த்தார்.[27] மார்கசிஸ்ட் தலைவர்களுக்கும் நன்மைகள் காத்திருந்தன. அவர்கள் அமைசசுப் பதவிகளைப் பெற்றனர். இதன் மூலம் பொருளாதாரத்தின் மீது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை அதிகரிக்கலாம் என அவர்கள் கருதினர்.[28] ஐக்கிய முன்னணி 25 அம்ச வேலைத்திட்டத்தை அறிவித்தது. இதன்படி வங்கிகள், கனரகக் கைத்தொழில்கள்,அந்நிய உடைமைகளான தேயிலைத் தோட்டங்கள், 'அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதி' என்பன தேசியமயமாக்கப்படவிருந்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பழைமைவாத பிரிவினரின் தீவிர சிங்களச் சார்பு நிலைப்பாட்டில் இருந்து ஐக்கிய முன்னணி இன உறவுகள், சமயம் ஆகிய விடயங்களில் விலகிச் சென்றதாயினும் சிங்களவர்களுக்கும், பௌத்த மதத்திற்கும் சலுகையும் முதன்மை நிலையும் வழங்கப்படுவதை தமது கொள்கை எனத் தெளிவு படுத்தினார். கூட்டணியின் உறுப்பினர்கள் நடுநிலை ஒன்றைத் தெரிந்து கொள்ள முயற்சித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழர் சார்புக்

கொள்கைகளை கண்டித்தனர். அத்தோடு சிறுபான்மையினரைக் கவருவ தற்கும் முயற்சித்தனர். நாட்டின் பிரஜைகள் யாவருக்கும் சமத்துவம் போன்ற தெளிவில்லாத வாக்குறுதிகளை வழங்கினர்.[30] இவர்களின் பேச்சுக்களை நம்பி தம் கருத்துக்களை தமிழர்கள் மாற்றிக் கொள்ள வில்லை. அப்படியாராவது மாறியிருந்தால் அது வெகு சிலராகவே இருந்தனர். இருந்த போதும் கூட்டணியின் தந்திரம், ஐக்கிய தேசியக் கட்சியின் தவறுகள் என்ற இரண்டும் இணைந்த போது ரோமன் கத்தோ லிக்கர்கள், முஸ்லிம்கள் என்ற இரு பிரிவினர்களுக்கு மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த முடிந்தது. இவர்களில் பலர் மரபு வழியாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டனர்.

## சிங்களவரிடையே தீவிரவாதம்: மக்கள் விடுலை முன்னணி (ஜே.வி.பி)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், மார்க்சிஸ தலைவர்களும் தமக்கிடை யிலான கருத்தியல் வேறுபாடுகளைக் கைவிட்டு ஒன்றிணைந்தனர். இவ்விதம் ஐக்கியப்பட்டு ஒரு இடைப்பட்ட கொள்கையை முன்வைத்து தேர்தல் வெறிபெற்று அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல் நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வரும் ஒரு தந்திரோபாயமாகும். ஐக்கிய முன்னணியை அமைத்தது அத்தகையதொரு தந்திரமே. இலங்கையின் கட்சி முறையில் இரு இயல்புகள் முக்கியமானவை. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மார்க்சியக் கட்சிகள் என்ற மூன்றினதும் தலைவர்கள் இலங்கையின் ஆங்கிலம் கற்ற உயர் குழாம் வகுப்பில் இருந்து தோன்றியவர்கள். இரண்டாவதாகக் கட்சி களின் தலைவர்களுக்கு கூட்டணிகள் அமைத்தல் பற்றிய பேரம் பேசுதல், செயல் திட்டங்களை மாற்றிக்கொள்ளுதல் போன்ற பரந்த அதிகாரங்கள் இருந்தன. இந்த இரு இயல்புகளும் ஐக்கிய முன்ன ணியை அமைத்துக்கொள்வதை இலகுவாக்கின.

தலைவர்களுக்கு வசதியாக இருந்த மேற்படி நடைமுறைகள் 1960 களின் பிற்பகுதியில் கட்சிகளில் சில தாக்கங்களை ஏற்படுத்தின. இளம் வாக்காளர்கள் பலர் கட்சித்தலைவர்களில் இருந்து தனிமைப் பட்டு அந்நியமாகிப் போயினர். கட்சித்தலைவர்களுக்கும் இளம் வாக்காளர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்தது. கட்சித் தலைவர்கள் வாக்காளர் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மாட்டார்கள்,

தம் சுய நலன்கள் பற்றியே அக்கறை கொண்டவர்கள் என்ற எண்ணம் வலுத்தது. சிங்கள இளைஞர்களுக்கு 1956 ம் ஆண்டில் பண்டார நாயக்கா வழங்கிய உறுதிமொழிகள் தீர்க்கப்படாமல் இருந்தன. இதனால் தென் பகுதியின் சனத்தொகை அடர்த்தியான பகுதிகளில் வாழ்ந்த இளைஞர்கள் அதிருப்தி கொண்டிருந்தனர். அவர்கள் மத்தியில் பலர் வேலையின்றியிருந்தார்கள். தமது எதிர் காலம் நிச்சயமற்றதாக இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். வேலை எதையாவது பெற்றுக் கொண்டோரும் விவசாயம், சேவைத்தொழில், சிறுகைத தொழில் ஆகிய துறைகளில் குறைந்த கூலிக்கு வேலை செய்தனர். கொழும்பைத் தலைமையாகக் கொண்டு இயங்கிய கட்சித் தலைவர்கள் வர்க்கப் போராட்டம் என்பதை விவாததிற்குரிய பொருளா கவும், கட்சியின் அறிக்கையில் அலங்கார நடையில் எழுதப்படுவதும் என்றே கருதினார்கள். அவர்கள் சிங்கள இளைஞர்களின் விரக்தி நிலையையும் அன்றாடம் அவர்கள் படும் அல்லல்களையும் உணராத வர்களாய் இருந்தனர். குறைந்த கூலி மட்டுப்படுத்தப்பட்ட எதிர்கால வாய்ப்புக்கள் என்பவற்றால் அதிருப்தியுற்ற இவ்விளைஞர்கள் இக் கட்சிகளில் இருந்து தூர விலகிப்போயினர். ஆனால் அவர்கள் புதிய தலைவர் ஒருவரின் குரலுக்கு செவி சாய்க்க தயாராக இருந்தனர். தமது கவலைகளுக்கும், வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக் கூடிய அரசியல் வாய்ப புக்களை ஏற்படுத்தி தம் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய தலைவர்களை அவர்கள் எதிர்பார்த்தனர்.

பட்டபந்தி டொன் நந்தசிறி விஜயவீர இளைஞர்களின் தேவைகளை உணர்ந்த தலைவராக இருந்தார். அவர் ரோகண வியஜவீர (ரோகணவின் வெற்றி வீரன்)என்ற பெயரை வைத்துக் கொண்டார். 1967ல் மக்கள் விடுதலை முன்னணி ( ஜே.வி.பி) என்ற கொரில்லா இயக்கத்தை ஆரம்பித்தார்.[33] சிங்கள பௌத் தேசியவாதம் தீவிர மார்க்சிஸம் என்ற (கலக்க முடியாத) இரண்டு விடயங்களை ஒன்றாகக் கலந்தார். 1971 இலும் பின்னர் 1987-90 காலத்திலும் இரு தடவைகள் அரசாங்கத்தை தீவிர அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கினார்.

இலங்கையின் தென்பகுதியில் சுதந்திரமாக இருந்து வந்த அரசுகளின் வீர மரபுகளை ஞாபகப்படுத்துவதாக விஜயவீரவின் இயக்கம் அமைந்தது. பௌத்த தேசிய வாதத்தின் காவலரண்களாகவும் தென்னிலங்கை தமிழர்களின் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்திய வீரமரபைக்

கொண்டதாகவும் காலனித்துவ கட்டம் வரை தென்பகுதி விளங்கி வந்தது.[34] விஜயவீர தென்பகுதியின் மாத்தறை மாவட்டத்தின் கொட்டே கொட என்ற இடத்தில் பிறந்து வளர்ந்தார். இவரது தந்தை கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்தவர். எனினும் பலரால் அறியப் படாத கட்சி ஆதரவாளராக விளங்கினார்.[35] 1960 ல் மொஸ்கோவில் உள்ள பற்றிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயில்வதற்கான புலமைப்பரிசில் பெற்ற விஜயவீர மொஸ்கோ சென்றார். அங்கு அவர் இருந்த போது சுகவீனம் காரணமாக நாட்டுக்கு திரும்பி வந்தார். மீண்டும் மொஸ்கோ செல்வதற்காக விசாவிற்கு விண்ணப்பித்த போது அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது மொஸ்கோவில் இருந்த போது விஜயவீர சீனச்சார்பு அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்றும், சிறிது காலம் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் சம்பளம் பெறும் உத்தியோகத்தராக அவர் வேலை செய்தார் என்றும் கூறப்படு கிறது. இதனாலேயே அவரது விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது, என்று கருத இந்த இடமுள்ளது.[36] மாத்தளையின் வடகிழக்குப் பக்கமாக கிரிந்த என்ற இடம் உள்ளது. விஜயவீர கிரித்தாவில் ஒரு கோழிப பண்ணையை விலைக்கு வாங்கி னார். இப்பண்ணையை மக்கள் விடுதலை முன்னணியின் நடவடிக்கை களிற்கான தளமாக உபயோ கித்தார். இங்கிருந்த படி விஜய வீர தனது இயக்கத்தின் கருத்தியலை 'ஐந்து விரிவுரைகள்" என்ற வடிவில் தொகுத்தார். 1968ம் ஆண்டு தொடக்கம் சிங்கள இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்துக் கொள்ள வும் மூளைச்சலவை செய்யவும் ஆரம்பித்தார்.

ஐந்து விரிவுரைகளில் கூறப்பட்ட முக்கிய கருத்துக்களாவன: இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஆபத்து, இலங்கையின் நவகாலனித்துவ பொருளாதாரதத்தின் பலவீனம், பெரும்பான்மையான இலங்கையர் களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால அரசாங்கங்கள் தீர்க்கத் தவறியமை, பழைய மார்க்சிய தலைமையின் குறைபாடுகள், 24 மணிநேரத்திற்குள்[37] அரசியல் அதிகா ரத்தை கைப்பற்றும் (ஜே.வி.பி) தந்திரோபாயம். முன்னணியின் இலக்கு அடிப்படையான சமூகப் புரடசியாகும். இப்புரட்சி சிங்களவர்களால் தலைமை தாங்கி நடத்தப்பட வேணடும். அது சிங்கள மக்களின் நன்மைக்கான புரட்சியாகும் புதிய இலங்கையை தாம் எப்படி ஒழுங் கமைப்பார் என்பதை விஜயவீர தெளிவாகக் கூறவில்லை. ஆனால் சீனா,கியூபா,அல்பேனியா ஆகியவற்றை மாதிரியாகக் காட்டினார்.

தென் பகுதிச் சிங்கள மக்களின் கீழ் மட்டங்களில் அமைப்பொழுங்கு களை வைத்துக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி அப்பிரிவினரின் உணர்வுகளையும் கருத்துக்களையும் பிரதிபலித்தது. பிற இடதுசாரிக் குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது அதற்கு வித்தியாசமான பண்புகள் சில இருந்தன. அதற்கு சமசமாஜக் கட்சியுடன் வரலாற்று ரீதியான தொடர்புகள் இருக்கவில்லை. அத்தோடு 1920 களினதும் 1930 களின தும் மார்க்சியத்தோடும் அதற்கு தொடர்பு இருக்கவில்லை. இயக்கத் தின் முக்கிய உறுப்பினர்கள் பௌத்த பிரிவேனாக்களின் கல்வி கற்றோராவர் இப்பிரிவேனாக்கள் பின்னர் பல்கலைக்கழகங்களாயின. ஏனையோர் சிறு நகரங்களின் உயர் நிலை பள்ளிகளில் படித்தவர் களாவர். இப்பள்ளியின் ஆசிரியர்களும் இவ்வியக் கத்தில் சேர்ந்தனர். பெரும்பாலானவர்கள் தாழ்ந்த சாதிகளைச் சேர்தோராக இருந்தனர். அவர்கள் மேலாதிக்கம் உடைய நில உடமைச் சாதியான 'கொவிகம" மீது சாதியடிப்படையிலான குரோத உணர்வைக் கொண்டிருந்தனர்.[39] முன்னணி 'கல்வி முகாம்களை" ஒழுங்கு செய்து ஆதரவைக் கட்டி வளர்க்க முடிவு செய்தனர். இக்கல்வி முகாம்களில் விஜயவீரவும் ஏனைய தலைவர்களும் ஐந்து விரிவுரைகள் குறித்து நீண்ட விளக்கங்கள் அளித்தனர். 1969ல் விஜயவீர பகிரங்கமாக சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு ஆதரவு தெரிவித்த வேளையில் கல்வி முகாம் பாடத்தில் இராணுவப் பயிற்சியையும் ஓர் அங்கமாக சேர்த்துக் கொண்டார். இராணுவப் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டவர் களுக்கு பயிற்சி வழங்க ஆயுதங்கள் இருப்பில் இருக்கவில்லை இதனால் துப்பாக்கிகளின் மாதிரிகள், அவற்றின் படங்கள், கரும்பலகை களில் கீறப்பட்ட விளக்கப்படங்கள் என்பவற்றை உபயோகித்தனர். இருந்த போதும் கட்சியில் இராணுவப் பயிற்சியைப் பெற்ற நன்கு பயிற்றப்பட்ட உயர் நிலைச் சிறு குழு செயற்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் ஒழுங்கமைப்பில் ஒரு இரட்டைத் தன்மை காணப்பட்டது. ஜனநாயக அரசியல் கட்சி ஆகவும் அது இருந்தது. இதனை விட தீவிரவாதிகளின் இரகசிய வலயமைப்பும் இருந்தது. இவ்வாறான இரட்டைத் தன்மை ரோகண விஜயவீர இறக்கும் வரை கட்சியமைப்பின் அம்சமாகக் காணப்பட்டது. 1970ஐ அண்மிய போது விஜயவீரவின் கல்வி முகாமில் ஒரு தடவையோ பல தடவையோ பயின்ற இளைஞர்கள் ஆயிரக் கணக்கானோர் அவரின் தலைமையை ஏற்றனர்.[40] இவர்களில் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் டட்லி சேனநாயக்க உருவாக்கிய 'காணிப்படையில்" முன்னாள் அங்கத்தவர்களாய் இருந்தனர்.[41]

## இலங்கைத் தமிழர்களின் அரசியல் கட்சிகள்

எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்காவின் ஒன்று திரண்ட பௌத்த தேசிய வாதத்தின் எழுர்ச்சியின் காரணமாக தமிழர்களின் மொழி, சமய உரிமைகள் பறிபோயின. இலங்கைத் தமிழர்களின் இருகட்சி களும் இந்த உரிமைகளை பாதுகாக்கும் சக்தியற்றனவாய் இருந்தன. தமிழ் பாரா ளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் டட்லி சேனநாயக்க அரசாங்கம் பதவிக்கு வந்தது. உயர்மட்டத்தில் நிகழும் பேச்சு வார்த்தை உத்திகள் போன்றவை மூலம் தமிழர் உரிமைகளை பெறு கின்ற மரபு வழித் தந்திரங்கள் பற்றிய நம்பிக்கையை இது மீண்டும் ஏற்படுத்தியது. தேசிய அரசாங்கக் கூட்டணியில் சமஷ்டிக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் என்ற இரு கட்சிகளும் அங்கம் வகித்தன. 1956 முதல்1965 காலப் குதியில் இலங்கையின் அரசியலில் பல மாற்றங்கள் நடந்தன. அரசியல் மைய நீரோட்டத்தில் இருந்து தமிழர்கள் அந்நியப் பட்டிருந்தனர். இருப்பினும் இரண்டு தமிழ் கட்சிகளினதும் கட்டமைப்பும் தலைமைத்துவமும் அடிப்படையில் மாறாமலே இருந்தன. கட்சியின் தலைமைத்துவம் சர்வாதிகாரப் போக்கும், மேட்டிமைத்தனமும் கொண்ட தாய் இருந்தது.

சமஷ்டிக்கட்சி சிங்கள அரசியல் கட்சிகளைப் போன்று அடிமட்ட அரசியல் ஒழுங்கமைப்பை பலப்படுத்தி தமது ஆதரவுக் தளத்தை விரிவுபடுத்தவில்லை. இக்கட்சி பணம் படைத்த நில உடமைச் சாதி (வேளாளர்) உறுப்பினர்களின் நெகிழ்ச்சியான ஒரு கூட்டமைப்பாக இருந்தது. அக்கட்சியினர் எஸ் ஜே.வி.செல்வநாயகம் என்ற தளர்வுற்ற முதியவரின் அரசியல் சாணக்கியத்தில் நம்பிக்கை கொண்டு செயற் பட்டனர். டட்லி சேனநாயக்க பிராந்திய சபைகள் சட்ட மூலத்தை கைவிட்ட போது செல்வநாயகத்தின் அரசியல் உத்திகள் உபயோக மற்றவை என்பது நிருபணமாமாயிற்று. இருப்பினும் சமஷ்டிக் கட்சித் தலைமையால் மாற்று வழி எதையும் காண்பிக்க முடியவில்லை. கீழ் மட்ட சாதித் தமிழர்களுக்கும் தீண்டத் தகாதவர்களுக்கும் கூடிய சுதந்திரங்கள் வழங்கும் சீர்திருத்தங்களை இக்கட்சி எதிர்த்தது. கட்சி யின் பலம் மேலும் குன்றியது. கட்சித்தலைவர்கள் யாழ்ப்பாணத்தின் இறுக்கமான சாதிக் கட்டமைப்புத் தகர்வதை ஒரு அச்சுறுத்தலாகக் கருதினர்.

பொன்னம்பலத்தின் தமிழ்க்காங்கிரஸ் கட்சி கொழும்பை மைய மாகக் கொண்டு இயங்கியவர்களும், யாழ்ப்பாணத்தில் தம் வேர்களைக்

கொண்டவர்களுமான அரசாங்க உத்தியோகத்தர்களின் ஆதரவு பெற்ற கட்சியாகும். இக்கட்சி இலங்கையைப் பல்லின சமூகமாக கருதியது. பிராந்திய வேறுபாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்தது. சுதந்திரத்திற்கு பிந்திய காலத்தில் டி.எஸ். சேனநாயக்கா காட்டிய மாதிரியை ஏற்றுக் கொண்டது. தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் இலங்கையின் இன வேறுபாடுகளை, தெற்கு எதிர் வடக்கு என்று பார்க்காமல் இலங்கை முழுவதிலுமாக சிங்களம் தமிழ் என்ற இரு மொழிகளுக்கும் சமத்துவத்தை வழங்கும் முறையூடாக தீர்க்கப்பட வேண்டியவை எனக் கருதினர். பெரும்பான்மையான தமிழர்கள் தமிழ்க் காங்கிரஸ்சை காலத்திற்கு ஒவ்வாத ஒருஅமைப்பாகவே கருதினர். எனினும் பொன்னம்பலத்தின் விசுவாசம் மிக்க ஆதரவாளர்கள் அவரை மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட தலைவர்களுடன் அவருக்கு நீண்ட கால நட்புறவு இருந்து வந்தது. இதனைப் பயன்படுத்தி தமிழர் நலன் களுக்கான அலுவல்களைச் செய்வதே அவரது தந்திரோபாயமாக இருந்தது. இத்தந்திரோபாயம் கூட உபயோகமற்ற ஒன்றாகமாறியி ருந்தது. ஏனெனில் சிங்கள தேசியவாதிகளின் அழுத்தம் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சி என்ற இருபக்கத்திலும் வலுவடைந்திருந்தது.

## தமிழ் இளஞர்கள் ஏன் தீவிரவாத்தை அப்போது தழுவவில்லை?

தமிழ் இளைஞர்கள் இக்காலத்தில் தீவிரவாதத்தில் இறங்கவில்லை. பின்னாளில் அவர்கள் தீவிரவாதிகளாய் மாறி வடக்கின் அரசியலை ஆக்கிரமித்தது மட்டுமல்லாமல், சுதிந்திர இலங்கையின் இருப்பிற்கு அச்சுறுத்தல் விடுத்தார்கள்.[42] இந்த வித்தியாசமான போக்கை எவ்விதம் விளங்கிக் கொள்ளலாம்? தென்பகுதியின் வேலையின்மை, சிங்கள அரசியல் தலைவர்களின் அலட்சியப் போக்கு என்பன தென்பகுதியின் இளைஞர்களைத் தீவிரப்பாதையில் செல்லத் தூண்டின. மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பக்கம் அவர்கள் கவர்ந்திழுக் கப்பட்டனர் என்பதை முன்னர் விபரித்தோம். தமிழ் அரசியல் வாதிகளின் அலட்சியப் போக்கு இன்னுமொருபடி மோசமாக இருந்த போதும் தமிழ் இளைஞர் கள் ஏன் தீவிரவாதத்தில் இறங்கவில்லை? இதற்கான காரணம் குறித்து விரிவான ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை. சிங்கள இளைஞர்களை விட தமிழ் இளைஞர்களுக்கு பொருளாதார வாய்ப்புக்களும் கல்வி வாய்ப்புக்களும் கூடுதலாக இருந்தன என்று கூறலாம். தமிழ் இளைஞர்

களிற்கு உயர்தரமான கல்வி நிலையங்களில் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களுக்கு ஓரளவு ஆங்கில அறிவைப் பெற முடிந்தது. பல்கலைக்கழகம் நுழையும் பரீட்சையிலும் சிங்கள இளைஞர்களை விட சிறப்பாக பரீட்சை எழுதுவதற்கு தேவையான கற்பித்தல் இடம் பெற்றது. சட்டம்,மருத்துவம்,பொறியியல், விஞ்ஞானம் ஆகிய துறை களிற்கு கூடிய அளவில் தெரிவாகினர். இந்தியாவிற்கும் குறிப்பாக தமிழகத்திற்கும் சென்று அவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றனர். டட்லி சேனநாயக்க ஆட்சியில் அரசாங்க கூட்டுத்தாபன உத்தியோகங்களுக்கு விண்ணப்பித்த தமிழர்கள் உத்தியோகம் வழங்குவதில் சமத்துவமாக நடத்தப்பட்டனர். (இருப்பினும் பொலிசிலும் இராணுவத்திலும் தமிழர்களுக்கு கதவடைப்பு தொடங்கிவிட்டது) மன்னார் யாழ்ப்பாண மாவட்டங்களின் வடக்கு மேற்கு கரையோரக் கிராமங்களின் இளைஞர்கள் மீன்பிடியில் கிடைக்கும் வருமானத்தோடு கள்ளக் கடத்தல் வர்த்தக மூலமும் நல்ல வருமானத் தைப் பெற்றனர்.[43] ஆகவே மத்திய அரசாங்கப் பதவிகளில் சிங்கள இளைஞர் ஆதிக்கம் அதிகரித்த போதும் தமிழ் இளைஞர்கள் இலங்கைக்குள்ளேயே முன்னேற்றத்திற்கான வழிகள் இருப்பதைக் கண்டனர். நுண்ணறிவு, உயர்தரமான கல்வி, கடின உழைப்பு என்பவற்றிற்கு பிரதி உபகாரம் கிடைத்தது. சிறிமாவோ பண்டாரநாயக்க பதவிக்கு வந்தவுடன் விரைவாகவே இந்த வழிகளையெல்லாம் மூடினார். அவரது நடவடிக் கைகள் உள்நோக்கம் இல்லாதவையாக இருந்திருக்கலாம். அவை சிங்கள இளைஞர்களுக்கு கூடிய வாய்ப்பை திறந்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப்பட்டது. அவரது ஆட்சிக்காலதில் தமிழ் இளைஞர்கள் தீவிரவாதப்பாதையில் சென்றமை எதிர்வு கூறக்கூடிய விளைவாகவே இருந்தது.

## டட்லி சேனநாயக்கா ஆட்சியில் தொழிற்சங்கங்களின் செல்வாக்கு குறைதல்


தொழிலாளர் குழப்பம் செய்தவிடத்து அரசாங்கம் கடும் நடவடிக்கையை எடுத்தது. அரசாங்கத்தின் இப்போக்கு இன விவகாரங்களில் அது நடந்து கொண்டமுறைக்கு மாறானது. அரசாங்கம் முதலாவதாக சிறிலங்கா ஜாதிக குரு சங்கமய என்ற ஆசிரியர் சங்கத்தின் மீது குறிவைத்தது. இச்சங்கம் 1965 இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்காக தீவிர பிரசாரத்தை நடத்தியது. அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்டத்திற்கு முரணானதாக

இருந்தது. ஆனால் ஆட்சியில் இருந்த அரசாங்கம் அவர்களின் நடவடிக்கை களுக்கு மறைமுகமாக சம்மதம் கொடுத்ததாலும், பதவிக்கு வரும்போது அரசியல் பழிவாங்கலில் ஈடுபடமாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியதாலும், ஆசிரியர்கள் துணிச்சலோடு பிரசாரத்தில் ஈடுபட் டனர். இந்த வாக்குறுதி தமது விடயத்தில் மீறப்பட்டதை ஆசிரியர்கள் கண்டனர். தேர்தல் முடிந்தவுடன் 239 ஆசிரியர்கள் இடை நிறுத்தம் செய்யப்பட்டனர். அவர்களுள் 140 பேர் இறுதியில் அரசியலில் ஈடுபட் டதாக வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். ஒருவருட எல்லைக்குள் மூவாயிரம் ஆசிரியர்கள் இடமாற்றம் அல்லது வேறு விதமான தண்டனைகளுக்கு உள்ளாகினர். அரசியல் பழிவாங்கல் நடைபெற்றது.[44]

1966 ஜனவரி 8ம் திகதி எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து பேரணி ஒன்றையும் பொது வேலை நிறுத்தத்தையும் நடத்தின. அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்தது. வடக்குக்கிழக்குப் பகுதிகளில் நியாயமான தமிழ் உபயோகம் பற்றிய சட்டத்தை கொண்டுவருவதற்கு எதிராகவே இப்பேரணியும் வேலைநிறுத்தமும் நடைபெற்றது.[45] மீண்டும் அமைதி திரும்பியதும் அரசாங்கம் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பலரை பதவியிலிருந்து இடைநிறுத்தியது. வேலைக்கு வராத அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தண்டப்பணம் விதித்தது. கூட்டுத்தாபன ஊழியர்களும், இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களும், வேலை நீக்கம் செய்யப்பட்டனர் (சிலர் பின்னர் மீள வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்கள் சேவைமூப்பை இழந்தனர்) இந்த நடவடிக் கைகள் எதிர்க்கட்சிகளுக்கு சார்பான தொழிற்சங்கங்களுக்கு ஒரு செய்தியை தெரிவித்தன. என்பதோடு ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிப்பதற்கு சந்தர்ப் பத்தையும் வழங்கியது.[46] அரசியல் நோக்கம் கொண்ட வேலைநிறுத் தத்தை ஒழுங்கு செய்வதற்கு மேலும் மூன்று வருடங்கள் சென்றன, இந்த வேலைநிறுத்தமும் தனது நோக்கங்களை அடைவதில் வெற்றி பெறவில்லை.[47]

தொழிற்சங்கள் மீது கட்டுப்பாடுகளை வலுப்படுத்தியது இன் னொரு வகையில் அரசாங்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. தமது அதிகாரம் பறிபோனதால் ஆத்திரமுற்ற தொழிற்சங்கத் தலைவர்கள் 1970 ல் ஐக்கிய முன்னணியின் வெற்றிக்காக தீவிரமாக பிரச்சாரம்

செய்தனர். தங்களின் கீழிருந்த தொழிலாளர்களையும் அரசாங்கத்தை தோல்வியடையச் செய்ய வாக்களிக்குமாறு தூண்டினர். டட்லி சேனநாயக்காவிற்குதலைக்கு மேலாக பல பிரச்சினைகள் குவிந்து கொண்டிருந்தன. தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு என்ற இந்தப் பிரச்சனை அவற்றோடு ஒன்றாக சேர்ந்து கொண்டது. 1970மே27ம் திகதி பிளவுபட்ட நிலையிலும், பிரச்சினைகளின் மத்தியிலும், அரசாங்கம் தேர்தலை எதிர்கொண்டது. மேலும் ஐந்து வருடம் நாட்டை ஆள்வதற்கான ஆணையை வாக்காளரிடம் கோரியது.





உரு 2.1 அரச அங்கிகாரத்துடனான வன்முறையும் வன்முறை மோதலும்

## அரச அங்கிகாரத்துடன் கூடிய வன்முறை

டட்லி சேனநாயக்காவின் அரசியல் எதிரிகள் கூட அவரின் அரசாங்கத்தை ஒடுக்குமுறை அரசென்று கூறவில்லை. அவரது சமகாலத்தவர்கள் தம் நினைவுகளை மீட்டுப்பார்க்கும் போது அவரை ஒரு லிபரல் ஆகவே குறிப்பிடுவர். அவர் எப்போதும் பிரித்தானியா லிபரல் மரபுகளையும் அடிப்படை ஜனநாயக சுதந்திரங்களையும் மதித்தவர். என்றும் சுதந்திரத்தை அவதானத்துடனும் கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்த வேண்டும், பொது ஒழுங்கைப் பாதுகாப்பது அரசாங்கம் ஒன்றின் பிரதான கடமை என்பன போன்ற கருத்துக்களை அவர் கொண்டிருந்தார். பொப்பியுலிஸ்ட் (மக்கள் வாதம் ) சொல்லாடல்களை அவர் விரும்பியதில்லை மக்கள் ஆணை என்பதற்கு பதில் சட்டத்தின் ஆட்சி

(Rule of ofleave) என்பதற்கே அவர் மதிப்புக்கொடுத்தார். ஒரு லிபரல் ஆக இருந்த போதும் இலங்கையின் அரசியலில் வெற்றிபெறுவதற்கான எழுதப்படாத விதிமுறைகள் (rules of the game) சிலவற்றை ஏற்றுக் கொண்டார் இவையில்லாமல் அரசியல் நடத்த இயலாது எனச் சிலர் நம்பினர் அவ்வகையில் டட்லி சேனநாயக்கா ஒரு ஐதார்த்தவாதி யாவார். பிற கட்சிகள் போன்றே ஐக்கிய தேசியக் கட்சியிலும் கொடுத்த வேலையை கச்சிதமாக முடிப்பவர்களும், காடையர் குழுக்களும் இருந் தன. இவற்றின் செயல்களை உயர்மட்டத் தலைவர்கள் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளா விடினும் மறைமுகமாக அனுமதித்தார்கள்.




உரு: 2.2 அரச ஆதரவுடான வன்மறையின் அங்கங்கள்

உரு 2.1இல் டட்லி ஆட்சிக் காலதில் அரச அங்கிகாரத்துடன் நடந்த வன்முறை வன்முறை மோதல்கள் பற்றிய ஒட்டுமொத்தமான போக்கு விளக்கப்பட்டுள்ளது. ஆட்சியைப் பிடித்த தொடக்க மாதங்களில் டட்லி சேனாநாயக்காவின் மிதவாதமும் அரசியலை தாராண்மை படுத் தலும் வெளிப்பட்டது. அக்காலத்தில். அரச அங்கிகாரத்துடன் நடத்தப் பட்ட வன்முறையின் குறிகாட்டி தாழ்ந்த மட்டத்தில் இருப்பதை உரு2:1ல் பார்த்து தெரிந்து கொள்ளலாம். அவரது அரசாங்கம் சிங்களச் சார்பு நிகழ்ச்சி நிரலை தீவிரமாக ஆதரிக்கவில்லை. அதேவேளை கண்டன முறையில் எழுதப்பட்ட பிரசுரங்களையும் எழுத்துக்கயையும் கட்டுப் படுத்தவில்லை. தமிழ்க் கட்சிகள் ஆளும் கூட்டணியின் பங்காளிக ளாக இருந்ததால் சிவில் ஒத்துழையாமை போன்ற செயல்களை ஊக்கு விக்கவில்லை.

1966 ஜனவரி மாதம் வன்முறைச் சுட்டி திடீரென உயர்ந்தது. உத்தியோக மொழிக் கொள்கையில் சேனநாயக்கா தமிழர்களுக்கு விட்டுக் கொடுத்து விட்டார் என்ற குற்றச்சாட்டை வைத்து அரசாங்க் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. அவசரகால நிலையையும் பிரகடனம் செய்தது. இந்த ஆர்ப்பாட்டங்கள் தணிந்த பின்னரும் அரசாங்கம் அவசர நிலையைத் தொடர்ந்து வைத்திருந்தது. இராணுவத்தில் உயர் பதவி வகித்த ஒருவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தொடர்புடைய புத்தபிக்கு ஒருவரும், இணைந்து சதிப்புரட்சி ஒன்றைத் தீட்டினார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டதை காரணம் காட்டி அவசர கால நிலை நீடிக்கப்பட்டது. அவசர கால நிலை நீடித்ததன் காரணமாக அரசியல் யாப்பின் உத்தரவாதங்கள் மீறப்படுதல் நீதிவிசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைத்தல், உணர்ச்சியைத் தூண்டுவன வாய் உள்ள எதிர்க்கட்சியின் பிரசுரங்ள் மீது கடுமையான தணிக்கை என்பனவும் நடைமுறைப் படுத்தப்பட்டன. இவ்வாறு அரசாங்கம் கடும் நடவடிக் கைகளை எடுத்ததும், அரசியல் நோக்கமுள்ள வேலைநிறுத்தங்கள் மீது உறுதியான நடவடிக்கைகள் மேற்கொண்டதும், இனப்பிரச்சினை தொடர்பில் விட்டுக்கொடுக்கும் நெகிழ்வுப் போக்கைப் பின்பற்றியதும் வன்முறையின் அளவைக் குறைக்க உதவின. 1968-70 காலம் அமைதி யாகவே இருந்தது. அரசியல் மோதல்களைத் தணிக்க முடிந்ததால் அரசாங்கம் அவசரகால விதிகளின் பிரயோகத்தை தளர்த்தியதோடு 1969 ஜனவரி மாதம் அவற்றை முற்றாக நீக்கியது. 1969 க்கு பிந்திய 15 மாதங்கள் தேசிய அரசாங்கத்தின் அமைதி நிலவியது. இக்காலம் 1956க்கு முற்பட்ட காலம், திருமதி பண்டாரநாயக்கா ஆட்சியின் ஆரம்ப காலம் ஆகியவற்றோடு ஒப்பிடக் கூடியது.[49] அரசாங்க அங்கீகாரத் துடனான வன்முறை மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது. தீவிரவாதக் கட்சிகள் சிலவற்றிற்கு தொல்லைகள் கொடுக்கப்பட்டதும், அவற்றின் பிரசுரங்கள் தணிக்கை செய்யப்பட்டதும் உண்மையே எனினும் மைய நீரோட்ட கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மார்க்ஸிச கட்சிகள் என்பன மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. சிங்களம் மட்டும் சட்ட விதிகளை அமுல் செய்வதில் அரசாங்கம் நெகிழ்வுப்போக்கை பின்பற்றி யது. தமிழர்களின் உரிமைகளை நசுக்குவனவும் அவர்களது அரசியல் யாப்பு உரிமைகளை பறிப்பனவும் ஆகிய சட்டங்கள் சட்டப் புத்தகங்களில் மட்டும் நீடித்தன.[50]

டட்லி சேநானாயக்காவின் அவசரகால நிலைப் பிரகடனம் எதிர்க் கட்சிகளுக்கு எதிராக கடுமையான அடக்குமுறைகளை நடைமுறைப் படுத்தச் சந்தர்ப்பத்தை வழங்கியது.[51] சமசமாஜக் கட்சியின் பத்திரிகை யான "ஜனதின" பிரதமரைத் தாக்கி எழுதிய கட்டுரை ஒன்றை, அவர் மீதான "அவதூறு" எனக் குற்றம் சாட்டிய அரசாங்கம், அப்பத்திரிகை யின் பிரசுரத்தை ஐந்து மாதகாலம் தடைசெய்தது.[52] ஏனைய இடதுசாரிப் பத்திரிகைகளை இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் விநியோ கத்திற்காக எடுத்துச் செல்வதையும் தடை செய்தது. "அவதூறானவை யும்" உணர்சியைத் தூண்டுவனவுமான விடயங்களைப் பிரசுரிக்கின்றன என குற்றம் சாட்டி எதிர்க்கட்சிப் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் வழங்குவதை அரசாங்கம் நிறுத்தியது. இதனால் கூட்டுத்தாபனங் களினதும் அரசாங்க திணைக்களங்களினதும் விளம்பரங்களை வெளியிடுவதனால் பத்திரிகைகளுக்கு கிடைக்கும் வருமானம் எதிர்க் கட்சிப் பத்திரிகைகளுக்கு கிடைக்காமல் செய்யப்பட்டது. மேஜர் ஜெனரல் உடுகமவும் வேறு 27 பேரும் புரட்சிச் சதியின் முக்கிய தலைவர்கள் என்று குற்றம் சாட்டி நீண்ட காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். இவர்களின் கைதையும் தடுப்புக் காவலையும் அவசர கால நிலைப் பிரமாணங்கள் இலகுவாக்கின. இவர்களில் சிலர் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர் எனினும் எவரும் நீதிமன்றத்தினால் குற்றத் தண்டனை விதிக்கப்படவில்லை.[53]

அவசர கால நிலை மூன்று வருடங்கள் நீடித்த போதும் 1966 இன் பின்னர் அரச அங்கீகாரத்துடன் கூடிய வன்முறைகள் அதிகம் இடம் பெறவில்லை. செய்தித் தணிக்கை விரைவில் தளர்த்தப்பட்டது. எதிர்க் கட்சி அரசியல் தலைவர்களை கைது செய்தல் தொல்லை கொடுத்து துன்புறுத்தல் ஆகியன பெரிதாக இடம் பெறவில்லை. 1968 ஜனவரி மாதத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட எல்லோருக்கும் அடையாள அட்டை களை அரசு விநியோகித்தது.[54] இது அரசாங்க அங்கீகாரத்துடனான வன்முறைக்கு ஒரு உதாரணமாகக் காட்டப்பட்டது. ஆனால் இது பின்னர் இலங்கையில் பெரிய சர்ச்சையையோ அச்சத் தையோ ஏற்படுத்தவில்லை.

மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் கைதோடு தொடர்புடைய இரு சம்பவங்கள் இக்காலப்பகுதியில் இடம்பெற்றன. இச்சம்பவங்களை வைத்துக் கொண்டு அரசாங்கம் ஒடுக்கு முறையைத் திட்டமிட்ட

வகையில் செய்து வந்தது என்ற கூற முடியாது.[55] 1970 ம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணி சட்டப்படி பதிவு செய்யப்பட்ட கட்சியாக இருந்த வேளை, அதன் தலைவர் ரோஹண விஜயவீர இரகசியமாக இராணுவ பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்று கூறும் செய்தி அறிக்கைகள் வரத்தொடங்கின இலங்கையின் அப்போதைய பொலிஸ்மா அதிபர் இது குறித்து தனது கவலையை வெளியிட்டார். ஜே.வி.பி யின் இராணுவப் பயிற்சிகள் ஒரு வருடத்துக்கும் மேலாக தொடர்ந்தன. ஆனால் அக்கட்சி பகிரங்கமாக அதை மறுத்தது. பொலிஸ் திணைக்களம் இதற்காக விசேட அலகை உருவாக்கி விசாரணைகளை நடத்தியது. பயிற்சிகள் நடை பெற்றதற்கான ஆதாரங் கள் கிடைத்தன ரோஹண விஜயவீரவும் கட்சித்தலைவர்கள் வேறுபல ரும் கைது செய்யப்பட்டனர். ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின் பொலிஸ் விசேட அலகு மூடப்பட்டது. விஜயவீர விடுதலை செய்யப்பட்டார். திருமதி பண்டாரநாயக்கா தனது இச் செயலுக்குப் பின்னர் வருந்த வேண்டி ஏற்பட்டதை எனது நூலில் இன்னொரு அத்தியாயத்தில் விளக்குவேன்.

பாதுகாப்புப் படைகள் பொது ஒழுங்கைப் பாதுகாப்பதை நோக்க மாகக் கொண்ட அரசாங்கம் பதவியில் இருந்தால் அமைதியிருக்கும். அத்தோடு அத்தகைய அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக சமரசத் தீர்வுகளை காண முயற்சித்தால் நாட்டில் பிரச்சினை குறையும. தேசிய பாதுகாப்புப் படையொன்று நாட்டை ஆளுவதற்கு போதுமானது. டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் பற்றிய கொள்கை, படைகளின் ஒழுங்கமைப்பு, அவற்றின் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு கள் மிகவும் குறைவு.[58] ஆவரது ஆட்சிக் காலத்தில் பௌத்தர்களான இராணுவ உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சதியை ஒரு சிறிய விடயம் என்று கூறி ஆய்வாளர்கள் அது பற்றி கவனம் செலுத்தத் தவறி விட்டனர். ஆனால் முன்னர் அரசியல் சார்பில்லாதவையாக இருந்த ஆயுதப் படைகளுக்குள் இனப்பிரச்சினை பற்றிய அரசியல் புகுந்து கொண்டது, இச்சதி முயற்சி இதன் ஒரு குறியீடாகும்.[59] பிரதமர் ஆயுதப் படைகளில் சீர் திருத்தத்தை கொண்டு வரவும் அங்கு வினைத் திறன் விருத்தியை ஏற்படுத்தவும் முயற்சித்தார். இருப்பினும் இது அவரின் முன்னுரிமையாக இருக்கவில்லை."ஆயுதங்கள் இல்லாத" பாதுகாப்புப்படை, "புறக்கணிக்கப்பட்ட" பாதுகாப்புப்படை, சிறிய பாது பாப்புப் படை என்ற வகையில் இக்காலத்தில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் வர்ணிக்கப்பட்டன.

முன்னைய கால நிருவாகத்தின் போது பொலிஸ் படை என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என கூறப்பட்டதோ அவ்வேலைகளே இக்காலத்திலும் பொலிஸ் படையால் செய்யப்படடன. அரசியல் பேரணி களை கட்டுப்படுத்தல், குழப்பங்களை கட்டுப்படுத்துதல், பொது ஒழுங்கைப் பாதிக்க கூடிய தொழில் தகராறுகளில் தலையிடுதல் என்பன பொலிஸாரின் கடமைகளாகக் கருதப்பட்டன. அவசர கால நிலை அமுலில் இருந்த போது ஆட்களைக் கைது செய்து காவலில் வைத்திருக்கும் மேலதிக அதிகாரமும் பொலிஸிற்கு இருந்தது. உணர்சியூட்டும் அல்லது தீங்கான பிரசாரங்கள் மக்களிடம் போய்ச் சேராமல் தடுக்கும் அதிகாரமும் அவசரகால நிலையின் போது பொலிஸிற்கு இருந்தது.

1965-70 காலப்பகுதியில் குழப்ப நிலையை உருவாக்கிய சம்பவங்கள் சில இடம் பெற்றன. 1966 ம் ஆண்டின் தமிழ் மொழி அமுலாக்கல் சட்டம் அரிசி மானிய வெட்டு என்பவற்றோடு தொடர்புடைய சம்பவங் கள், பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், இரண்டு பொது வேலைநிறுத்தங்கள், கொழும்பிலும் திருகோணமலையிலும் இடம் பெற்ற துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் என்பன இக் காலத்தின் முக்கிய குழப்பங்கள். இவை தனித்தனியான சம்பவங்களே அன்றி தொடர்ச்சியான போக்கைப் பிரதிபலிக்கவில்லை, இவை குறுங் காலத் தில் முடிவடைந்தன. அரசாங்கமும் விரைந்து இவற்றை தணித்து அமைதியை நிலை நாட்டியது. இவற்றை முன்னைய காலத்தில் பண்டாரநாயக்கா ஆட்சியின் போது ஏற்பட்ட குழப்பங்களுடன் ஒப்பிடமுடியாது. சேனநாயக்கா ஆட்சியில் ஒப்பீட்டளவில் அரச அங்கீகாரத்துடனான வன்முறை குறைந்த மட்டத்தில் இருந்தது.

சேனநாயக்கா ஆட்சியில் பொலிஸ் அதிகாரிகளுக்கு அவர்களின் நடவடிக்கைளை அரசாங்கம் ஆதரிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. இதனால் அதிகாரிகள் பொது ஒழுங்கைப் பாதுகாப்பதில் மன உறுதியோடு நடவடிக்கை எடுத்தார்கள் (எஸ்.டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்கா ஊாவலங்களில் தலையிடாமல் கை கட்டிப்பார்த்துக் கொண்டிருக்கும்படி பொலிஸிற்கு அறிவுறுத்தினார்).1966ம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற தமிழ் மொழிக்கலகத்தில் பொலிஸ் எடுத்த நடவடிக்கையை டட்லி சேனாநாயக்கா நியாயப்படுத்திப் பேசினார். அப்போது ஒரு புத்த பிக்கு உயிர் இழந்த போதும் பொலிஸிற்கும் பொதுமக்களிற்கும் ஒரு விடயம்

தெளிவுபடுத்தப்பட்டது. கலகங்களை விளைவித்தலை அரசியல் தந்திர மாக கையாள்வதை அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை என்பது சொல்லப்பட்டது. பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பான்மையினர் சிங்களவர்களாக இருந்தனர். சேனநாயக்காவின் இன உறவுக் கொள்கைகள் நாட்டில் பதட்ட நிலையை ஏற்படுத்தவில்லை. இதனால் பொலிசார் ஒரு அந்நிய ஆக்கிரமிப்புப் படையாக நோக்கும் நிலை தோன்றவில்லை. வடமாகாணத்தில் பொலிஸ் தலைமைப் பதவிக்குப் பிரதமர் தமிழர் ஒருவரை நியமித்தார். இவர் மிகவும் மதிக்கப்பட்ட ஒரு உயர் அலுவலர் ஆதலால் சமுதாயத்துடன் நல்லுறவுகளை வளர்த்தார். பண்பாட்டு வேறுபாடுகளின் முக்கியத்துவத்தை தனது உத்தியோகத்தர்களுக்கு உணர்த்தியதோடு மரபு வழிப்பட்ட பொலிஸ் கடமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

பிரதமர் பதவியேற்ற சிறிது காலத்திற்குள் சுதந்திரமான பொலிஸ் ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். இதன் மூலம் பொலிஸ் முகாமைத் துவத்தையும் ஒழுங்கமைப்பையும் பலப்படுத்தும் தமது எண்ணத்தைப் பகிரங்கப்படுத்தினார். இலங்கை சுதந்திரம் அடைந்த பின் இத்தகைய பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும். இவ்வாணைக்குழுவின் உறுப்பினர்கள் திணைக்களத்தின் அலுவல்கள் பற்றி ஆராய்ந்து பொலிஸ் சேவையை மேம்படுத்தவும், அவற்றை வினைத்திறன் உடையதாக்கவும் வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல் ஆணைக்குழுவின் பணியாகும்.[63]ஆணைக்கு நியமிக் கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு, பயிற்சி, நிர்வாக நடைமுறைகள் என்ப வற்றில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.[64] இம்மாற்றங் களிற்கும் பொலிஸ் ஆணைக் குழுவிற்கும் ஏதாவது சம்மந்தம் உள்ளதா என்பது தெளிவாக இல்லை.

ஆட்சேர்ப்பு முதலிய மாற்றங்கள் நிகழ்ந்த போதும் பொலிஸ் திணைக்களத்திற்கு நிதிவழங்குதல் வரவு செலவுத் திட்ட முன்னுரிமை களில் ஒன்றாக இருக்கவில்லை. திணைக்களத்திற்குத் தேவைப்படும் நவீன ஆயுதங்கள் கருவிகள் கிடைக்கவில்லை. ஆளணியும் அங்கீ கரிக்கப்பட்ட அளவில் இருக்கவில்லை. 1967 ஆம் ஆண்டு அறிக்கை யொன்றில் கொழும்பு நகரில் பொலிஸ் ஆளணி போதியதல்ல எனவும் அங்கு நடைபெறும் பேரணிகளிலும், அரசியல் நிகழ்வுகளிலும் பங்கு பற்றுவதற்காகத் திரளும் சனத்திரளைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆளணி

பொலிஸிடம் இல்லை எனக் கூறப்பட்டது. கொழும்பு நகரத்தை அடுத்த நகரங்களில் இருந்து அக்கடி பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவைக்காக அழைக்க வேண்டியுள்ளதாகவும் அதனால் கொழும்பை அண்மித்த பகுதிகளில் வேலைகள் பாதிக்கப்படுவதாகவும் இவ்வறிக கையில் கூறப்பட்டது.[65] 1968 இல் சிங்கள மொழித் தினசரி ஒன்றில் ஒரு செய்தி வெளியானது. வடபகுதியில் கள்ளக் கடத்தலை கட்டுப்படுத்தும் வேலைக் கென ஒரே ஒரு ரோந்துப்படகு இருந்ததாகவும், அப்படகு திருத்த வேலைக்காக 1965ல் கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டது. என்றும் அதன் திருத்த வேலைகள் முடியவில்லையெனவும் அச்செய்தியறிக்கை கூறியது.[66]

டட்லி சேனாநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் ஆயுதப் படைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. பாதுகாப்புச் செலவுகள் 15 வீதத்தால் அதிகரித்த போதும் மொத்தச் செலவுகளில் பாதுகாப்புச் செலவுகளின் வீதாசாரம் குறைந்தது. இராணு வத்தில் 6000 பேரும் கடற்படையில் 2000 பேரும் விமானப்படையில் 1500 பேரும் இருந்தனர்.[67] இவ்வெண்ணிக்கை திருமதி பண்டார நாயக்கா காலத்தில் இருந்த அளவுக்கு ஒப்பானதாகவே இருந்து. மூன்று சேவைகளுக்கும் தனித்தனியாக பயிற்சி நிறுவனங்கள் இக காலத்தில் அமைக்கப்பட்டமை வாண்மை (Professionalism) விருத்தியில் காட்டிய அக்கறையை வெளிப்படுத்துகிறது. 1966 சதிப் புரட்சி முயற்சி அச்ச உணர்வைத் தோற்றுவித்த போதிலும் ஆயுதப் படைகளின் உத்தியோகத்தர்களிடையே கிறிஸ்தவர்களையும் சிறுபான்மை யினரையும் எண்ணிக்கையில் கூட்ட வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

இக்காலப்பகுதியில் இராணுவ சேவை ஏனைய அரச சேவைகள் போன்று மதிப்புக்கும் கௌரவத்திற்கும் உரியதாக இருந்தது. விண்ணப் பிப்போர் தொகை இருக்கும் வெற்றிடங்களை விட மிக உயர்வாக இருந்தது. இன மோதல்கள் குறைந்த மட்டத்தில் இருந்ததால் பொலிசுக்கு உதவியாக கலகத் தடுப்பிற்காக இராணுவத்தை அழைக் கும் தேவை எழவில்லை.[63] பயிற்சியும் சம்பிரதாய பூர்வமான சடங்கு களுமே, இராணுவத்தின் பிரதான வேலைகளாக இருந்தது. கடற்படை யின் 30 ரோந்துப் படகுகளும் வான் படையின் 24 விமானங்களும் பொலிசாலும் சுங்கப்பகுதியினராலும் கள்ளக் கடத்தலை கட்டுப்படுத்தும்

வேளையில் உதவிக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. கள்ளக்கடத்தலைக் கட்டுப்படுத்தும் இவ்வேலை செயற்திறன் மிக்கதாக இருக்கவில்லை. இலங்கையை ஆசிய நாடுகளுடனும் ஏனைய அபிவிருத்தி நாடுகளுடனும் ஒப்பிடும் ஒருவர் சேனநாயக்காவின் இலங்கையில் "இராணுவப் படைக்குறைப்பு" நிகழ்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.[70]

## 1970 பொதுத் தேர்தல்


1970 மே 27ம் திகதி தேர்தல் வாக்களிப்பு முடிந்த பின் இரவு வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் சேனநாயக்காவின் கொழும்பு வாசஸ்தலத்தில் கூடியிருந்தனர், தேர்தல் முடிவுகளை ஆதரவாளர்கள் தொலைபேசிமூலம் அறிவித்துக் கொண்டிருந்தார்கள், இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத தோல்வி ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்திருப்பதை கட்சியின் தலைவர்கள் அன்று உணர்ந்தனர். 129 ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களில் 17பேர் மட்டும் வெற்றி பெற்றிருந்தனர். பிரதமரின் கிராமப்புறத் தொகுதியான டெடிகமவில் முன்னர் அறியப்படாத ஒருவரை பிரதமர் 1067 வாக்கு வித்தியாசத்தால் மட்டும் வெற்றிகொள்ள முடிந்தது. சேனநாயக்காவின் 17அமைச்சர்களில் 11பேர் தோல்வியுற்றனர். கொழுப்பு நகரில் மட்டும் ஜே.ஆர். ஜயவர்த்தன உட்பட மூன்று பேர் வெற்றிபெற்றனர். ஐக்கிய தேசியக் கட்சி தனது மரபுரிமையான தளம் என்ற வகையில் கொழும்பில் மட்டும் தனது இடத்தைப் பறிபோகாமல் பாதுகாத்துக் கொண்டது. [71]

மக்களின் அதிருப்தி ஐக்கிய தேசியக் கட்சியின் மீது திரும்பியது. தேர்தல் பிரசாரம் வாக்குகளைக் கவர்ந்து அரசாங்கத்தைத் தோற்கடிக்கும் வகையில் செய்யப்பட்டது. வர்க்கம் இனம் சார்ந்த பிரிவினை உணர்வுகள் தூண்டப்பட்டன. செல்வந்தர்களின் செல்வத்தை ஏழைகளிற்கு பகிர்ந்தளிக்கும் முறையிலான கொள்கைகள் நிறைவேற்றப்படும், சமூக நலன் வசதிகளைப் பெருக்குவதற்காக நிதியீட்டம் செய்யப்படும், என்பன தேர்தல் உறுதிமொழிகளாகப் பிரசாரம் செய்யப்பட்டன.[72] 1968 மார்ச் மாதம் உருவாக்கப்பட்ட ஐக்கிய முன்னணி 25 அம்சத் திட்டம் ஒன்றை முன்வைத்தது. இத்திட்டத்தை அமுல்படுத்தும் வேலைகள் முன்னணியினரால் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையில் முந்திய காலங்களில் ஏற்படுத்தப்பட்ட கூட்டணிகளை விட ஐக்கிய முன்னணியில் ஒற்றுமையிருந்தது. தெளிவான ஒரு நோக்குடன் தேர்தலுக்கு முந்திய இரு வருட காலமும் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

கூட்டணி ஒருமித்த கருத்தோடும் உறுதியோடும் ஒவ்வொரு பிரச்சினையின் போதும் ஒரே குரலில் பேசியது. அதன் நடவடிக்கைகள் அரசாங்கம் ஒன்றின் செயற்பாடு போன்று சமாந்தரமாக சென்றுகொண்டிருந்தன என்று ஒரு அரசியல் விமர்சகர் குறிப்பிட்டார்.[73]

தேர்தலுக்கு முன்னர் திருமதி பண்டாரநாயக்க வெளியிட்ட விஞ்ஞா பனத்தில் ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்த வேண்டிய முக்கிய கருத்துக்கள் கூறப்பட்டன. வேட்பாளர்கள் அக்கருத்துக்களை தமது பிரசுரங்கள் மூலமும், தமக்கு ஆதரவு கொடுத்த அமைப்புக்கள் மூலமும், பிரசாரம் செய்தனர். டட்லி சேனநாயக்கவின் அரசாங்கத்தை சந்தர்ப்பவாதிகளின் “விநோதமான கூட்டு“ என்றும், பிரிந்து சென்றவர்களையும் தமிழ் சமஷ்டிவாதிகளையும் இணைத்த குழு என்றும் வருணித்தனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் கேலி செய்யப்பட்டன. பணவீக்கம், கடன் சுமை, வேலையின்மை எனபவற்றை அதிகரித்ததோடு இலங்கையை சர்வதேச நிதி மூலதனத்திற்கும், ஏகாதிபத்திய பொருளாதார நிறுவனங்களிற்கும், சர்வதேச வர்த்தகக் கூட்டுத்தாபணங்களிற்கும் அடகுவைத்துவிட்டதாகக் குற்றம் சாட்டினர். 1956ஐ விட 1970 இல் இனப்பிரச்சினை சார்ந்த விடயங்கள் குறைந்தளவு முக்கியத்துவம் பெற்றபோதும் சிங்கள மக்களிற்கு செய்யப்பட்ட பிரசாரத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு தமிழர்கள் பலம் சேர்த்து ஆட்சியில் அமர்த்தியிருப்பது சுட்டிக் காட்டப்பட்டது. 1965 பாராளுமன்றத்தில் தமிழர்கள் அதிகாரச் சமநிலையைத் தீர்மானிப்பவர்களாக, ஆகிவிட்டதையும் டட்லி சேனா நயக்காவை தொடர்ந்து 5 முழு வருடங்களுக்கு ஆட்சியில் இருக்க வைக்க அவர்கள் துணை செய்தனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. ஐக்கிய முன்னணிக்கு அறுதிப் பெரும்பான்மையை வழங்கி பலப்படுத்தினால் தான் தமிழ் கட்சிகளின் அதிகாரத்தினை முடிவுக்கு கொண்டுவரலாம் என்றும் பிரச்சாரம் செய்யப்பட்டது. தேர்தல் நாள் நெருங்கி வரும் வேளையில் முன்னணியில் விளங்கிய பௌத்த குருமார் சிலர் ஓர் எச்சரிக்கையை விடுத்தனர். சிங்கள இனம் ஒரு பெரும் தேசிய அழிவை எதிர்நோக்கியுள்ளது என்றும், தேர்தல் முடிவுகள் தெளிவான பெரும்பான்மைப் பலத்தை கட்சிகளுக்கு தராதவிடத்து தமிழர்களைச் சேர்த்து ஆட்சியமைக்கக் கூடாது என்றும் இக்குருமார் வேண்டுகோள் விடுத்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்கள் தமது பிரசாரத்தின் போது அரசாங்கத்தின் சாதனைகளை விரித்துரைத்தனர். மார்க்ஸிச கட்சி களுடன் கூட்டுச் சேர்வதால் இலங்கையில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்படும் என்றனர்.[75] பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம், உழைப்பாளர்களின் கூலி உயர்வு, இலவச அரிசி ஆகிய நன்மைகளை அரசாங்கம் வழங்கியுள்ளதை எடுத்துக்கூறினார். வெளிநாட்டு உதவிகள் தடைப்பட்டு இருந்தன. அவற்றை மீளப் பெற்றதாலேயே வளர்ச்சி சாத்தியமாயிற்று என்றும் கூறினார். பல நூற்றாண்டுகளாக செழித்தி ருந்த சிங்கள வரலாற்று மரபின் தொடர்ச்சி தான் மகாவலி நீர்ப்பா சன அபிவிருத்தித்திட்டம் என்று கூறினர். உணவில் தன்னிறைவை அடைவதற்கு மகாவலித் திட்டம் உதவும். அது நீண்டகாலப் பொருளா தார அபிவிருத்திக்கான அடித்தளத்தை அமைக்கும் என்றனர்.




உரு: 2.3 பொதுத் தேர்தல் முடிவுகள்- பெற்ற மொத்த வாக்குகளின் வீகிதாசாரம்

தேர்தல் முடிவுகளின் படி ஐக்கிய தேசிய கட்சிக்கு 151 பாராளு மன்ற ஆசனங்களில் 17மட்டுமே கிடைத்தன (13 வீதம்). இருப்பினும் வாக்காளர்களின் கணிசமான பகுதியினர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். அதற்கு ஒரு ஆதார அடித்தளம் இருந்தது வெளிப்பட்டது.1965 ஐ விட 1970 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 300,000 பேரின் வாக்குகள் மேலதிகமாகக் கிடைத்தன. மொத்த வாக்குகளின் வீதாசாரமும் 1965இல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த வீதாசாரத்திற்கு் சமமாகவே இருந்தது. இருப்பினும் 1965

இல் ஐக்கிய தேசியக் கட்சி சில ஆசனங்களைக் கூடுதலாகவே பெற்று வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் 9 மாகாணங்களில் 4 மகாணங்களில் கூடுதல் வாக்குக்களைப் பெற்றது. இந்த நான்கு மாகாணங்களும் கூடிய சனத்தொகை உடையவை. நாட்டின் மொத்த வாக்காளர்களில் 61 வீதத்தினரைக் கொண்டவை. இரண்டு மார்க்ஸியக் கட்சிகளும் 1965 இல் 14 வீத வாக்குகளையும், 1970 இல் அதைவிடக் குறைவாக 12 சதவீத வாக்குகளையும் பெற்றன என்பது சுவாரசமான விடயம். இதற்குரிய முக்கிய காரணம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெல்லும் வாய்ப்பு உடைய ஆசனங்களில் இக்கட்சி வேட்பாளர்கள் போட்டியிடாமல் தவிர்த்துக் கொண்டதேயாகும்..

போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தங்கள் ஐக்கிய முன்னணிக்கு அளவிற்கு மீறிய பெரும்பான்மை ஆசனங்களை பெற்றுக் கொடுத்தன. தனியங் கத்தவர் தொகுதி முறை, கண்டிச்சிங்கள வாக்கு விகிதாசாரத்தில் கூடிய பிரதிநிதித்துவத்தை வழங்கிய தேர்தல் தொகுதிமுறை என்ப வற்றால் கூடிய ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர்களும் தெரிவித்த எதிர்ப்புக்களை அலட்சியம் செய்ய முடிந்தது. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாணம் தவிர்ந்த பிற எல்லா மாகாணங்களிலும் பிரயோகிக்கப்பட்ட போட்டித்தவிர்ப்பு ஒப்பந்தம் என்ற உத்தி வெற்றியளித்தது. சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியிட்ட எல்லா ஆசனங்களிலும் வெற்றி பெறக் கூடியதாக போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் நுணுக்கமாக ஆராய்ந்து திட்டமிடப்பட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிட்ட 106 தொகுதிகளில் 15 தொகுதிகளில் மட்டுமே தோல்வியடைந்தது. போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் 49 வீத வாக்குக்களைப் பெற்ற ஐக்கிய முன்னணிக்கு 83 வீத பாராளுமன்ற ஆசனங்களைக் கொடுத்தது.

பெற்ற வாக்குகளின் வீதாசாரத்திற்கும் கிடைத்த பாராளுமன்ற ஆசனங்களின் வீதாசாரத்திற்கும் பெரிய இடைவெளியிருந்த போதும் சிறிமாவோ பண்டாரநாயக்க சிங்கள மக்களின் ஆணையுடன் அரசியல் அதிகாரத்திற்கு வந்தார் என்பதை மறுப்பதற்கில்லை, எஸ்.டபிள்யூ ஆர்.டீ.பண்டாரநாயக்காவின் முடிவுபெறாத சமூக பொருளாதார புரட்சி யில் சிங்கள பௌத்தர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். டட்லி சேனா நாயக்காவின் ஆட்சியினால் இம்மக்களைக் கவர முடியவில்லை. அவர் கள் மறுபக்கம் சாய்ந்து ஐக்கிய முன்னணியைப் பதவிக்கு

கொண்டு வந்தனர். என்ற உண்மையை இத்தேர்தல் எடுத்துக் காட்டியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் ஐக்கியதேசியக் கட்சியை விட சமத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்தன. அத்தோடு பௌத்தம், மொழி, கல்வி, அரசாங்க உத்தியோகம், சமயம் ஆகிய விடயங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளிப்படையாக சிங்கள பௌத்தச் சார்பைக் காட்டியது. இதனால் பெரும்பான்மையான சிங்களவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்தனர். தமிழர்களால் அரசியல் அதிகாரம் எவ்வகையிலாவது பிரயோகிக்கப்படுவது பெரிய தேசிய அழிவில் முடியும் என்று திருமதி பண்டாரநாயக்கா கருதியதை அவரது ஆதரவாளர் களும் ஏற்றுக் கொண்டனர். சிறுபான்மையினர் உரிமைகள் என்று பேசுவது குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் என்ற பேச்சு ஜனநாயக ரீதியாக மக்கள் கொடுத்த ஆணையை அவமதிப்பதாகும், சிங்கள இனத்திற்கு உரிமையான உயரிடத்தை மீளப்பெறும் நடவடிக்கை களை அலட்சியம் செய்வதற்கு ஒப்பாகும் என்றும் கருதலாகினர்.

தேர்தலில் மக்கள் கொடுத்த ஆணை பொருளாதாரக் கொள்கை விடயத்திலும் தெளிவானதாக இருந்தது என்றே கூற வேண்டும். இலங்கை வாக்காளர்கள் பொருளாதார சமூகக் கொள்கைகள் விடயத்தில் மார்க்ஸியக் கட்சிகளின் கருத்துக்களுக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்று கூற முடியாது. மார்க்ஸியக் கட்சியின் தலைவர்கள் ஐக்கிய முன்னணியில் ஏன் இணைந்து கொண்டனர் என்பதைக் கவனித்தல் வேண்டும். தமது கட்சிகள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை ஒரு போதும் பெறப் போவதில்லை என்ற உண்மை 1960இற்குப் பின்னர் அவர்களுக்கு தெளிவாகப் புரியத் தொடங்கியது. இப்புரிதல் தான் அவர்களை ஐக்கிய முன்னணியில் இணைய வைத்தது. அக்கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள் ஒவ்வொரு தேர்தலிலும் அடுத் தடுத்து குறைந்து கொண்டே வந்தது. 1970 இலும் அக்கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள் முன்னரை விடக் குறைந்தது. இன்னொரு விடயத்தையும் நோக்குதல் வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளிற்கு மக்களின் பரவலான ஆதரவு இருந்தது. இலங்கையின் வாக்காளர்களில் பெரும் பான்மையினர் வறியோராவர். 1970ம் ஆண்டில் அவர்களுள் வேலையற்றோரும், குறை வேலை நிலையிலிருந்தோரும் பெரும் எண்ணிக்கையினராவர். பொதுத்துறையில் வழங்கப்பட்ட சம்பள

அதிகரிப்பால் நன்மை பெற்ற ஆசிரியர்களும், அரசாங்க உத்தியோ கத்தர்களும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கும் ஒரு அரசாங்கத்தில் தமது தொழிற்சங்கங் களின் அதிகாரம் பறிபோய்விடும் என அஞ்சினர். தேசிய மயமாக்கல், பிற சமூகநலத் திட்டங்கள் என் பன சிங்களவர்களின் வேலைவாய்ப்புக்களையும் கல்வி வாய்ப்புக்களை யும் அதிகரிக்கும் என்றும் கருதினர். தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி, பொருளாதார முகாமைத்துவத் தில் முன்னேற்றம் என்பன சமத்துவத்தைக் கொண்டுவருவதோடு செயற்திறனையும் அதிகரிக்கும் எனவும் கருதினர்.

இந்த முக்கியமான தேர்தலின் போது தமிழர்கள் எவ்வாறு சிந்தித்தார்கள்? தமிழ் வாக்காளர்கள் அன்று நாட்டின் நிலை பற்றியும், தம்வாழ்க்கை நிலை பற்றியும் அதிருப்தி கொண்டிருந்தனர். தாம் வாக்களிப்பதால் ஏதேனும் முன்னேற்றம் ஏற்படுமா என்பதில் நம்பிக்கை அற்றவர்களாக இருந்தனர். சிங்கள மக்கள் எதிர் நோக்கிய பொருளா தாரப் பிரச்சினைகளை தமிழர்களும் எதிர்கொண்டனர். அதனை விட சிங்கள பௌத்த தேசிய வாதம் அவர்களின் அரசியல் பொருளாதார உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதையும் அவர்கள் உணர்ந் தனர். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு டட்லி சேனநாயக்க ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்திருப்பதற்கு உதவியது. இருப்பினும் பிரதமர் பிராந்திய சபைகள் பற்றிய தமது வாக்குறுதியை மீறினார். தமிழ் மொழி உரிமைகள் தொடர்பாக மனம் தளம்பினார். இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் தமிழர்களுக்கு எந்தவித உரிமைகளையும் வழங்கத் தயாராக இருக்கவில்லை தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தேர்தல்களில் போட்டியிடு வதையும் அவர்கள் தவிர்த்துக் கொண்டனர்.சமஷ்டிக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் 20 வருடங்களாக ஒரு விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். தமிழர் உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு முட்டி மோதுவதா அல்லது ஒத்திசைந்து போவதா சிறந்த வழி என்பதே விவாதத்திற்குரிய விடயமாகும். உண்மையில் இரு வழிகளும் திரும்பத்திரும்ப தோல்வியையே தழுவின.

தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தேர்தல் வாக்குப் பதிவு தொடர்பாக தெளிவான போக்கு எதனையும் அடை யாளம் காண முடியாது. முந்திய தேர்தல்களைவிட 1970 தேர்தலில் உறுதிநிலை குலைந்ததைக் காணலாம். வடக்கு மாகாணத்தில் தமிழ்க்

காங்கிரஸ் பாராமுமன்ற உறுப்பினர்கள் மூவரைத் தோல்வியுறச் செய்து அவர்களின் இடத்திற்கு சமஷ்டிக் கட்சியினரைத் தெரிவு செய்தனர். அவர்களுள் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் ஒரு வராவர். இருந்த போதும் வேறு மூன்று தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் களை பாராளுமன்றத்திற்கு அனுப்பினர். இவர்களின் வெற்றியால் சமஷ்டிக் கட்சி மூன்று ஆசனங்களை இழந்தது.[77] ஆகவே வட மாகாணாத்தில் 6 ஆசனங்கள் கைமாறின ஆயினும் இரு கட்சிகளும் பெற்றுக்கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை மாறாமலே இருந்தது.

மூன்று இனங்களும் கலந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் சமஷ்டிக் கட்சி பல இழப்புக்களைச் சந்தித்தது. தமிழர் பெரும்பான்மையாக வாழும் மூன்று மாவட்டங்களில் இரண்டில் அதன் செல்வாக்கு தொடர்ந்து இருந்தது. ஒரு மாவட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு பறிகொடுத்தது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மூதூரில் சமஷ்டிக்கட்சி வேட்பாளர் தோல்வியடைய, சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றார். முந்திய காலத்தில் தமிழ் பேசும் முஸ்லிம் களின் வாக்குகளை சமஷ்டிக் கட்சியால் பெற முடிந்தது. அக்கட்சி தமிழ் மொழி உரிமைகளுக்காக வாதாடியதால் முஸ்லிம்களும் சமஷ்டிக் கட்சியை ஆதரித்தனர். பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முஸ்லிம்களின் ஆதரவைக் கோரிய போது தமிழர்களுடன் சேராமல் ஆதிக்கம் மிக்க சிங்களவர்ளுடன் சேர்வதே நல்லதென முஸ்லிம்கள் முடிவு செய்தனர்.

இலங்கை அரசியலின் வழமையான போக்கில் இருந்து ஒரு திருப்பமாக 1970 தேர்தல் அமைந்தது. இலங்கை அரசியலில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது செல்வாக்கை உபயோகித்து அரசியல் அதிகாரம் யார் கையில் போகப் போகிறது என்பதை தீர்மானிக்கலாம் என்ற நினைப்புக்கே இடமில்லாமல் செய்யும் வகை யில் ஐக்கிய முன்னணி பெரும்பான்மையைப் பெற்றது. சிங்கள பௌத்த தேசியவாதிகள் தாம் விரும்பியபடியே சட்டங்களை இனிமேல் ஆக்க லாம். தமக்கு பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை வாக்குப் பலத்தை உபயோகித்து புதிய அரசியல் யாப்பையும் உருவாக்கிக் கொள்ளலாம். அதன் வழி சிங்களவர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் பக்கச்சார்பான முறையில் நன்மைகளை வழங்கலாம்.

# முடிவுரை

1965ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஒருசில பாராளுமன்ற ஆசனங்களைக் கூடுதலாகப்பெற்று ஆட்சியைப் பிடித்தது. அதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திப் பாதையை மாற்றும் அதிகாரம் அதற்குக் கிட்டியது என்று கூற முடியாது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா வின் மக்கள் வாத (பொப்பியூலிஸ்ட்) புரட்சி அதன் வீரியத்தை இழந்து போயிருந்த நிலையில் டட்லி சேனநாயகா பதவிக்கு வந்தார். ஆயினும் இலங்கையின் சிங்களப் பெரும்பான்மையினர் பண்டாரநாயக்கா வின் கொள்கைகளைப் புறந்தள்ளினார் என்று கூற முடியாது. சேனநாயக்கா தாம் "மத்திய பாதையை" தேர்ந்துகொண்டுள்ளதாக அறிவித்தார். (பண்டாரநாயக்காவும் இதுபோன்றே 1956 இல் உறுதிமொழியைக் கூறினார்.) ஆகவே பண்டாரநாயக்காவின் பாதையை முற்றாக கைவிட முடியவில்லை. என்பதையே இது உறுதிசெய்கிறது. டட்லி சேனநாயக்கா கூறிய "மத்தியபாதை" பண்டாரநாயக்கவின் இடதுசாரிச் சார்புடைய மக்கள்வாதத்திற்கு (பொப்பியுலிசம்) மாற்றீடாக முன்வைக் கப்பட்டது. சேனநாயக்க பிரித்தானிய லிபரல் மரபின் படி விட்டுக் கொடுப்பு, இணக்கம், படிப்படியான மாற்றம் என்பவற்றை ஆதரித்தார். மார்க்ஸிய மரபுப்படியான மோதலையும் புரட்சிகர மாற்றத்தையும் அவர் ஏற்க வில்லை. படிப்படியான மாற்றமே இலங்கையின் பொருளாதார சமூக சீர் திருத்தங்களுக்கு ஏற்றதென அவர் கருதினார்.

சேனநாயக்கா தனது ஐந்து ஆண்டு ஆட்சியின் போது விட்டுக் கொடுப்பு, சமரசம், படிப்படியான மாற்றம் என்பவற்றில் நம்பிக்கை யுடையவராகச் செயற்பட்டார். அவரது எதிரிகளும் நண்பர்களும் அவரைக் குறை கூறினர். ஊசலாடும் மனமும், ஒன்றுக்கு ஒன்றுக்கு முரண்படும் நிலைப்பாடுகளையும் கொண்டவர் என்று கண்டனம் செய்தனர். சேனநாயக்க தமிழர்களை அரசியல் செயல் முறைக்குள் கொண்டு வந்தார், அவர்களின் கோரிக்கைகளை அரைகுறையாக ஏற்றுக்கொண்டார். மொழி உரிமைகளை ஏற்றார். ஆனால்

சிங்களவர்களின் அழுத்தம் வலுவடைந்த போது, பிராந்திய சுயாட்சிக் கோரிக்கை தொடர்பாக தான் முன்னர் இணங்கியவற்றிற்கு மாறாக நடந்து கொண்டார். போயா விடுமுறை என்ற அவரது திட்டம் இலங்கையில் பௌத்தத்திற்கு விசேட இடம் உண்டு என்பதை ஏற்றதன் அடையாளம் ஆகும். இருப்பினும் அவர் இந்துக்கள் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் தத்தம் சமயங்களை பின்பற்றுதல், வழிபடுதல் ஆகியவற்றை சுதந்திரமாக செய்ய வேண்டும் என்பதில் கரிசனை கொண்டார். அரிசி மானியத்தை அரைவாசியாகக் குறைத்து சமரச முடிவுக்கு வந்தார் இதனால் அவர் அந்நியச்செலாவணியை மிச்சப் படுத்தல் என்ற கொள்கையை விட்டுக்கொடுத்தார். இலவசமாக அரிசியை வழங்கி தன்னைக் கண்டனம் செய்தவர்களையும் சமாதானப் படுத்தினார். அவரது பொருளாதாரக் கொள்கைகள் தனியார் துறை யினர் மீது விரோதம் கொண்டதாக இருக்கவில்லை. பொருளாதாரத் தேக்கநிலை, வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை, அந்நியச்செலாவணி இருப்பு குறைந்து செல்லுதல், தொடர்ச்சியான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் பத்தாண்டுக்குட்பட்ட காலத்தில் வெளிப்படத் தொடங்கியிருந்தன. இப்பிரச்சிகைளுக்கான சில நீண்டகாலத் தீர்வுகளை அரை மனதுடன் செயல்படுத்தினார். அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கை கடுமையான அரசாங்க கட்டுப்பாட்டை அழுத்துவதாக இருந்தது. (கைத் தொழில் அமைச்சராக மார்க்சிஸ்ட்டான பிலிப் குணவர்த்தன இருந்தார்) டட்லி சேனநாயக்கா வின் வெளிநாட்டுக் கொள்கை கருத்தியல் சார்பற்ற தாக இருந்தது. இக்கொள்கையின் பயனாக மேற்கு நாடுகளுடனான உறவு முன்னேற் றம் அடைந்தது. அத்தோடு இந்தியாவுடனும் சீனாவு டனும் சேன நாயக்கா நல்லுறவுகளைப் பேணினார். சாள்ஸ் லின்ட்ப்ளம் (Charles Lindblom) என்ற அரசியல் பொருளாதாரத் துறை அறிஞர் ஜனநாயக ஆட்சியைப்பற்றிக் கூறும் போது அதனை the science of muddling through என்றார். சேனநாயக்காவும் ஆளும் தொழில் பற்றி அவ்வாறான நோக்கையே கொண்டிருந்தார் என்றும் கூறலாம்.(தமிழில் பேச்சு வழக்கில் சமாளித்துக் கொண்டு முன்னேறிச் செல்லுதல் என்று கூறுவதை ஒத்த கருத்துள்ளதே அரனனடபைெ வாசழரபா என்ற ஆங்கிலத் தொடர் (மொ-ர்)

"சமாளித்தல" தந்திரோபாயத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பெரும்பாலும் தற்போது இருக்கும் நிலை பற்றி திருப்தி கொண்டவர்

களாய் இருப்பர். இவர்கள் பெரிய மாற்றங்களை விரும்பாதவர்கள். யுகப் புரட்சிகள் பற்றிய கருத்தியல்களில் ஐயம் கொண்டவர்கள் நம்பிக்கை யில்லாதவர்கள். தற்போது இருக்கும் நிலை (status Quo) காரணமாக பாதிப்புக்கு உள்ளானவர்கள் சமரச வழிகளை எதிர்ப்பார் கள்: யுகப் புரட்சிக் கருத்துக்களால் கவரப்படுபவர். இலங்கையின் பெரும்பான்மைச் சிங்களமக்கள், குறிப்பாக சிங்கள இளைஞர்கள் இரண்டாவது வகையினர். இருக்கும் நிலையில் அதிருப்தி கொண்டவர் கள். அவர்களது எதிர்பார்ப்புக்களையும் அரசியல் விளிப்புணர்வையும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா தட்டி எழுப்பிக் கிளரச் செய்தார். சிங்கள இளைஞர்கள் பண்டாரநாயக்கா தூண்டிவிட்ட எதிர்பார்ப்புக்கள் மீது ஆழமான பிடிப்பு உடையவர்களாக இருந்தார்கள். 1970 இல் கூட அவை மீதான பிடிப்பு நிலைத்திருந்தது. சமூகப் புரட்சி, பொருளா தார வாய்ப்புகள், சமூக சமத்துவம், சிங்கள மகோன்னதம், பௌத்தத் திற்கு அரச ஆதரவு ஆகிய இலக்குகள் ஆழமாக பதிந்திருந்தன.

1970 இல் மேற்குறித்த இலட்சியங்கள் பல அன்றுவரை அடையப் படாதனவாகவே இருந்தன 1965 இல் சேனநாயக்கவை தெரிவு செய்த இலங்கை அதற்கு முன்னர் அவரது தந்தை டி.எஸ். சேனநாயக்காவை பிரதமராக்கிய 1948 இன் இலங்கையை விட வித்தியாசமானது. இருப்பி னும் பத்து வருடகாலத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவின் கொள்கைகள், சிங்களவர் மேலாதிக்கம் உடைய சமூகப்புரட்சி என்ப தனை நியாயப்படுத்தி அவற்றுக்குச் சிந்தனை மட்டத்தில் வலுவைத் தேடிக் கொடுத்தன. அந்தக் கொள்கைகளுக்கு அமைய இலங்கையின் சமூகத்தை மாற்றியமைக்கும் வேலை நடைபெறவில்லை. டட்லி சேனநாயக்கா ஆட்சியை பிடித்த போது உடமையாளர்களான ஒரு சில உயர் சாதிக் குடும்பங்களின் கையில் பெரும் விஸ்தீரணமுடைய நிலப்பரப்பு இருந்தது. அவர்கள் கொழும்பு நகரின் மாளிகைகளில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர். தமக்கிடையே திருமண பிணைப்புக் களைக் கொண்டிருந்த இச் சிறு குழுவான குடும்பங்கள் இலங்கையின் பொருளாதார, அரசியல், சமூக வாழ்வை ஆக்கிரமித்திருந்தன. 1960 ஆம் ஆண்டு உத்தியோக மொழிச்சட்டம் அமுலுக்கு வந்து விட்டது. ஆனால் ஆங்கிலம் பொருளாதார அரசியல் அபிவிருத்திக்கான கருவியாகவும் முன்தேவையாகவும் இன்னும் இருந்துகொண்டிருந்தது. இலங்கையின் நீதித்துறை முழுமையாக ஆங்கிலத்திலேயே இயங்கிக்கொண்டிருந்தது. கீழ்நிலையில் மஜிஸ்திரேத் நீதிமன்றங்கள்

கூட ஆங்கிலத்திலேயே அலுவல்களை நடத்தின. நாட்டிற்குத் தேவைப் பட்ட அந்நியச்செலாவணியை உழைத்துத்தந்த தேயிலைத் தோட் டங்கள் இன்னும் அந்நிய உடமைகளாகவே இருந்தன. கொழும்பு நகரிலும் தேயிலைத் தோட்டங்கள் செழித்துள்ள இலங்கையின் மத்திய மலைநாட்டின் நகரங்களிலும் இயங்கிய பிரிட்டிஷ் கிளப்புகள், பிரிட்டி ஷார் அல்லாத இலங்கைப் பிரஜைகளுக்கு அனுமதியை மறுத்து வந்தன.

மேற்குறித்தவாறு சமூகமாற்றங்கள் நடைபெறாது பழைய நிலை தொடர்ந்த வேளையில் தேசிய அரசாங்கம் பதவியேற்றது. தேசிய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் மோதல்நிலை 1946-56காலத்தின் தாழ் மட்டத்திற்கு சென்றது. 1965-70 காலத்தில் இனவாத மோதல் சம்பவங்கள் குறைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சேனநாயக்கா மோதல்களை இவ்வாறு குறைப்பது எப்படி சாத்தியமாயிற்று.? அவர் சென்ற கொள்கைப் பாதையின் வழித்தடங்கள் எவை?

பிரதமரின் கொள்கை வழுவாத (அதேசமயம் இணக்கப் பாடுடைய) தலைமைத்துவப்பாணி மோதல்களின் தணிப்புக்கான பிரதான காரண ஷமாகும். அவர் சிங்கள பௌத்த அபிலாசைகளுக்கு அனுதாபியாக இருந்தார். ஆயினும் ஜனநாயகத்தையும், பொது ஒழுங்கையும் தியாகம் செய்வதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. இலங்கைச் சமூகத்தில் அன்றும் சட்டதிற்கு மதிப்பளிக்கும் இயல்பு இருந்தது (சேனநாயக்க மீது தனிப்பட்ட மதிப்பு இருந்தது). பிரதமரும் தனது பேச்சுக்களிலும் தான் கூறிய கூற்றுக்களிலும் சட்டம், ஒழுங்கு என்பவற்றிற்கு மதிப்புக் கொடுப்பதை அழுத்திக் கூறினார். சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களின் இனவாதம் செறிந்த கனல்கக்கும் உரைகளையும், மார்க்சிஸ்டுகளின் புரட்சிக் கருத்துக்களையும் அவர்தம் பேச்சில் வெளிப்படுத்துவதில்லை. சிங்களவர்களிற்கும் தமிழர்களிற்கும் இடையே இணக்கப்பாடடை கொண்டுவரவேண்டும் என்பது அவரது அரசியல் தந்திரமாக இருந்தது. இரண்டு சமூகங்களையும் ஒன்றிற்கு எதிராக மற்றதை தூண்டிவிட்டு சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவது அவரின் நோக்கமாக இருக்கவில்லை. சேனநாயக்கா தனது வாக்குறு தியைக் காப்பாற்றத் தவறிய சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தலைவர்கள் அவரை ஒரு புரிந்துணர்வுடைய அனுதாபமிக்க தலைவராவே நோக்கினர். அவரது அரசாங்கத்துடன் மோதுவதால்

அதிக பயனில்லை என உணர்ந்தனர். பௌத்தர்களும் சேனநாயக காவை புத்தசமயப் பற்றுள்ள ஒருவராகவே பார்த்தனர். எனினும் அவர்கள் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வெளிப்படையான பௌளத் தச்சார்பு நிலைப்பாட் டையே விரும்பி ஏற்றுள்ளனர். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா பௌத்த தீவிரவாதக் குழுக்களின் தீவிர நடவடிக்கை களுக்குத் தமது மௌனமான ஒப்புதலை வழங்கியது போன்று டட்லி சேனநாயக்கா நடந்து கொள்ளவில்லை.

## சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்தல்

பாதுகாப்புப் படைகளை அவதானத்துடன் கையாளுதல் நடுநிலை யோடு முகாமை செய்தல் என்ற இரண்டு விடயங்களையும் சேனநாயகா வின் நிர்வாகத்தில் காண முடியும். அரசு அங்கீகாரமுடைய வன்முறை யினை கையாள்வதில் உள்ள திறமையின்மை காரணமாக நாட்டின் மோதல் சம்பவங்கள் அதிகரிக்கலாம். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் காலத்தில் இதுவே நடைபெற்றது. தேசிய அரசாங்கம் இவ்வாறான தவறைச் செய்ய வில்லை. 1966 இல் வேலை நிறுத்தத்தின் போது ஆசிரியர் தொழிற் சங்கங்கள் சட்டவிரோதமான முறையில் பிரசாரத்தில் ஈடுபட்டன. அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுத்தது. அது தெளிவான செய்தியை யும் தொழிற்சங்கங்களிற்கு தெரிவித்தது. அரசியல் உள்நோக்கம் உள்ள வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்பதே அச்செய்தி. வேலைநிறுத்தத்தின் போது பாதுகாப்புப் படைகள் எடுத்த நடவடிக்கைகள் பற்றிக் கண்டனம் எழுந்த போது, பிரதமர் பாதுகாப்புப்படைகளிற்கு ஆதரவாகப் பேசி தனது உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினார். ஒரு புத்தபிக்குவின் மரணம் சம்பவித்த இக்குழப்பத்தின் போது பொலிஸ், இராணுவ அதிகாரிகள் நடந்து கொண்டது பொது ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான நடவடிக் கையே என்று கூறியதன் மூலம் சரியான நடவடிக்கைக்கு ஆதரவு கிடைக்கும் என்ற உறுதிமொழியை பிரதமர் வழங்கினார். மாணவர் களின் தலைவர்களுக்கும் இது போன்ற செய்தி சொல்லப்பட்டது. பல்கலைக்கழக வளாகங்களுக்குள் மாணவர்களினது ஆர்ப்பாட்டங்கள் கட்டுமீறிச் சென்ற போது பொலிசாரை அனுப்பி அவற்றை கட்டுப்படுத் தும் ஆபத்து நிறைந்த பணியையும் பிரதமர் செய்தார். இந்த நடவடிக் கைகள் மாணவத் தலைவர்களைக் கோபமடையச் செய்தது. டட்லி

சேனநாயக்காவின் தேர்தல் தோல்விக்கும் இது ஒரு காரணமாயிற்று. இருப்பினும் சேனநாயக்காவின் உறுதியான நடவடிக்கைகள் மாணவர் களின் குழப்பங்கள் ஏற்படாமல் கட்டுப்படுத்தின. ஏற்பட்ட கலகங்க ளையும் உடனடியாக கட்டுபாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. குறைந்த வளங்களைக் கொண்ட பொலிசும் இராணுவமும் சட்டத் தையும் ஒழுங்கையும் பேணுவதில் வினைத்திறன் மிக்க குழுவினராக இருத்தல் முடியும் என்பதை பிரதமர் எடுத்துக்காட்டினார். பொது ஒழுங்கை பேணுவதை விடுத்து கலகத்தினை மூட்டிவிடுவதாக அமையும் பாதுகாப்பு படையினால் பயனில்லை.

கூலிகள் குறைந்த மட்டத்தில் தேக்கமுறுதல், வேலையின்மை போன்ற பிரச்சினைகள் இருந்த போதும் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றம் வன்முறை மோதல்களைக் குறைத்தது. பொருளா தாரம் விரிவாக்கம் பெற்றுக் கொண்டிருந்த படியால் தொழில் கொள் வோர் (மிகப்பெரியதொழில் கொள்வோர் ஆனஅரசாங்கம் உட்பட) கூலிகளை உயர்த்தி நீண்ட வேலை நிறுத்தங்களை தவிர்த்துக் கொள்ளும் ஆற்றல் உடையவர்களாய் விளங்கினர் இச்சூழலில் தொழிலாளர்களுக்கும் வன்முறை அல்லாத வழிகளில் நன்மைகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்ப்பட்டது. சேனநாயக்காவின் ஆட்சியின் கடைசி இரண்டு வருடங்களில் ஐக்கிய முன்னணி பலம் பெற்றுக் கொண்டிருந்தது. ஐக்கிய முன்னணியின் சில பிரிவினர்களிடையே வன்முறையில்லாத எதிர்ப்பு என்ற மனப்பாங்கு வலுப்பெற்றதெனவும் கூறலாம்.

டட்லி சேனநாயக்கா முழுமையாக ஐந்து ஆண்டுகள் பதவியி லிருந்தார். இந்த ஐந்து ஆண்டுகளும் ஒப்பீட்டளவில் வன்முறையற்ற ஆண்டுகளாகும். டட்லிசேனநாயக்கவின் சாதனை இதுவெனலாம். இன்று திரும்பிப் பார்க்கும் போது இலங்கையின் பிளவுபட்ட சமூகத்தில் சமாதானத்தைப் பேணுவதில் அடைந்த வெற்றி பெரியதொரு சாதனையென்றே தோன்றும். 1970 இல் அப்படித் தோன்றியிருக்க மாட்டாது. டட்லி சேனநாயக்க தனது ஆட்சிக்கு முற்பட்ட பத்தாண்டு காலத்தின் மோதல்கள், புரட்சிக்கரப் பேச்சுக்கள் ஆகியன ஏற்படுத்திய அரசியல் குழப்பநிலையைப் போக்கி அமைதியை பேணினார். பொது ஒழுங்கைப் பேணுவதில் அவர் காட்டிய உறுதி வன்முறைக் குழப்பங் களை தவிர்க்க உதவியது பாதுகாப்புப் படைகளை அமைதியை

பாதுகாப்பதற்கு அவர் உபயோகித்தார். அவற்றை வெளிப்படையான அரசியல் பணிகளில் அவர் ஈடுபடுத்தவில்லை. பொதுசன விருப்புக்கு மாறான கொள்கைகளை சிறுபான்மையரின் மீது திணிப்பதற்குரிய கருவியாகவும் அவர் ஆயுதப் படைகளை உபயோகிக்கவில்லை. சேனநாயக்கவின் எதிரிகள் கூட அவருக்கு ஜனநாயகத்தின் மீது இருந்த பற்றுதலுக்காக மதிப்பளித்தார்கள். 1970 இல் அரச அதிகாரத்தைப் பெறுவதற்கான போட்டியிலும் அவர் எதிராளிகளுக்கு வாய்ப்புக்களை தடையற்ற முறையில் பயன்படுத்த அனுமதிப்பார் என நம்பினர். இதனால் அரசியல் வன்முறையை நாடும் விருப்பம் இருக்கவில்லை. அரசியல் வன்முறையில் ஈடுபடுவது ஒரு சிறந்த உத்தியாகவோ அல்லது நியாயப்படுத்தக் கூடியதாகவோ இருக்கவில்லை.

## குறிப்புக்கள்

## அத்தியாயம் 01

1. வன்முறை மோதல்கள் பற்றிய தரவுகள் றிச்சார்ட்சனின் violent political confilict data base 1990 இல் இருந்து பெறப்பட்டவை.
2. 1965 மார்ச் 22 ற்கு முற்பட்ட தேர்தல் பிரசார காலத்தின் போது மட்டும் வன் முறை மோதல்கள் மிகக் கூடுதலாக இடம் பெற்றமை.
3 மத்திய மாகாணத்தின் உனந்தென்ன என்ற கிராமத்தில் தேர்தலின் பின்னர் இரு கட்சிகளின் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின் போது இருவர் உயிரிழந்தனர்.
4. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் திருமதி பண்டாரநாயக்கவும் 108 மாதங்களும் டட்லி சேனநாயக்க 62 மாதங்களும் ஆட்சி செய்தனர். ஆகவே சேனநாயக்கவின் ஆட்சிக் காலத்தின் வன்முறை மோதல்களை மற்றஇருவரின் காலத்துடன் ஒப்பிடுவதற்கு ஏற்றதாக 62-108 என்ற விகிதத்தில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனால் எண்ணிக்கை சரியாக இல்லை எனினும் பண்பு ரீதியான ஒப்பிடுதல் சாத்தியமானது.
5. திருமதி பண்டாரநாயக்க பதவியேற்றவுடன் இந்த உத்தியோகத்தருக்குப் பதிலாக சிங்கள உத்தியோகத்தர் ஒருவரை பிரதிப் பொலிஸ்மா அதிபராக (DIG) நியமித்தார்.
6. கோபல்லவ திருமதி பண்டாரநாயக்கவால் நியமிக்கப்பட்டவர் மட்டுமன்றி அவரது மாமன் முறை உறவினருமாவார். அவரது பதவிக்காலம் முடிவுற்றதும் டட்லி சேனநாயக்க அவரை மீண்டும் ஆளுநராக நியமித்தார்
7. பார்க்க கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:145)பிரதமர் நியமனம் தொடர்பான பேரம்பேசலில் “சிறுபான்மையினர் நலன்களைக“ கருத்திற் கொண்டு ஆறு பேரை பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்ற விடயம் முக்கியம் பெற்றது. ஆளுநர் நாயகத்தால் பிரதமராக நியமனம் செய்யப்பட்டோர் இந்த ஆறு பேரையும் தமது ஆதரவாளர்களில் இருந்து தெரிவு செய்து கொள்வது வழக்கமாகிவிட்டது.
8. மேலது 143-145 டட்லி சேனநாயக்க பதவியேற்ற நிகழ்வோடு சம்மந்தப்பட்ட விபரங்களை இந்நூலாசிரியர்கள் விபரித்துள்ளனர். கோபல்பலவ தன்னைப் பதவியேற்கும் படி கேட்பார் என்பது நிச்சயமானதும் டட்லிசேனநாயக்க கொழும்பு மேயர் வீ.ஏ.சுகததாசவின் ஆதரவைப் பெற்றுக்கொண்டார். அவர் தனது ஆதரவாளர்களைத் திரட்டி பிரதமர் ஆளுநர் நாயகத்தின் இராணி மாளிகை அலுவலகத்திற்குப் பாதுகாப்பாகச் சென்று பதவியேற்பதை ஒழுங்கு செய்தார். சுகததாச புதிய அரசாங்கத்தில் தேசியமயமாக்கப்பட்ட சேவைகள் அமைச்சராக நியமிக்கப்பட்டார். இன்று அவர் பெயரால் கொழும்பு நகரில் ஒரு விளையாட்டு மைதானம் ஞாபகச்சின்னமாக நிலைத்துள்ளது.
9. மேலது.145

10. பார்க்க யுப் (1978:61)

11. இந்த விடயம் பற்றி கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜினஸ் (1988-1994) எழுதியிருப்பவற்றை ஆதாரமாகக் கொண்டேன். இதனைவிட பல நேர் முகங்களையும் நடத்தினேன். ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மேற்குறித்த இருவரும் குறிப்பிடுவதை விட நான் டட்லி சேனநாயக்கவை சாதகமாக நோக்கிப் பார்க்கிறேன். சானக்க அமர துங்கவும் (1994) இதே போன்ற பார்வையையே முன்வைத்தார். அமரதுங்க அப்போது லிபரல் கட்சியின் தலைவராக இருந்நார். டட்லி சேனநாயக்கவின் பெருமை அவர் நான்கு தடவைகள் பிரதமராக இருந்தார் என்பதிலேயே உள்ளது. தனிநபர் சுதந்திரம் பற்றி அவர் கொண்டிருந்த நம்பிக்கை ஐயத்திற்கு இடமற்றது. அதிகாரத்தின் போலித்தனமான அலங்காரங்களைவிட அவரது மகிமை பல மடங்கு உயர்ந்து காட்சி தந்தது. என்று சானக்க அமரதுங்க எழுதினார்.

12 கே.எம.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:146) இலங்கையின் "இராஜாங்க அமைச்சர்"கள் மந்திரிசபை உறுப்பினர்களாக உள்ள அமைச்சர்களுக்கு அடுத்த நிலையிலேயே வைக்கப்பட்டனர். ஜயவர்த்தன பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராகவும் கடமையாற்றினார். இவருக்கு முன்னர் திருமதி பண்டாரநாயக்கவின் ஆகக் கூடிய அதிகாரம் பெற்ற உதவியாளரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் இப்பதவியில் இருந்தார். சேனநாயக்க, இலங்கையின் எல்லாப் பிரதமர்களும் போன்றே பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரம் ஆகிய அமைச்சுக்கள் மீதான கட்டுப்பாட்டை தன்கையில் வைத்துக்கொண்டார்.

13. பார்க்க கே.எம்.டி.சில்வா (1986:203,271)மற்றும் கே.எம்.டி. சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994-155) திருமதி பண்டார நாயக்காவின் உறவினரான மேஜர் ஜெனரல் றிச்சாட் உடுகம, திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த என்.கியூ.டயஸ், அரசியலில் தீவிரமாகச் செயற்பட்ட கெப்பிட்டிகெதர ஞானசிக என்ற பௌத்த பிக்கு ஆகியோர் சதித்திட்டத்தில் சம்மந்தப்பட் டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டனர். இறுதியில் யாவரும் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டனர். தண்டிக்கப்பட்டோர் யாவரும் இளநிலை உத்தியோகத்தர்களும் கட்டளைத்தளத் தரப் பதவியில் இல்லாதோருமேயாவர்.

14. மேலது 172

15. மேலது 152

16. பார்க்க பொன்னம்பலம் 1983:145 இந்நூலாசிரியர் சேன நாயக செல்வநாய கத்திற்கு வாக்குறுதியொன்றை வழங்கினார். அதன்படி "தமிழ் பேசும் உத்தியோகத்தர் ஒருவர் நாடு முழுமையிலுமாக அலுவல்கங்களை தமிழிலே நடத்துவதைக் கவனிப்பார்" என்று கூறப்பட்டது. பின்னர் சேனநாயக்க இதற்கு மாறாக நடந்து கொண்டார்.

17. பார்க்க வில்சன்(1974:51)

18. பண்டாரநாயக்க செல்வநாயகம் பேச்சுவார்த்தைக்கு என்ன நடந்தது என்பதையும் சிங்களவர்-தமிழர் முரண்பாடு தீவிரமடைவதற்கு இது எவ்வாறு காரணமாயிற்று என்பதையும் அடுத்த அத்தியாயத்தில் நான் விபரித்துள்ளேன்.

19. பார்க் கே.எம்.டிசில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:166)

20. பார்க்க பொன்னம்பலம்( 1983:146).

21. தமிழர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் உள்ளூ ராட்சி அதிகாரத்தை அப்பகுதி மக்களுக்கே விட்டுக் கொடுப்பது சிங்களவர் மத்தியில் ஒரு சிக்கலான பிரச்சனையாக இருந்து வந்தது. அத்தகைய அதிகாரப் பரவலாக் கத்தைப் பிரயோகித்தமை பண்டாரநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மிகப்பெரிய குறையாக இருந்தது. சேனநாயக்க அரசாங்கம் இப்படுகுழியில் இடறி விழாமல் இருப்பதில் கவனமாக இருந்தது. அவ்வரசாங்கம் மாவட்ட சபைகள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் வழிகாட்டலிலும் இயங்கும் எனக் கூறியிருந்தது. கே.எம.டி.சில்வா 1986:191:1966 ஆம் ஆண்டின் சிம்மாசன உரையில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது) மாவட்ட சபைகள் இணைப்பு வேலையைச் செய்யும், உள்ளூராட்சி சபைகளிடம் ஏற்கனவே இருக்கும் அதிகாரங்களுக்கு மேலாக அச்சபைகளிற்கு எவ்வித அதிகாரமும் இருக்காது என்று கருதப்பட்டது. (பொன்னம்பலம் 1983:146) அதிகாரப்பரவலாக்கல் பிரச்சினையைப் புரிந்து கொள்வது இலங்கையின் இன உறவுகள் பற்றிய பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்கு மிக அவசியமானதென்ற வாதத்தை கே.எம்.டி.சில்வா managing ethnic confilict in a multi ethnic soceity என்ற நூலில் முன்வைத்துள்ளார்.

22. பார்க்க மேலது 191 அத்துடன் கே.எம்.டி.சில்வா மற்றுட் றிஜின்ஸ் (1994:178)

23. பார்க்க கே.எம்.டி.சில்வா ( 1986:193,233-235) கே.எம.டி. சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:179) தமிழரான முருகேசு திருச்செல்வம் உள்ளூராட்சி மந்திரி பதவியில் இருந்து விலகியதும் ரணசிங்க பிரேமதாச இவ்வமைச்சின் மந்திரியானார். அவர் இவ்அமைச்சை வைத்துக் கொண்டு தனக்கு ஒரு ஆதரவுத் தளத்தை உருவாக்கினர். இது பின்னர் அவர் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக 1988ல் வெற்றி பெறுவதற்கும் உயர்வதற்கும் உதவியது.

24. பார்க்க வில்சன் (1974:51,1988:127) பொன்னம்பலம் (1983:146) 1968ம் ஆண்டு நவம்பர் மாதம் மட்டக்களப்பில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் “இலங்கைப் பிரஜைகளையும் இலங்கையில் வாழும் இந்தியத் தழிழர்களையும் ஒன்றிணைந்து சுதந்திரமான தமிழ் அரசு ஒன்றை தாபிக்கும் வரை” சமஷ்டிக் கட்சி போராடும் என்று குறிப்பிட்டதாக சிங்களப் பத்திரிகையான “தவச“செய்தி வெளியிட்டது. (நவம் 6,1968:1)

25. இந்தியப் பேச்சுவார்தைகள் பற்றி நான் எனது இத்தொடரில் வெளிவந்த முன்னைய நூலில் விபரித்துள்ளேன்.

26. பார்க்க கே.எம்.டி.சில்வா (1986:225)

27. பார்க்க மேலது, கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994-179-80)சபாரத்தினம் (1990:86-95) திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும் இந்தியத் தமிழர்களுக்கு பிரஜா உரிமை வழங்குவதைத் தாமதப்படுத்தினார். இந்தியாவிற்கு எவ்வளவு பேர் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டார்களோ அதனளவிற்கு பிரஜா உரிமை வழங்குவோரின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தினார். திருப்பியனுப்பப்படும் 7 பேருக்கு பதில் 4 பேருக்கு பிரஜாஉரிமையை வழங்கும் கொள்கையை இவர் நடைமுறைப்படுத்தினார் இந்த முடிவு தேசிய அரசாங்கம் கொண்டு

வந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்படவில்லை. இந்திய -இலங்கை (நிறைவேற்றல்) சட்டத்தில் இவ்விதியை உட்படுத்த எதிர்க்கட்சிகள் எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.

28. கே.எம்.டி.சில்வா (1986:224-25) இது பற்றி விவாதிக்கும் போது சமஷ்டிக்கட்சித் தலைவர்களின் மொழிவழித் தேசியவாதம் சில மட்டுப்பாடுகளைக் கொண்டது. அதனால் இலங்கையில் வாழும் தமிழர் அனைவரையும் ஒன்றிணைக்க முடியவில்லை என்பதை இது காட்டுவதாக அவர் வாதிடுகிறார்

29 பார்க்க யுப் (1978:6)

30. மேலது:175

31. பார்க்க பொன்னம்பலம் (1983:145) கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:166)

32. பார்க்க கொடிகார (1982:117-18,206), நிசங்க (1984: 154)வில்சன் (1974:295)

33. நிசங்க 1984:154) சேனநாயக்கவின் ஏப்ரல் 1965 பேச்சு மேற்கோள் காட்டப்பட்டது.

34. பார்க்க கொடிக்கார (1982:123,126) கே.எம்.டி.சில்வா மற் றும் றிஜின்ஸ் (1994:164)

35. பார்க்க கே.எம்.டி.சில்வா றிஜின்ஸ்( 1994: 167) நிசங்க (1984: 276) கொடிக்கார (1982:214). உணவு மானியத்தினைக் குறைத்தல், உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளுக்கும் முயற்சிகளுக்கும் கூடிய வாய்ப்புக்களை வழங்குதல், பொது முதலீட்டுத் திட்டங்களைக் கவனமாகப் பரிசீலித்த பின்னரே அனுமதித்தல், உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு, நடைமுறைக்கணக்கு நிலுவையையும் சென்மதி நிலுவைக் குறைவுகளையும் நீக்குதல் ஆகிய மேலதிக நிபந்தனைகளையும் உலக வங்கி விதித்தது.

36. மேலது 123, இலங்கை 55 மில்லியன் ரூபாக்களை கம்பனிகளுக்கு வழங்குவதற்குச் சம்மதித்தது, இத்தொகை 5 வருட கால எல்லையில் வழங்கப்படும் எனவும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

37. மேலது கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் ( 1994:150-

38 ஐயும் பார்க்க

39. பார்க்க கொடிக்கார (1982:46-47)

40. பார்க்க நிசங்க (1984:154)

41. பார்க்க கொடிக்கார( 1982:75,118)

42. பார்க்க கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:181), கொடிக்கார (1982:122-23,187)

43. எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்த்தன என்ற மூவரும் வெளிநாட்டு விவகாரங்களில் கை தெர்ந்த திறமைசாலிகள் என்று அடிக்கடி புகழப்பட்டவர்கள், இவர்களில் எவரும் சேனநாயக்கவுடன் ஒப்பிடக்கூடிய வெற்றியை எட்டவில்லை.

44. பார்க்க யுப் (1978:166-67), கே.எம.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:183)

45. மேலது 186, சேனநாயக்கவிற்கும், ஜயவர்த்தனவிற்கும் கருத்துவேறுபாடுகள் இருந்த போதும் 1970ம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது ஒன்றாக

இணைந்து வேலை செய்தனர். இருப்பினும் 1965ம் ஆண்டு தேர்தலின் போது அவர்கள் காட்டிய குழு ஒற்றுமை உணர்வை 1970ல் வெளிப்படுத்தவில்லை.

46. மேலது: 150-51

47. எனது போரின் படிப்பினைகள்-2 நூலின் அத்தியாயத் தினைப் பார்க்க

48. பார்க்க கருணாதிலக ( 1987:64)

49. பாலகிருஷ்ணன் 1977::207), the state of the economy நூல் (1965-66 வரவு செலவுத் திட்டம் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

50. கருணாதிலக (1987:73)

51. மேலது 66, மூவர் (1985 குறிப்பாக அத்தியாயம் 4,5) நெற்காணிச் சட்டம், நெல்லிற்கான உத்தரவாத விலைத்திட்டம், பயிர்க்காப்புறுதி விவசாய விஸ்தரிப்புச்சேவைகள் விவசாயக் கடன்திட்டம், விதைநெல்,பசளை என்பவற்றிற்கான மானியம் என்பன இவற்றுள் அடங்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்களை அனுதாபத்துடன் நோக்குபவரான கருணாதிலக கொள்கை இலக்குகளை அடைய முடியவில்லை என்றும் “திறமையற்ற கொள்கை முடிவுகளும் பலவீனமான நிர்வாக ஒழுங்கமைப்பும்“சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடையே இருந்தனர் என்றார்

52. பார்க்க கே.எம்.டி சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:73)

53. பீபிள்ஸ்( 1982:122-23 மற்றும்130 -131) தரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

53. பார்க்க கே.எம்.டி சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:173), கருணாரத்ன (1987:67)

55. பார்க் வாந mahaweli ganga irrigation and hydro power survey. யூஎன்.டி.பி, எவ்.ஏ.ஓ.இலங்கை அரசு என்பன இணைந்து வெளியிட்ட அறிக்கை (1969 :மகாவலித் திட்டம் பற்றிய பின்னணித் தகவல்கள் பிரசுரிக்கப்படாத வாந அயபயஎயடை நநளநடழிஅநவெ சநிழசவ (1990)ல் உள்ளன. இது அண்ட்ரூடெய்லி என்பவரால் எழுதப்பட்டது தற்போது உள்ள நூல்களில் முல்லர் மற்றும் கெட்டிகே (பதிப்பு) (1995)முழுமையான ஒரு ஆய்வாக உள்ளது.

56. பண்டை நகரமான கண்டிக்கு அப்பால் உயரத்தேயுள்ள மலைகளிலிருந்து ஊற்றெடுக்கும் மகாவலி சமவெளியூடாக வரண்ட பிரதேசத்தை கடந்து சென்று திருகோணடலைக்கு அருகே இந்து மா கடலில் கலக்கியது. அது 206 மைல் நீளமுடையது இலங்கையின் 15 வீத தரைப்பரப்பின் ஊடாக செல்கிறது. இலங்கையின் நதிகளில் ஓடும் நீரின் 20 வீதத்தைக் கொண்டது. மகாவலியின் நீரியக்கவியல் பண்புகள் அதனை புவியீர்ப்பின் அடிப்படையிலான பாசனத்திற்கு மிகவும் சிறந்ததொன்றாக ஆக்கியுள்ளது.

57. டெய்லி (1990:2) சூவம்சம் 63:6-16 மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

58. பார்க்க நிக்லஸ் 1955:66-67) முதலாம் பராக்கிரமபாகு மன்னன்165 அணை களையும், 3910 கால்வாய்களையும், 2376 சிறிய குளங்களையும் கட்டினான் அல்லது திருத்தி அமைத்தான். என்று கூறப்படுகிறது. இலங்கையில் ஆற்று நீர்ப்பாசனத்திற்காக முதன்முதலாக அம்பன் கங்கை ஆற்றினை திருப்பும்

வேலை கி.பி 65 காலத்தில் நடந்தது.

59. கே.எம்.டி சில்வா மற்றும் றிஜின்ஸ்(1994:174)

60. டெய்லி ( 1990 பின் இணைப்பு 11,2)

61. பார்க்க கருணாதிலக (1987:64) அரசாங்கத்தின் state of economy (1966,1967)

62. கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:168) மனோ் (1989) குறிப்பிட்டது போல் லண்டன் பொருளியல் பள்ளியில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கல்விகற்ற பெரும்பாலான இலங்கையர்கள் இடது சாரிச் சார்புள்ள பாடத்திட்டத்தைப் பயின்றனர்.

63. கே.எம்.டி சில்வா மற்றும் றிஜின்ஸ் நூலில் (1994:168-71) செனாய் சிபார்சுகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

64. பார்க்க மேலது :164 குறிப்பு 1 தொடக்கத்தில் பிரதமர் இராஜாங்க அமைச்சு, நிதியமைச்சர் ஆகியோர் உப குழுவில் பணியாற்றினர். செல்வாக்கு மிக்க பொருளியலாளரான காமினி கொரயா உப குழுவின் செயலாளராகப் பணி யாற்றினார்.இக்குழுவில் வர்த்தக வாணிப அமைச்சர் இடம் பெறவில்லை என்பது சுவாரசியமானதொரு விடயம்.

65. குணவர்த்தன மீன்பிடி அமைச்சராகவும் பணியாற்றினார்.

66. பார்க்க கே.எம்.டி சில்வா மற்றும் றிஜின்ஸ் (1996:176)

67. பார்க்க கருணாதிலக்க (1987:111)

68. புதிய கொள்கைகள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உயர்த்தியபோதும், சில முதலீட்டாளர்கள் அரசாங்கக் கொள்கையில் இன்னொரு திருப்பம் மீண்டும் வரலாம் எனக்கருதி இலங்கையில் இருந்து மூலதனத்தை வெளியே கொண்டு சென்றனர். சாதகமான நிலமையைப் பயன்படுத்தி அவர்கள் மூலதனத்தை வெளியே கொண்டு சென்றனர்.

69. பார்க்க நெய்லர்(1966)

70. பார்க்க கருணாதிலக்க (1987: 234,6) இலங்கையில் ரெயில் சேவை ஒரு அரசாங்கத் திணைக்களமாகச் செயற்பட்டது. திணைக்களத்திற்கான மூல தனமும், மானியங்களும் திறைசேரியால ஆண்டு தோறும் "கடனாகக்" கொடுக்கப்பட்டன. ஆனால் இக்கடன்கள் திருப்பிச் செலுத்தப்படவில்லை. 1953றகும் 1971இற்கும் இடையில் ரெயில்வே கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்போக்குவரத்தை நடத்தியது.1953 முதல் 1967 வரை இது தொடர்ச்சியாக இலாபத்தில் செயற்பட்டுவந்தது. அதன் ஆளணி நாடு முழுவதும் பரவியிருந்ததால் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்களை நியமிப்பதில் குறியாகச் செயற்பட்டனர்.

71. பார்க்க பாலகிருஷ்ணன் (1977:199)

72. பார்க்க கருணாதிலக்க (1987:149) இக்காலத்தில் கைத்தொழில்களில் அரச முதலீடு 483மில்லியன் ரூபாவில் இருந்து ரூ 1200 மில்லியன் ஆக ( நிலையான விலைகளின் படி ) உயர்ந்தது.

73. 1963ல் 13 அரசாங்கக் கூட்டுத்தாபணங்கள் உற்பத்தியில் ஈடுபட்டன. 1967 முடிவில் அரச கூட்டுத்தாபகங்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்தது.

74. பார்க்க கருணாதிலக்க (1987:149) மற்றும் பாலகிருஷ்ணன் (1977:199,202)

75. பீபிள்ஸ் (1982:351, அட்டவணை VIII.8) தரும் தகவல்கள்

76. மேலது 189 அட்டவணை XI,5 இல் உள்ள தகவல்கள்

77. மேலது 216 அட்டவணை XII.8

78. மேலது 251-52 அட்டவணை XIII.7

79. திருமதி பண்டாரநாயக்க தனது ஆட்சிக் காலத்தில் ஐந்து வருடங்களில் 117 மில்லியன் ரூபாய்களைப் பெற்றார். டட்லி சேனநாயக்க தமது 5 வருட ஆட்சியில் 159 மில்லியன் ரூபாய்களைப் பெற்றார். இது 35 வீத உயர்ச்சி ஆகும். இருப்பினும் முன்னர் குறிப்பிட்டது போல் அரசாங்கம் ரூபாவின் பெறுமதி 4.78 இல் இருந்து 5.93 டொலர்களுக்கு உயர்த்தியது. இதனால் அந்நிய உதவிவழங்குவோருக்கு குறைந்த அளவாக இது இருந்தது. அத்தோடு சர்வதேச சந்தையிலும் உதவியின் பெறுமதி குறைவாக இருந்தது. 1965இன் மாறா டொலர்ப் பெறுமதிப்படி கணக்கிட்டால் திருமதி பண்டாரநாயக்க அரசாங்கத்தை விட டட்லி சேனநாயக்க அரசாங்கம் 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியைக் கூடப் பெற்றது. இது 16 வீத உயர்ச்சி மட்டுமே.

80 பார்க்க கருணாதிலக்க(1987:351)

81 பார்க்க யுப் (1978 :360: உணவு மானியம் வானிலை, சந்தை நிலமைகளுக்கேற்ப ஆண்டுக்கு ஆண்டு ஏறி இறங்கிச் செல்வதால் ஒரு அரசாங்கத்தின் முழுக்காலத் துக்குமான மாற்றத்தையும் ஒவ்வோராண்டுக்கான மாற்றங்களையும் கணக்கிட வேண்டும்.

82 அரசாங்க செலவுகள் பற்றிய தரவுகளிற்கு பீபிள்ஸ் (1982:அட்டவணை XIII.5) வீதாசாரங்கள் 1965 ன் நிலையான விலைக்கு மாற்றிக் கணக்கிடப்பட்டன.

83 சேர் ஜோன் கொத்தலாவல ஆட்சியின் இறுதிஇரு வருடங்களிலும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 வீதமாகும். 1965 ல் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30 வீதமாகும்

84 நெல்சன் மற்றும் பிறர் (1989 அமைப்பியல் சீராக்கத்தின் அரசியல் பொருளாதார பரிமாணங்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

85 கடன்வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் அழுத்தத்தினால் அரசாங்கம் துரிதமாக சீர்திருத்த நடவடிக்கைகளை திணிக்கும் போது ஆய்வாளர்கள் அதனை "அதிர்ச்சி வைத்தியம" என அழைப்பதுண்டு.

86 பார்க்க: அரசாங்க வெளியீடான state of the economy (1967-1970). 1967ம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் உயர்ந்தன. பத்தாண்டு இடைவெளியில் முதற்தடவையாக இந்த சம்பளவேற்றம் நிகழ்ந்தது. அந்நியச் செலாவணி விகிதத்தை மாற்றியமைத்ததற்கான நிவாரணமாகவும் இது அமைந்தது. எழுதுவினைஞர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரங்களில் உள்ளோருக்கு 10.8 வீதமும், சிற்றூழியர் தரத்தினருக்கு 20.9 வீதமும், ஆசிரியர்களுக்கு 10.4 வீதமும் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. 1969இலும் 1970 இலும் தேர்தலுக்கு முந்திய மேலதிக சம்பள உயர்வுகள் ஆசிரியர் களுக்கும் ஏனைய பல உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன.

88 பீரிஸ் (1982:107 அட்டவணைஏஜ.7)தரும் விபரம் இவை நடைமுறை விலைகளில் இருந்து 1965 ன் அடிப்படை மதிப்புகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. இத்திருத்தம் மேற்சொன்ன விதிமுறைகளின் படி செய்யப்பட்டுள்ளன. "விவசாயம்" என்பதில் தேயிலை,இறப்பர் என்பவற்றைப் பயிரிடுதலும், அவற்றின் உற்பத்திகளை பதனிடலும் அடங்கும்.இவை போன்றே தெங்குப்பொருட்கள் உற்பத்தி பதனிடலும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.நெல் உற்பத்தித் துறையின் கூலிகள் விவசாயத்துள் சேர்க்கப்படவில்லை. நெல் உற்பத்தியாளர் பெரும்பாலும் சிறு முயர்ச்சியாளர் களாகவே செயறப்பட்டனர். அவர்களின் வருமானம பிழைப்பூதிய மட்டததை விடச்சிறிது உயர்வாக இருந்தது.

89 ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் தேர்தல் நெருங்கும் சமயத்தில் வேதனம உயர்த்துதல் இலங்கையில் வழக்கமான ஒரு விடயமாக இருந்தது. பொதுத் துறை வேதனஉயர்வுகள் பற்றிய விபரங்கள் மத்திய வங்கியின் பொருளாதார நிலை பற்றிய அறிக்கையில் உள்ளன. எழுதுவினைஞர் தொழில் நுட்ப உத்தியோகத்தர், "சிற்றூழியர்" ஆகிய தரங்களில் உள்ளவர்களின் வேதன உயர்வுகள் பற்றிய விபரங்கள் இவ்வறிக்கையில் உள்ளன. 1967,1969,1970 ஆகிய ஆண்டுகளின் அறிக்கையில் இந்த உள்ள தரவுகள் பகுதியை நான் எழுதிய போது பயன்படுத்தப்பட்டன.

90 இப்பகுதியிலுள்ள விளக்கங்களிற்கான தகவல்கள் கருணாதிலக்க (1987:அத்தியாயம் 10) பீபின்ஸ் (1982 அத்தியாயம் 6)என்பவற்றில் இருந்து எடுக்கப்பட்டு என்னால் தொகுக்கப்பட்டவை. இப்புள்ளிவிபரங்கள் அரசாங்க மதிப்பீடுகளின் படியானவை எனினும் வாசகர்கள் இவற்றைக் குத்துமதிப்பான கணிப்புக்கள் என்றே கருத வேண்டும். நான் இந்தப் புள்ளிவிபரங்களை பொதுவான போக்குகளின் பயனுள்ள குறிகாட்டிகளாகவே கொள்கிறேன். இப்புள்ளிவிபரங்கள் இலங்கையின் வேலையின்மைப் பிரச்சினையின் தீவிரத் தன்மையை சரியாக எடுத்துக் காட்டவில்லை எனலாம்.

91 State of the economy அறிக்கைகள் 1953, 1963,1968 ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் இங்கே உபயோகிக்கப்பட்டன.

92 வளர்முகநாடுகளில் பிரசுரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் பொதுவாக வேலையின்மைப் பிரச்சினையின் தீவிரத்தைச் சரியாக எடுத்துக் கூறாமல் குறைத்துக் காட்டுவனவாகவே இருந்தன. ஆகையால் உண்மையான வேலையின்மை வீதம் இப்புள்ளிவிபரங்கள் காட்டுவதை விட உயர்வாகவே இருந்தன.

93 1963-1968காலப்பகுதியல் வேலைவாய்ப்புக்கள் ஆண்டுதோறும் 3 வீதத்தால் அதிகரித்துச் சென்றன. ஆனால் 1953-63 காலப்பகுதியில் வேலைவாய்ப்புகள்0.7 வீதமே அதிகரித்தன. 1969 70 காலப்பகுதியில் 1968இற்கும் அதற்கு முன்னரும் இருந்தது. போன்ற அதிகரிப்பைச் செய்ய அரசாங்கத்தால் முடியவில்லை. இருப்பினும் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்துச் சென்ற இவ்விரு ஆண்டுகளிலும் புதிய வேலைகள் கூடியளவு உருவாக்கப்பட்டன என்றே நான் அனுமானிக்கிறேன்.

94 பீபிள்ஸ் (1982:54,அட்டவணைIII.7). 1965 முதல் 1970 வரை மருத்துவர்களின் 3642இலிருந்து 5542 ஆகவும் வைத்தியசாலைக் கட்டில்கள் 33802 ல் இருந்து37753

ஆகவும் அதிகரித்தன.

95 பார்க்க The Hunger project (1985:17குறிப்பு 12)

96 விஞ்ஞானம்,பொறியியல் போன்ற பட்டதாரி நிலைப் பாடநெறிகள் மட்டும் பிரதான விதிவிலக்காக அமைந்தன.

97 செல்வாக்குமிக்கவரான இரிய கொல்ல முன்னர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவின் சிங்கள மகா சபாவின் உறுப்பினராகவும் அவரது தீவிர ஆதரவாளருமாவார்.

98 பார்க்க கே.எம்.டி.சில்வா (1986:202)

99 பார்க்க சி.ஆர்.டி.சில்வா (1977:430)

100 பார்க்க பீபிள்ஸ் (1982:89,அட்டவணை ஏ.4) நைறொப் மற்றும் பிறர் (1971:153,158)இசி.ஆர்.டி.சில்வா(1977:24) மொத்த ஆசிரியர் ஆளணி 90500 ஆக இருந்தது இதில் 1965ல் பட்டதாரி ஆசிரியர்கள் 6735 ஆக இருந்து பின்னர் 7441 ஆக உயர்ந்தது இது 10வீத உயர்வு ஆகும். பயிற்றப்படாத ஆசிரியர்கள் (அரசாங்க விதித்த தராதரப்பரீட்சையில் சித்தி பெறாதோர்) தொகை 28639 இல் இருந்து 13450 ஆகக் குறைநதது .இது எண்ணிக்கையின் 50 வீதம் வீழ்ச்சியாகும்.

101 அக்காலத்தில் அரசாங்கத்தின் உயர்தலைவர்கள் பெரும்பான்மையினர் மிகச்சிறந்த பாடசாலைகளில் ஒன்றில் படித்தோராய் இருந்தனர். இதனால் அவர்களுக்கு சலுகைகள் காட்டப்பட்டன. இது வியப்புக்குரியதன்று

102 புார்க்க சி.ஆர்.டி.சில்வா (1977:427-28) இச்சபையில் ஆளுநர் நாயகத்தினால்

103 பிரதமரின் சிபார்சுப்படி நியமிக்கப்பட்ட தவிசாளர் ஒருவரும் வேறு 8 உறுப்பினர்களும் அங்கம் வகித்தனர். அத்தோடு கல்வி அமைச்சின் பிரதிநிதிகளும், 4 பல்கலைக்கழகங்களின் உப வேந்தர்களும் இச்சபையில் உறுப்பினராக இருந்தனர்.

104 ஐக்கிய இராச்சியத்திலும்,பொதுநல அமைப்பு நாடுகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள் □உபவேந்தர்□ என அழைக்கப்பட்டனர். இலங்கையில் அரசுத் தலைவரான ஜனாதிபதி தற்போது எல்லாப் பல்கலைக்கழகங்களில் □வேந்தராக□ உள்ளார்.இருப்பினும் அவருக்கு நிர்வாகத்தில் நேரடிப்பங்கு இல்லை.

105 பார்க்க சி.ஆர்.டி.சில்வா (1977:422-23)

106 இது பற்றிய புள்ளிவிபரங்களை நான் மேலது:423 அட்டவணை 8 இல் பெற்றுக்கொண்டேன்.

107 மேலது:430

## அத்தியாயம் 02

1. பார்க்க யேமஸ் யுப் (1978:46) யோர்க் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரா கவிருந்த யேமஸ்யுப் இந்நூலை 1978இல வெளியிடுவதற்கு ஏறக்குறைய 20

ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருந்தார். 1956இல அவர் இலங்கைக்கு முதன் முதல் வந்து போனார்.

2. மேலது 49, சேனநாயக்க "ஜயவர்த்தன-விஜயவர்த்தன-கொத்தலாவல-பண்டார நாயக்க-ரத்வத்த".ஒபயசேகர-மைதிரிபால சிறிசேன ராஜபக்ஷ ஆகிய குடும்பங்கள்.

3 ரணசிங்க பிரேமதாச: இவர் தெற்கின் வறிய குடும்பம் ஒன்றில் பிறந்தவர் பெரிய குடும்பங்களுடன் அரசியல் தொடர்பு இல்லாதவர் சாதியில் குறைந்த அந்தஸ்து உடைய பின்னணியில் தோன்றியவர். இலங்கையில் குடுமப ஆதிக்க அரசியலை உடைத்து ஜனாதிபதியாக 1988ல வந்தார்.1993 படுகொலை செய்யப்பட்டார்.

4. கொல்வின் ஆர்.டி.சில்வா (சமசமாஜக்கட்சி) பீற்றர் கெனமன் (கம்யூனிஸ்ட் கட்சி) ஜே.ஆர்.ஜயவர்த்தன (ஐக்கிய தேசியக் கட்சி) ஆகிய சுதந்திரத்துக்கு முந்திய மூன்று தலைவர்கள் அரசியலில் 1988 இலும் உயிர்ப்போடு செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள் அவ்வாண்டின் இறுதியில் ஜயவர்த்தன அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார். திருமதி பண்டாரநாயக்க மேற்சொன்னவர்களை விட அரசியலுக்குப் பிந்தி வந்தவர். 1994 இல் பொதுத்தேர்தலில் நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதை இவர் விரும்பினார்.

5. மேற்கு மாகாணமும் கொழும்பு நகரை அண்டிய பகுதிகளும, கண்டிச் சிங்களவர்கள், அதிகம் வாழும் கண்டி மாகாணம் வடமத்திய மாகாணங்களும் சேர்ந்து இலங்கையின் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்களர்களில் 60 வீதத்தைக் கொண்டுள்ளனர். 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் இவ்வாக்காளர்களால் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 61 வீதத்தினரைத் தெரிவு செய்ய முடிந்தது.

6. பார்க்க வில்சன் (1975:141).அசோசியேட்டட் நியுஸ் பேப்பேர்ஸ் குறுப் (லேக்கவுஸ்) சிங்களத்தில் இரண்டு, ஆங்கிலத்தில் இரண்டு, தமிழில் ஒன்று என்ற கணக்குப்படி ஐந்து தினசரிப் பத்திரிகைகளை வெளியிட்டது. இவை ஐந்தினதும் சுற்று 273,893 ஆகும். இதனை விட நான்கு வாராந்த பத்திரிகைகளையும் லேக்கவுஸ் குழுமம் வெளியிட்டுது. சிங்களத்தில் ஒன்று, ஆங்கிலத்தில் இரண்டு, தமிழில் ஒன்று என்ற கணக்குப் படியான இந்த ஐந்து பத்திரிகையின் சுற்று 33,853 479,126 ஆகும். டைம்ஸ் குருப் மூன்று தினசரிகளை வெளியிட்டுது. ஆங்கிலத்தில் இரண்டும்இ சிங்களத்தில் ஒன்றும்இ என்ற எண்ணிக்கையுடைய இத்தினசரிகளின் மொத்த சுற்று 83,853ஆகும். டைம்ஸ் குருப் வெளியிட்ட சிங்கள வாரப்பத்திரிகை ஒன்றும, ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றும் மொத்தச் சுற்று 162,706ஐ கொண டிருந்தன.

7. மேலது:141, 152ஆங்கிலத் தினசரியான,சன்6800இ சிங்களத் தினசரியான தவச 58,670,, தமிழ்த்தின சரியான தினபதி 12100 என்ற அளவில் மொத்தச் சுற்றினைக் கொண்டிருந்தன. என வில்சன் குறிப்பிடுகிறார். இக்குழுமத்தின் சிங்கள தமிழ் வாராந்தப் பத்திரிகைகளின் சுற்று எவ்வளவு என்ற விபரம் கிடைக் கவில்லை.

8. மேலது 157,அத்த பத்திரிகை 40,000-50,000 சுற்றினை கொண்டிருந்துத ஜனதின 20,000-30,000 வாசகர்களைச் சென்றடைந்தது.

9. பார்க்க யுப் (1978:163)

10. மேலது 113. பலமணித்தியாலங்கள் நீடிக்கும் அரசியல் பேரணிகளை நடத்துதல் இலங்கையில் ஒரு மரபாக இன்று வரை நீடித்துள்ளது. இப்பேரணிகளில் மகிழ்வூட்டும் கலை நிகழ்ச்சிகள்இ அறிவூட்டல் நிகழ்வுகள்இ சமய வழிபாடுஇ அரசியல் பேச்சுக்கள் என்பன இடம் பெறும் ஜனாதிபதி றணசிங்க பிரேமதாச பேரணிகளை நடத்துவதில் திறமைசாலியாக இருந்தார்.

11. மேலது.

12 மேலது: 94,இப்புள்ளி விபரங்கள் தோட்டத் தொழிலாளர்களையும், பிரிந்து போயுள்ள சிறு சிறு கட்சிக் குழுக்களின் உறுப்பினர்களையும் உள்ளடக்க வில்லை. ஐக்கிய தேசியக்கட்சி 120.000 உறுப்பினர்களையும்இ சிறிலங்கா சுதந்திரக்கட்சி 60,000 உறுப்பினர்களையும், சமசமஜக்கட்சி 25.000 உறுப்பினர் களையும் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. கட்சி உறுப்பினர் தொகை, வாக்களித்தோர் தொகை என்ற விபரங்களின் தொடர்பு பெரும்பாலன ஐரோப்பிய நாடுகளை ஒத்தனவாக இருந்தது.

13. மேலது 95. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு கைச்சின்னம்இ ஐக்கிய தேசியக் கட்சிக்கு யானைச் சினனம்இ கமயூனிஸ்ட் கட்சிக்கு நட்சத்திரம்இ சம்ஷ்டிக் கட்சிக்கு வீடு என்றவாறு பிரதான கட்சிகளின் சின்னங்கள் ஒதுக்கப்பட்டன. பிரதான கட்சிகளின் சின்னங்கள் இலங்கையின் பண்பாட்டின் முக்கிய இயல்பு களை குறிப்பிடுவனவாய் இருந்தன. தமிழர்களை தோற்கடித்த துட்டகைமுனு என்ற வீரனின் அடையாளம் யானை. கௌத புத்தரைக் குறிப்பதாக கை அடையாளம் விளங்கியது.

14. இதற்குப் பிரதானமாக யுப் (1978:109) ஆதரமாகக் கொள்ளப்படுகிறார். இதே போன்ற குறிப்புகளை இலங்கையின் கட்சி முறை பற்றி எழுதிய கல்வின் வூட் வாட் (1979) தருகிறார். இருப்பினும் வுட் வாட் இன்நூலில் ஐக்கிய முன்ன ணியின் தோற்றம், 1970இன் பொதுத்தேர்தல் என்றும் விடயங்களை உள்ளடக கப்படவில்லை.

15. பார்க்க மேலேயுள்ள குறிப்பு. அத்தோடு கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:184)ஐ பார்க்கவும்.

16. பார்க்க வில்சன் (1974:137) மற்றும் கே.எம்.டி.சில்வாஇறிஜின்ஸ் (1994:187,188)

17. இளம் வயதினரான காமினிதிசநாயக்க தேயிலைத் தோட்டப் பகுதியான நுவரெலியாவில் 1970 இல் போட்டியிட்டா. இவர் பின்னர் யே.ஆர்.ஜயவர்த்தனவின் அமைச்சரவையில் மிகமுக்கியமான உறுப்பினராகவிருந்தார்.

18. பார்க்க கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ்(1994:187)

19. பார்க்க யுப் (1978:62,126)

20. மேலது 147-51இகே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ்(1994:146,166)

21. பார்க்க யுப்(198:155-56)திருமதி பண்டாரநாயக்கவின் அமைச்சரவையில் ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றியின் பின் மொகமட் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் இவ்வாட்சிக்காலம் முழுவதும் அமைச்சராகத் தொடர்ந்து பதவிவகித்தார்.

22. பார்க்க மேலது:109,125 எனது முன்னைய தமிழ் நூலில் (போரின் படிப்பினைகள் -3நம்பிக்கையின் மலர்ச்சி) எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க மார்க்சிய

கட்சியுடன் இணைந்து வேலைசெய்வதற்கு நிலமானிய உடைமையாளர்கள் எவ்வாறு தடங்கலாக இருந்தனர் என்பது விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. பார்க்க மேற்படி நூலின் மூன்றாம் அத்தியாயம்.

23. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பீட்டர் கெனமன் இந்தப் பாதுகாப்பான தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார்.

24. பார்க்க யுப் (1978:95,105,106) கட்சித் தலைவர் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் சொந்த மாவட்டம் மாத்தறை ஆகும். எஸ.டபிள்யு.ஆ.டி.ஏ.சமரசிங்க சர்வசன வாக்குரிமை 1931-1981(1981:208) பற்றிய ஆய்வில் ஒவ்வொரு கட்சியும் எந்தெந்தப் பகுதிகளில் பலமாக இருந்தன என்பது பற்றிய பயனுள்ள தகவல்களை வழங்குகிறார்.

25. பார்க்க வில்சன்(1974:147)

26. மேலது எதிர்க்கட்சி பாரளுமன்ற உறுப்பினர்களிடம் நோக்கத்தில் ஒற்றுமை இருநத்தால் "சமாந்தர அரசாங்கம்" என்ற தோற்றத்தை அவர்களால் வழங்க முடிந்தது என்று வில்சன் குறிப்பிடுகிறார்.

27. இந்த நிகழ்ச்சிநிரலை இலங்கையின் மார்க்சியக் கட்சிகள் எதிர்த்தனஇ அவற்றின் வரலாற்றுப் பின்னணி சிறுபான்மையினர் உரிமையை பலமாக ஆதரிப்போர் என்பதாகவே இருந்தது. சட்டத்தில் இவ்விதியை உட்படுத்த எதிர்க்கட்சிகள் எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.

28. பார்க்க வில்சன் (1975:40)

29. கே.எம்.டிசில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:187) வில்சன் (1974:147) வில்சன் (1975:95) ஆகியன பொது வேலைத்திட்டம்" குறித்த விபரங்களைத் தருகின்றன

30. மேலது:131-2 மற்றும் யுப் (1978:71-72இ125) ஐக்கிய முன்னணியின் பெரிய வெற்றியுடன் தீவிர இனவாதம் விரைவாக தலைதூக்கியது.

31. பார்க்க சந்திரபிரேம (1989:97) இவர் தென்பகுதியில் சனத்தொகையின் அழுத்தம்இ பொருளாதார தேக்கநிலை என்பன காரணமாக பொருளாதார நிலைமைகள் மோசமாகிச் செல்வதை விபரித்துள்ளார். 1962க்கும் 1973க்கும் இடையில் காணியின் உடைமை காலியில் சராசரி 2.07ஏக்கரில் இருந்து 1.73 ஏக்கராகவும்இ மாத்தறையில் இது 2.44 ஏக்கரில் இருந்து 2.06 ஏக்கராகவும் குறைந்துத என அவர் குறிப்பிடுகிறார். விவாசயத்துறையில் வேலையில் உள்ளோரின் விவசாயக் கூலிகள் காலியில் 48.7 வீதமாகவும், மாத்தறையில் 44.3 வீதமாகவும் இருந்தனர் என்றும் அவர் குறிப்பிடுகிறார். கொழும்பில்22 வீதமாகவும், யாழ்ப்பாணத்தில் 15வீதமாகவும் இவ்வீதம் இருந்ததை ஒப்பிட்டும் காட்டுகிறார். இலங்கையில் மழை வீழ்ச்சி அதிகமாயிலும் நிலத்ததடி நீர் போதியளவு இன்மையால் யாழ்ப்பாணத்தைப் போன்ற செறிவான பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியவில்லை. யுப் (1974:299)ஐயும் பார்க்க.

32. மேலது 153 மற்றும் வில்சன் (1974:192)

33. நிசங்க 1984:154) சேனநாயக்கவின் ஏப்ரல் 1965 பேச்சு மேற்கோள் காட்டப்பட்டது.

34. பார்க்க கொடிக்கார (1982:123,126) கே.எம்.டிசில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:164)

35. பார்க்க ஆர்.குணரத்தின(1990:1) சந்திரப்பிரேம(1991:21) விஜயவீரவின் தந்தை

கம்யூனிஸ்டுகளுக்கும் ஐக்கிய தேசிய கட்சியினருக்கும் இடையே நடைபெற்ற மோதல் ஒன்றில் படுகாயம் அடைந்தார். பின்னர் படுத்த படுக்கையாகவே இவர் நோயாளியாக இறக்கும் வரை இருந்தார்.

36. கம்யூனிஸ்ட் கட்சிக்கு (பீக்கிங் பிரிவு) என்.சன்முகதாசன் என்ற தமிழர் தலைவராக இருந்தார் என்பது சுவாரசமான விடயம்.

37. வில்சன் (1974:162-163)

38. மேலது :163 விஜயவீரவின் தலைமையிலான அரசாங்கத்திற்கு கம்போடியாவின் பொல்பொட் அரசாங்கம் ஒரு மாதிரியாக இருக்கும் என்று அங்சியதாகச் சில இலங்கையர்கள் தெரிவித்தனர்

39. புா்க்க யுப் (1978:297-300)

40. பார்க்க நிசங்க (1984:154)

41. பார்க்க யுப் (1978:302)

42 தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரவாதத்தின் எழுச்சியை பற்றி எந்த நூலிலும் இத்தகைய தோற்றப்பாட்டினை 1970க்கு முன்னர் காணக்கூடியதாக இருந்ததைக் குறிப்பிடவில்லை. உதாரணம் பியதாச (1984 அத்தியாயம் 3உம் 4உம் பொன்னம்பலம் (1983:அத்தியாயம் 4உம் 5உம்)

43 இக்காலத்தில் இந்தியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகத் தாம் வடமேற்குப் பகுதிக்கு அக்காலத்தில் ஒழுங்காக போய்வந்ததாகவும் அங்குள்ள கள்ளச் சந்தையில் இப்பொருட்கள் கிடைத்ததாகவும் கொழும்பில் உள்ள நண்பர்கள் எனக்குக் கூறினார்

44 கோ்ணி (1971:109)இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிக்கை 1965-66என்ற நூலில்இருந்து 3000என்ற எண்ணிக்கைலே மேகோள் காட்டுகிறார்.

45 எதிர்க்கட்சிகளுடன் இணைந்து கொள்ளாத பலம்வாய்ந்த தொழிற்சங்கங்கள் பல வேலை நிறுத்தத்தில் சேர்ந்து கொள்வதில்லை என்று முடிவு செய்தன.

46 கோ்ணி (1971:108-11இ139இ147-52)

47 மேலது: 146-147இணைந்து வேலை செய்தனர். இருப்பினும் 1965ம் ஆண்டு தோ்தலின் போது அவர்கள் காட்டிய குழு ஒற்றுமை உணர்வை 1970ல் வெளிப்படுத்தவில்லை.

46. மேலது: 150-51

47 மேலது: 146-147

48 பெரும்பாலன பத்திரிகைகள் ஐக்கிய தேசியக் கட்சியையே ஆதரித்தன என்பதை வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துதல் நல்லது. மேலும் டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசாங்கத்தை விமர்சிக்கும் எந்தவொரு விடயத்தையும் பிரசுரிப்பதற்கும் அவை தயாராக இருக்கவில்லை.

49 மார்ச் 1960இயூலை1960 ஆகஷ்ட்1955இ மே1956இ ஒக்டோபர்1953 பெப்ரவரி 1954 ஆகிய மாதங்களில் அரசின் ஆதரவுடனான வன்முறை கீழ்மட்டத்தில் இருந்தது. முந்திய எனது நூலில் (போரின் படிப்பினைகள் -03நம்பிக்கையின் மலர்ச்சி) குறிப்பிட்டது போல் சுதந்திரத்திற்குப் பிந்திய தொடக்க வருடங்களில் அரச ஆதரவு வன்முறை மிகவும குறைந்த சுட்டியாக ஐ என்ற மட்டத்தில்

இருந்தது.

50 பார்க்க வில்சன் (1975:36)

51 அவசரகால நிலைமையின் தொடக்க மாதங்களில் அரசாங்கம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டது. பிரதமர் அப்போது ஐக்கிய அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் பயணம் மேற்கொண்டிருந்தார்.இதனால் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் கையில் அதிகாரம் இருந்ததும் அரசின் கடும் போக்கிற்கு காரணமாகவிருக்கலாம்

52 கோ்ணி(1973:198)

53 பார்க்க நைறொப்பும் பிறரும் (1971:449)1968 ஜனவரி மாதத்தில் 22 சந்தேக நபர்கள் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணையின் இடைநடுவே 10பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டன. எஞ்சியோர் 1970 ஜனவரி மாதத்தில் யூரர் சபையின் ஏகமனதான முடிவுப்படி குற்றச் சாட்டுக்களில் இருந்து விடுக்கப்பட்டனர்.

54 நியுயோர்க் டைம்ஸ்இ ஜனவரி 28இ1968

55 சிலோன் டெய்லி நியூஸ் மே3,1969 15பேர் கைது செய்யபட்டதாக செய்தி வெளியானது ஆயினும் இதனை விட கூடிய தொகையினர் கைது செய்யப் பட்டிருக்க வேண்டும்.

56 பார்க்க யுப்(1978:311)மற்றும் டெய்லிமிரர்இ கொழும்பு பெப்ரவரி 28,1970 கொழும்பு ஹைட் பார்க்கில் நடந்த பேரணி ஒன்றில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய விஜயவீர பின்வருமாறு கூறினார். ஆயுதப்படைகள் எம்மை ஆத்திரமடையச் செய்தால் நாம் திருப்பித் தாக்குவோம் இவர் எம்மைச் சதி செய்வதாக குற்றம்சாட்ட முயற்சிக்கிறார்கள். நாங்கள் சதிகாரர் அல்ல. எம்மைத் தலைமறைவு வாழ்க்கைக்கு கட்டாயப்படுத்த வேண்டாம் என அரசைக் கோருகிறோம். என்று எமது குழுவைத் தடைசெய்கிறார்களோ அன்று புரட்சி வெடிக்கும். ஏனென்றால் எமக்கு மாற்று வழி எதுவும் இல்லை.

57 மேலது:317

58 இது பற்றிய விரிவான விளக்கம் நைறொப் மற்றும் பிறர்(1971) றொஸ் மற்றும் சவடா (1990) ஆகியவற்றில் காணலாம். தேசிய பாதுகாப்புப் பிரச்சினை இராணுவம், பொலிஸ் ஆகிய நிறுவனங்கள் என்பனவற்றுக்காக ஒரு அத்தியாயம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் வாழ்க்கைச் சரித்தை எழுதிய கே.எம்.டி.சில்வா "இலங்கையில் ஆளுகைபற்றிய சிக்கல் கள்" என்றும் ஆய்வில் தேசிய பாதுகாப்பு என்னும் விடயத்தை ஒரு அத்தி யாயத்தில் ஆராய்கின்றார். இந்த விபரிப்பில் டட்லி சேனநாயக்க அரசாங்கம் பற்றி ஒரு வசனத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

59 பார்க்க கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (1994:156)அத்தோடு விசேடமாக கே.எம்.டி.சில்வா (1986:203இ271)

60 பார்க்க யுப் (1978:245)

61 பார்க்க கே.எம்.டி.சில்வா 1993டி:347)

62 மேலது:357

63 நைரொப் மற்றும் பிறர் (1971:452) நைரொப் கூறுவதன் படி ஆணைக்குழுவின் அறிக்கை 1960 க்களின் பிற்பகுதியில் வெளியானது. ஆனால் 1970ன் முற்பகுதிவரை இது பரவலாகக் கிடைக்கக் கூடியதாய் இருக்கவில்லை. என்னால் ஒரு பிரதியைப் பெற முடியவில்லை.

64 மேலது:455 ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையின் கட்டமைப்பு மாற்றப்பட்டது: அத்தோடு ஆட்களை விசாரித்துத் தெரிவு செய்வதிலும் புதுமுறை கடைப்பிடிக்கப்பட்டது. பொலிஸ் பயிற்சிக் கல்லூரியை களுத்துறையில் இருந்து கொழும்பு நகரின் தெற்கு கரையோரப் பகுதிக்கு அரசு மாற்றியது. அதன் பாடத்திட்டத்தையும் மறுசீரமைத்தது.

65 மேலது:454. பொலிஸ் மா அதிபரின் 1966-67 ஆண்டுக்குரிய அறிக்கை மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஏப்ரல் 1967 இல் பௌத்த புது வருட (வெசாக்) கொண்டாட் டங்களின் போது 3000 பொலிஸ்காரர்களைக் கொழும்பு நகரில் சனக் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவற்காக ஈடுபடுத்தியதாக இவ்வறிக்கை கூறியது. அவ்வேளை கொழும்பு நகரில் சேவையில் இருந்த ஆளணி மட்டம் 2600 ஆகும். ஆனால் உண்மையில் சேவையில் இருந்தோர் இத்தொகையை விடக்குறைவாகும்.

66 தவச,யூன் 6,1968.

67 நைரொப் மற்றும் பிறர்(1971:468)

68 1966 ஆம் ஆண்டில் தமிழ்மொழி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கும் பொலிசுக்கு உதவியாக இராணுவமும் அழைக்கபட்டது. இதேபோன்று 1969பெப்ரவரியில் மாணவர் வேலை நிறுத்தம் டிசம்பர் 1969 இல் கொழும்பு திருகோணமலை துறைமுக வேலைநிறுத்தம் என்பனவற்றின் போதும் பொலிசுக்கு உதவியாக இராணுவம் அழைக்கப்பட்டது.

69 .இந்தப் புள்ளிவிபரங்கள் நைரொப் மற்றும் பிறர்(1971:468)இல் இருந்து பெறப்பட்டவை. இந்த வானூர்திகள்இ படகுகளில் சிலவே ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பாவனைக்கு ஏற்றதாக இருத்தல் வழக்கம்.

70 இத்தொடரை Bjorkman (1985) உபயோகிக்கிறார் பார்க்க யுப் (1978:241) கே.எம்.டி.சில்வா (1993டி:347)

71 தேர்தல் முடிவுகள் பற்றிய விபரங்கள் என்னால் தொகுக்கப்பட்ட data base இல் இருந்து தரப்பட்டுள்ளன. அதற்கு பின்வருவன துணைசெய்தன. எஸ்.டபிள்யு.ஆர்.டி.ஏ.சமரசிங்க (1981:21821), வில்சன் (1975அத்தியாயம்9) ஜி.பி.எஸ்.எச்.டி.சில்வா (1979) சிலோன் டெயில நியூஸ்இவா த டைம்ஸ், ஒவ் சிலோன், த சன் ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளிலும் "தவச"சிங்களப் பத்திரிகையிலும் தேர்தலின் பின் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகள்.

72 ஐக்கிய முன்னணியின் பிரசாரத் தந்திரம் பற்றிய விபரிப்பு வில்சன் (1974:147) மற்றும் (1975:95) நூல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.

73 மேலது:40

74 வில்சன் (1975:104) மே 18இ1970 டெய்லிநியூஸில் மேற்கோள்காட்டப்பட்டது.

75 ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரம் பற்றிய விபரங்கள் வில்சன் (1975:85) கே.எம்.டி.சில்வா மற்றும் ரிஜின்ஸ (1994:186) என்பவற்றில் உள்ளன.

76 மேலது:105 டெயிலி நியூஸ் மே 25.1970 இதழ் மேற்கோள்காட்டப்பட்டுள்ளது.

77 சமஷ்டிக்கட்சி தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை பொன்னம் பலத்தின் யாழ்ப்பாணத் தொகுதியிலும்இ உடுப்பிட்டியிலும்இ வவுனியாவிலும் தோற்கடித்தது. தமிழ் காங்கிரஸ் வட்டுக்கோட்டையிலும் வேறு இரு தொகுதி களிலும் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணம்இ மன்னார், வவுனியா ஆகிய பகுதிகள் 80 வீதம் தமிழ் பெரும்பான்மையுடையவை.

78 கிழக்கு மாகாணத்தில் சமஷ்டிக்கட்சியின் வாக்குகள் மொத்த வாக்குகளில் 24 வீதத்தில் இருந்து 19ஆகக் குறைந்தன தமிழ்க்காங்கிரஸ் கிழக்கில் போட்டயிடவில்லை.

79 மன்னார் தொகுதியில் சமஷ்டிக் கட்சியின் வேட்பாளர் தோல்வியுற்றார். 59 வீதம் முஸ்லிம்களை கொண்ட இத்தொகுதியில் சமஷடிக்கட்சி தோல்வியுற்றமை முஸ்லிம்கள் ஆதரவு அதற்குக குறைந்து வந்ததையே காட்டுகிறது

**Selected Bibliography**

Amaratunga, Chanaka (1994) *The Failure of the Unitary State in Sri Lanka: A Consideration of Alternatives,*Colombo: Council for Liberal Democracy.

Balakrishnan, N (1977) 'Industrial Policy and Development Since Independence',*Sri Lanka: A Survey,* Ed. by K.M.d Silva, Honolulu: University of Hawaii Press, 192-212.

Chandraprema, Candauda A (1989) *Ruhuna: A Study of the History, Society and Ideology of Southern Sri Lanka.* Nugegoda: Barat Publishers.

Dailey, Andrew (1990) *Mahaweli Development Report,*Unpublished Paper.

de Silva, C.R. (1977) 'Education', *Sri Lanka: A Survey,* Ed. by K.M. de Silva, Honolulu: The University Press of Hawaii, 403-433.

de Silva, Kingsley (1986) *Managing Ethnic Tensions in a Multi-ethnic Society,*Lanham: University Press of America.

— (1993b) 'The Police and the Armed Services', *Sri Lanka: Problems of Governance,* Ed. by K.M. de Silva,Colombo: International Centre for Ethnic Studies (ICES), 347-371.

de Silva, Kingsley M. and W. Howard Wriggins. (1988) *J. R. Jayawardena of Sri Lanka: A Political Biography. Volume One: The First Fifty Years.* Honolulu: University of Hawaii Press.

—(1944) *J. R. Jayawardena of Sri Lanka: A Political Biography. Volume Two: From 1956 to His Retirement (1989).* Honolulu: University of Hawaii Press.

Gunaratna, Rohan, (1987) *War and Peace in Sri Lanka,*Kandy: Institute of Fundamental Studies.

Jupp, James, (1978) *Sri Lanka: Third World Democracy,* London: Frank Cass.

Karunatilake, H.N.S (1973) *Central Banking and Monetary Policy in Sri Lanka,* Colombo: Lake House Investments.

Kearney, Robert N. (1971) *Trade Unions and Politics in Ceylon,* Berkeley: University of California Press.

—(1973) *The Politics of Ceylon (Sri Lanka),* Ithaca: Cornell University Press.

Kodikara, Shelton U (1982) *Foreign Policy of Sri Lanka: A Third World Perspective,* Delhi: Chanakya Publications.

Moore, Mick P (1985) *The State and Peasant Politics in Sri Lanka,* Cambridge, UK: Cambridge University Press.

Nayor, G.W (1966) *Report of the Reconnaissance Mission to Ceylon in Connections with State Industrial Corporations,* Colombo: Ministry of Planning and Economic Affairs.

Nelson, Joan M, et al. (1989) *Fragile Coalitions: The Politics of Economic Adjustments,* New Brunswick: Transaction Books.

Nicholas, C.W (1955) 'The Irrigation Works of King Parakkamabahu I', *The Ceylon Historical Journal4*, 58-76.

Nissanka, H.S.S (1984) *Sri Lanka's Foreign Policy: A Study in Non-Alignment,* New Delhi: Vikas Publishing House, Ltd.

Nyrop, Richard E, et al. (1971) *Area Handbook of Ceylon,* Washington DC: U.S. Government Printing Office for The American University, Foreign Area Studies Program.

Peebles, Patrick (1982) *Sri Lanka: A Handbook of Historical Statistics.* Boston: G.K. Hall & Co.

Ponnambalam, Satchi (1983) *Sri Lanka: The National Question and the Tamil Liberation Struggle,* London: Zed Books.

Richardson, J.M. Jr. (1990) *Sri Lanka Political Data Base 1948-1988,* Unpublished Paper, Available from Author.

Sabaratnam, T (1990) *Out of Bondage: A Biography,* Colombo: Sri Lanka Indian Community Council.

Sri Lankan Government, Various Years, *The Review of the Economy,* Colombo: Economics Department, Central Bank of Sri Lanka.


Wilson, A. Jeyaratnam (1974) *Politics of Sri Lanka,* London: Macmillan.

யோன் றிச்சார்ட்சன் ஆங்கிலத்தில் எழுதிய 'நஞ்சூட்டப்பட்ட சுவர்க்கம்' என்ற தலைப்புடைய நூலின் 9ஆம்,10ஆம் அத்தியாயங்களின் மொழிபெயர்ப்பாக இந்நூல் அமைந்தள்ளது. கண்டியிலுள்ள இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிறுவனம் 2005 ஆண்டில் ஆங்கில நூலைப் பிரசுரித்து *Paradise Poisoned: Learning about Conflict, Terrorism and Development from Sri Lanka's Civil Wars (Kandy: International Centre for Ethnic Studies, 2005)* ஆங்கில நூலை எட்டுப் பகுதிகளாகப் பிரித்து தமிழிலும், சிங்களத்திலும் மொழி பெயர்க்கும் திட்டத்தின் கீழ் 2008ஆம் ஆண்டில் முதலாவது நூலும் 2011 ஜனவரியில் இரண்டாவது நூலும் 2011 இல் மூன்றாவது நூலும் வெளிவந்தன இப்பிரசுரம் இத் தொடரில் நான்காவதாகும். 1965-70 காலத்தின் அரசியல் இந்நூலில் ஆழமாகவும், விரிவாகவும் ஆராயப்படுகிறது.

**போரின் படிப்பினைகள் -1 இலங்கை உள்நாட்டு போரின் செலவுகளும் தாக்கங்களும் பொருளாதார இழப்புகளும் 2008**

**போரின் படிப்பினைகள் -2 நெருக்கடியின் பாதை 2010**

**போரின் படிப்பினைகள் -3 நம்பிக்கையின் மலர்ச்சி 2011**



ஜோன் றிச்சார்ட்சன்: அமெரிக்க பல்கலைக் கழகங்களின் சர்வதேச சேவைக்கான பள்ளியில் சர்வதேச அபிவிருத்தி பேராசிரியராகவும், அதே பல்கலைக்கழகத்தின் கற்பித்தலுக்கான சிறப்பு மையத்தின் இயக்கு நராகவும் பணியாற்றுகின்றார். இதற்கு முன்னர், அரசறிவியல் துறை தொடர்பாய் கேஸ் வெஸ்ரேன் றிசேவ் பல்கலைக்கழகத்தில் பதவி வகித்திருந்ததோடு, இலங்கையிலுள்ள கொழும்புப் பல்கலைக் கழகம் மற்றும் அமெரிக்காவிலுள்ள மசசூட்ஸ் தொழில்நுட்பத்துக்கான நிறுவனம் (MIT) ஆகியவற்றில் வருகைதரு புலமையாளராகவும் இருந்துள்ளார். நூல்களை தனித்தும் மற்றவர்களுடன் இணைந்தும் எழுதியுள்ளார். *Partners in Development (1969), Groping in the Dark: The First Decade of Global Modeling (1982), Ending Hunger: An Idea Whose Time Has come (1985), Democratisation in South Asia: The First Fifty years (1998)*

ISBN 978-955-0762-14-9

SSA

சமூக விஞ்ஞானிகள் சங்கம்
12 சுலைமான் டெரஸ், கொழும்பு 05.

Rs 150/-